மாத்தளை சோமு

# அவன் ஒருவனல்ல



மீனாட்சி
புத்தக
நிலையம்

# அவன் ஒருவனல்ல

மாத்தளை சோமு

**மீனாட்சி புத்தக நிலையம்**
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1

முதற் பதிப்பு : 1989

மீனாட்சி: 227

உரிமை பதிவு

விலை : ரூ. 13-00

MEENAKSHI PUTHAKA NILAYAM
60, West Tower Street, Madurai - 625 001

அச்சிட்டோர் : தொ. பே. : 47 78 20

சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை - 86 [சாலை 169]

# பதிப்பகத்தார் குறிப்பு

''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்றார் ஔவையார். வறுமை மனித மனத்தில் ஈரமில்லாமல் செய்து விடுகிறது. பந்த பாசம் உறவுகள் யாவற்றையும் இழக்கச் செய்துவிடுகிறது. வறுமை மட்டுமா? பெருஞ் செல்வமும் பேராசையும் கூட மனிதனை இதயமற்றவனாகச் செய்து விடுகிறது. இந்த மாறுபட்ட நிலைக்குப் பேராசையும் பணவெறியும்தான் காரணம் என்பதையே அடி நாதமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளன, திரு. மாத்தளை சோமு அவர்களின் கதைகள்.

தினந்தோறும் செய்திகளில் முக்கிய இடம் பெறும் ஈழநாட்டின் அடிமட்டக் குடிமக்களின் சிரம வாழ்க்கையையும் — அவலங்களையும் தெளிவாக விளக்குகிறார். நல்ல எளிய தமிழில் அவர் படைத்துள்ள கதைகள் வாசகர்களின் சிந்தனைக்கு நல்விருந்தாக அமையும் என நம்புகிறோம்,

செ. செல்லப்பன்

## ஆசிரியரின் பிற நூல்கள்

இலங்கை நாட்டுத்
தெனாலிராமன் கதைகள்

நமக்கென்றொரு பூமி
(சிறுகதைத் தொகுதி)

எல்லை தாண்டாத அகதிகள் (அச்சில்)

# முன்னுரை

கவிதைகள், பேட்டிகள், கட்டுரைகள் எழுத ஆரம்பித்த நான் சிறுகதை எழுத்தாளனாக மாற ஆரம்பித்தது 1967ம் ஆண்டில். அதற்கு முழுக் காரணகர்த்தா மதிப்புக்குரிய திரு. ஜெயகாந்தன் அவர்கள்.

திரு. ஜெயகாந்தன் அவர்களின் சிறுகதைகளைப் படிக்க ஆரம்பித்த பின்னர்தான் நான் சிறுகதை எழுத ஆரம்பித்தேன். 'எழுத்து ஏன் எழுதப்படவேண்டும்? எழுத்தின் மூலமாக இந்தச் சமூகத்திற்கு எதனை அடையாளம் காட்ட வேண்டும்?' என்பதெல்லாம் ஜெயகாந்தன் கதைகள் மூலமே நான் படித்துக்கொண்டேன். பிறகு, ஒவ்வொரு சிறுகதை எழுதும்போதும், மானசீகமாக, ஜெயகாந்தனைத் துணையாகக் கொண்டே எழுதுவேன், சிலர் பிள்ளையார் சுழிபோட்டு எழுதுவதுபோல்! அவ்வாறு எழுதினால்தான் எனக்கு ஒரு நிறைவு...அதனால்தான் போலும், எனது சிறுகதைகள் ஜெயகாந்தன் கதைபோல் இருப்பதாகச் சிலர் சொன்னார்கள். எனக்கு அதனைப் பற்றிக் கவலையில்லை. எனது கவலையெல்லாம் எனது சிறுகதைகள் சமுதாயத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதுதான். அந்தக் கவலையைத் தீர்த்து வைத்தது 1986-ம் ஆண்டில் நான் தொகுத்த 'தோட்டக்காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுதி. அச்சிறுகதைத் தொகுதியில் எனது சிறுகதைகள் மூன்றே இருந்தன.

அச்சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதிய ஈழத்தின் முன்னோடி விமர்சகர் அமரர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள், 'தனித்தொகுதி' வெளியிட

உற்சாகம் ஊட்டியதோடு, 'இதிலுள்ள சிறுகதைகள் ஈழத்து இலக்கியத்திற்குப் புதிய நம்பிக்கையைக் கொடுக்கும்' என்றும் குறிப்பிட்டார். அவரின் ஊக்கத்தில் 1984-ம் ஆண்டு மதுரை மீனாட்சி புத்தக நிலையத்தினர் 'நமக்கென்றொரு பூமி, என்ற பெயரில், எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன் அவர்களின் முன்னுரையோடு எனது முழுமையான சிறுகதைத் தொகுதியை வெளியிட்டனர். தற்போது 'அவன் ஒருவனல்ல' என்ற பெயரில் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி வெளிவருகின்றது.

இச் சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள சில கிறுகதைகள் வயதானவர்களைப் பற்றியதாக இருக்கின்றது என்ற ஒரு கருத்து, அச் சிறுகதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தபோது வாசகர்கள் மூலமாக என் செவிக்கு எட்டியது. நான் அவ்வாறு எழுதவேண்டும் என்று எழுதவில்லை... இச் சமூகத்தில் வயதானவர்களுக்குக் கொடுத்திருக்கிற—கொடுக்கக் கூடாத—அந்தஸ்து என் மனதைப் பாதித்தது. அதை எழுதினேன்.

சாதி, பணம், அந்தஸ்து என்ற வட்டத்தில் சிக்கியிருக்கிற நமது சமுதாயத்தில் தாய் தந்தையர் முதுமையானால் செல்லாக் காசாகிப் போகிறார்கள். மதிப்பே கிடையாது! நாளை முதுமையாகப் போகிற இன்றைய இளமை இன்றைய முதுமைக்கு ஒரு மரியாதை கொடுக்காதபோது, அந்த இளமை எவ்வாறு நாளைய முதுமையை எதிர்நோக்கும்?...வாழ்க்கையின் கடைசிப் பாகத்தையும் மனிதனின் முதுமைக் கோலத்தையும் நன்றியுணர்வோடு மதிக்கிற சமூகம்தான் உயர்ந்து நிற்க முடியும்!...நம் சமூகத்தில் உழைத்து ஓய்வான முதியோர்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்தஸ்து போதுமானதாக இல்லாததால் அஃது என் மனதைப் பாதித்தது. அஃதில் சில சிறுகதைகள் உருவாகின...

இத்தொகுதியில் உள்ள 'அதே மனிதர்கள்' என்ற சிறுகதையில் அதனை நன்கு சித்திரித்துள்ளேன். இந்த 'அதே

மனிதர்கள்' இந்தச் சமுதாயம் அழியும்வரை இருக்கத் தான் போகிறார்கள்! ஆயினும் நான் சொல்வதை, சொல்ல வேண்டியதைச் சொல்கின்றேன்.

இத் தொகுதியில் உள்ள எல்லா சிறுகதைகளையும் அறிமுகப்படுத்துவதும் அது எவ்வாறு பிறந்தது என்று சொல்வதும் முக்கியமல்ல. சிறுகதைகள் எவ்வாறு பிறந்தாலும் அதன் நோக்கமும் தொக்கி நிற்கிற எண்ணமுமே முக்கியம். மேலும் சமுதாயத்தில் வேஷம் போட்டு வாழ்கிற மனிதர்களின் முகத்திரைகளைக் கிழிப்பதே என் இலட்சியம். அவைகளை இச்சிறுகதைகளைப் படிக்கிறபோது நீங்கள் உணர்வீர்கள்...

கடைசியாக எனது முதல் சிறுகதைத் தொகுதிக்குத் தந்த ஆதரவையே இச்சிறுகதைத் தொகுதிக்கும் தருவீர்கள் என நம்புகின்றேன். இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளை முன்னர் வெளியிட்ட 'வீரகேசரி'— 'சிந்தாமணி' — 'தீபம்' — 'சிரித்திரன்' ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கும் இதனைத் தொகுதியாக வெளியிடுகிற மதுரை மீனாட்சி புத்தக நிலையம் திரு. செல்லப்பன் அவர்களுக்கும் தொகுதியின் அட்டைப்பட ஓவியருக்கும் அழகாக அச்சிட்டுத் தந்த சாலை அச்சகத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

25-9-1989

மாத்தளை சோமு

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| 1. | அவன் ஒருவனல்ல | (1979) | 9 |
| 2. | ஒரு தெருவின் கீதம் | (1972) | 20 |
| 3. | அதே மனிதர்கள் | (1974) | 34 |
| 4. | பெரிய மனிதர்கள் | (1975) | 45 |
| 5. | பெரிய இடத்து நாய் | (1976) | 56 |
| 6. | அவனுக்கும் ரோசம் உண்டு | (1976) | 66 |
| 7. | தெய்வங்கள் | (1977) | 80 |
| 8. | உயிருள்ள பிணங்கள் | (1979) | 90 |
| 9. | தகப்பன் சாமிகள் | (1980) | 103 |
| 10. | பகல் நேரத் தர்மங்கள் | (1984) | 113 |
| 11. | கழுகுகள் | (1984) | 122 |
| 12. | போஸ்டர்கள் | (1975) | 134 |

# அவன் ஒருவனல்ல...

ஜன்னல் அருகே நின்று மத்தியில் கம்பீரமாக நிற்கும் ஸ்கூலைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குக் கண்கள் கலங்க ஆரம்பித்தன. இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே நின்றால் அந்தக் கண்களிலிருந்து கண்ணீர் கொட்ட ஆரம் பிக்கும்.

அவன் ஜன்னலைவிட்டு நகர்ந்து நாற்காலியில் உட் கார்ந்தான். அப்போது அவனுடைய பார்வையில் அந்த நீலநிற சூட்கேஸ் பட்டது. அந்த சூட்கேசில் அவனுடைய எல்லாப் பொருட்களும் அடங்கியிருக்கின்றன. ஒரு பயணம் போவதென்றால் அந்த சூட்கேசும் அதனுள் இருக்கும் பொருட்களும் அதிகமானவைதான். ஆனால் அவனுடைய முழு வாழ்க்கைப் பயணத்துக்கும் அவைகள் அதிகமான தென்று சொல்ல முடியுமா? அவனிடம் இருக்கும் அசையும், அசையாச் சொத்துக்கள் எல்லாமே அந்த சூட்கேசில் இருப்பவைதான்...

நாற்காலியை விட்டு எழும்பிய அவன், அந்த சூட் கேசைத் தூக்கிப் பார்த்தான். அவ்வளவு பாரமாகத் தெரியவில்லை. ஒரு ஆள் தூக்கிப் போகக்கூடிய பாரம் தான்...ஆனால் அந்தப் பெட்டியைப் பார்க்கும்போது தன் மனதில் கிளம்புகின்ற எண்ணங்களின் பாரத்தைத்தான் அவனால் தாங்க முடியவில்லை...இத்தனை நாட்களும் உடுத்தியதையும் சொந்தத் தேவைக்காக வைத்திருந்ததை யும் அப்படியே அந்த சூட்கேசில் எத்தனை சுலபமாக வைத்

தாகி விட்டது! ஆனால் இந்த மனதை மட்டும் அவனால் அடக்கி வைக்க முடிந்ததா? அது இன்னமும் அந்த 'வோர்டர்'னின் உள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. அவன் எடுத்த முடிவுக்கு வந்த பின்னரும், இன்னமும், அந்த முடிவுக்கு வந்தது சரியா, தவறா? என்று ஆராய்ச்சி செய்து பார்க்கிற தன் மனதை அவனால் கட்டுப்படுத்த முடிய வில்லை...

நேற்றுவரை ஸ்கூல் மாஸ்டராக இருந்த அவன், அந்தத் தோட்டத்தை விட்டுப் போவதென்றும் மாஸ்டர் வேலையை உதறுவதென்றும் உறுதியாக இறுதியாக முடிவு எடுத்திருந்தான். ஆனால் அவனால் இன்னமும் அந்த முடி வின்படி தைரியமாக நடக்க முடியவில்லை...

ஜன்னல் அருகே வந்து நின்றான் அவன். அவனுடைய பார்வை ஜன்னல் வழியாக நழுவி வெளியே ஓடியது. ஒரு காமிராவின் மூலம் பார்ப்பதுபோல் அந்த ஜன்னல் காட்சி கள் அழகாக இருந்தன...வெளியே இயற்கை அன்னை நடந்துபோக ஒரு பச்சைக் கம்பளம் விரித்ததுபோலத் தேயிலைச் செடிகள் நின்று கொண்டிருந்தன. அதே தேயிலைச் செடிகள் யாரோ ஒருத்தர் நடந்து போகச் சற்று விலகி நின்று செம்மண் நிறத்தில் நடைபாதை போட்டிருந் தன. அதில் நடந்துபோனால் அந்த எஸ்டேட் ஸ்கூலுக்குப் போகலாம்...ஓ! அந்த ஸ்கூல்கூட அழகாக ஜன்னல் வழியே தெரிகிறதே! அந்த ஸ்கூலையே பார்த்தான்...அதில்தான் அவன் மாஸ்டர் நேற்றுவரை... இன்று, அவன்தான் அந்த ஸ்கூலை விட்டு விலகிவிட ராஜினாமாக் கடிதம் எழுதி விட்டானே! இனி அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அந்த சூட்கேசைத் தூக்கிக்கொண்டு போகவேண்டியது தான்...

எந்த ஸ்கூல் ஆசிரியர் இல்லாமல் மூடப்பட இருந் ததோ, எந்த ஸ்கூலை மூடாமல் தானே ஆசிரியராகப் பணிபுரிந்து காப்பாற்றினானோ, எந்த ஸ்கூலில் வேலை செய்வதை ஒரு பெரிய சமூக சேவை என்று நினைத்

தானோ, அந்த ஸ்கூல் வேலையை உதறிவிட்டு நகர்ப்புற ஸ்கூலில் சேவை செய்யப் போகிறானாம்...அதற்காகத் தான் அந்த ராஜினாமாக் கடிதம்...

தன்னை இப்போது வேறு ஒருத்தனாக விலகி நின்று பார்க்கும்போது, அவனுக்குத் தன்மீதே ஒரு கசப்பும் வெறுப்பும் பீறிட்டுக்கொண்டு வருகிறது...!

அன்று 'எஸ்டேட் ஸ்கூலில் படித்துக் கொடுத்து லயமே உலகமென்று கிடக்கின்ற மனிதக் கூட்டத்தின் வாரிசுகளை அறிவு வெளிச்சத்திற்குக் கொண்டு செல்வேன்! இது எனது லட்சியம்! இதை யாராலும் தடுக்க முடியாது' என்று யாரிடம் ஆவேசமாகச் சத்தம் போட்டானோ, அவரிடமே இப்போது அடக்கமாகச் சரணடைந்து விட்டானே!

போனமாதம் அவன் அப்பா வந்திருந்தார். அவரோடு அம்மாவும் வந்திருந்தாள்.

''இந்தத் தோட்டத்து ஸ்கூல்ல வேல செஞ்சு என்னத்தைக் காணப்போற? ஆடுமாடுகளை மேய்க்கிறதும் இங்க படிச்சிக் கொடுக்கிறதும் ஒண்ணுதான்...நீ சரின்னு சொல்லு... டவுண் ஸ்கூலுக்கு எம். பி. யைப் பிடிச்சி டிரான்ஸ்பர் வாங்கித் தாறேன்...''

அவனுடைய அப்பாவும் அம்மாவும் ஏகக்குரலில், ஏக தீர்மானத்தை வெளியிட்டார்கள். அவன் மௌனமாக இருந்தான்... அவனுடைய நினைவுகள் அந்த ஸ்கூலைச் சுற்றிச் சுற்றி வந்தன.

நகரத்திலிருந்து இருபது மைல் தூரத்தில் இருக்கும் அந்த எஸ்டேட் ஸ்கூல் மிகவும் பின் தங்கிய ஸ்கூல்... நகரத்திற்கும் அந்த எஸ்டேட்டுக்கும் ஒரு நாளைக்கு இரண்டே இரண்டு தடவை தான் பஸ் உண்டு. பஸ்ஸில் போவது பதினைந்து மைல். மீதி ஐந்துமைல் நடைபாதை. அங்கே போய்ப் படித்துக்கொடுக்கத் தோட்டத்தில் பிறந்து வளர்ந்து படித்தவர்களே பின்வாங்கினார்கள். டவுண் ஸ்கூலில் 'டிப்டாப்'பாக உடுத்தி, மினுக்கி மாஸ்டர் வேலை

செய்வதையே அவர்கள் விரும்பினார்கள். அதனால் அந்த எஸ்டேட் ஸ்கூலை மூடப்போனார்கள். அதை மூடாமல் தடுத்தவன் அவன்தான். அவன் அங்கே போனபோது 'நம்ம ஸ்கூலுக்கு யாரோ புதுசா மாஸ்டர் வந்திருக்காராம்... அவர் யாரோ!' என்ற எண்ணத்துடன் அவனைப் பார்க்க வந்தவர்கள் ஏராளம். வந்திருப்பது 'சாகப்போற கெழடாத்தான் இருக்கும்' என்று நினைத்தவர்கள் அவனைப் பார்த்ததும் முதல் பார்வையிலேயே அவனை நம்பினார்கள்.

மறுநாள் லயத்தைச் சுற்றி ஆடிக்கொண்டிருந்த பிள்ளைகள் எல்லாம் 'அரைத்துண்டு' சிலேட்டுடன் ஸ்கூலுக்கு வந்துவிட்டார்கள். ஓ எத்தனை விதமான பிள்ளைகள்!... தேயிலைச் செடிகளும் லயங்களும் தான் உலகமென்று நினைக்கின்றவர்களின் வாரிசுகள்! அவர்கள் படிக்க வருவதே வேடிக்கை. சிலர் கால்சட்டை மட்டும் போட்டும் சிலர் கால்சட்டை போடாமல் முழங்காலுக்குக் கீழே தொங்கும் பெரிய சட்டைக்குள் உடம்பை நுழைத்துக் கொண்டும் வருவார்கள். அவர்களில் யாரிடமும் படிக்கத் தேவையான எல்லாமே இருக்காது...அத்தனை பேரையும் அவன்தான் மேய்க்கவேண்டும்...

அவனுக்கு முன்னர் வேலை செய்த 'மாஸ்டர்மார்கள்' எப்போது பார்த்தாலும் 'படம் பார் பாடம் படி... ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து-ஏ. பி. சி. டி. போன்றதைத் தான் கோரஸ் பாட்டுபாடி மேய்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் என்று வந்தானோ, அன்று தொடக்கம்தான் அந்தப்பிள்ளைகள் படிக்க ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று, என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் கூட்டிக் கழித்து, பெருக்கி, வகுக்க ஆரம்பித்தார்கள். A, B, C, D என்று 'இங்கிலீஸ்' பேசியவர்கள் 'I am a Boy,—You are a Girl' என்று படிக்க ஆரம்பித்தார்கள்.

அவன் வந்தபோது இருபத்தைந்து பேர் அடங்கிய பிள்ளை மடுவமாக இருந்த அந்த ஸ்கூல் நிஜமாகவே

ஸ்கூலாக மாறியது... பிள்ளைகளின் தொகை மூன்று மடங்காகியது. ஸ்கூலைச் சுற்றிக் காய்கறித் தோட்டம் உண்டாகியது. விளையாட இடமும் பந்தும் கிடைத்தது. ஸ்கூல் சுவர்களில் மாட்டப் படங்கள் கிடைத்தன.

''என்னா பேசாம இருக்க, ஒரு முடிவைச் சொல்லு...'' என்று இழுத்தார் அவனுடைய அப்பா. அந்த இழுப்பைத் தொடுத்தாள் அம்மா...

''மத்தவங்க எல்லாம் இந்த ஸ்கூல் வேணாம்னு போகுதுக. நீ என்னடான்னா இதை தான்னு வாங்கிப் படிச்சிக்கொடுக்கிற...இங்கு மனுசன் வாழ்வானா? காட்டுத் தொங்கல்...இந்த வேல வேணாம்...''

அவன் அப்போது அவர்களின் பேச்சை எண்ணிப் பார்த்தான். இன்று தோட்டத்தை வெறுக்கும் இவர்கள் ஆரம்பத்தில் கணக்கப் பிள்ளை குடும்பமாகத் தோட்டத்தில் இருந்தார்கள். இன்று டவுனில் வீட்டைக்கட்டி, டவுண் ஆட்களாக மாறி தோட்டத்தின் மீது வெறுப்பைக் கக்குகிறார்கள்...அவனுக்கு ஆத்திரம் வந்தது. அவர்கள் வேறுயாருமாக இருந்திருந்தால் வாய்க்குவாய் திட்டியிருப்பான். ஆனால் அவர்கள் அவனைப் பெற்றவர்கள்...''

அவன் பதிலே பேசவில்லை. அப்பாவும் அம்மாவும் திரும்பிப் போனார்கள். அதன்பின் அம்மாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவனும் அம்மாவைப் பார்க்கப் போனான். போகும்போது, திரும்பி வந்து அந்த ஸ்கூலில் வேலை செய்வதென்ற முடிவோடுதான் போனான். வரும்போது நீலநிற சூட்கேசில் எல்லாவற்றையும் திணிக்க முடிவு கட்டியிருந்தான்... அவனை அவனுடைய அம்மா மாற்றிவிட்டாள்... அவன் போன போது அம்மா கட்டிலில் கிடந்தாள். அவனைக் கண்டதும் தோட்டத்து ஸ்கூலை விட்டுவிடும்படி கெஞ்சினாள்...

''ஒன்னோட படிச்சவன்தான் கனேஸ்!... இன்னைக்கி அவன் எல்லா வசதியோட இருக்கிறான், கார், பங்களா

வாங்கிட்டான். நீயோ மாஸ்டர் வேல, அதும் ஒரு தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் வேல செய்யிற. ஒனக்குப் பெரிய இடத்தில பொண்ணு பார்த்தோம். அவங்க எஸ்டேட் ஸ்கூல் மாஸ்டர் வேல செய்யிறவங்களுக்குப் பொண்ணு தரமுடியாதுன்னு சொல்லிட்டாங்க...''

அவன் மௌனமாக இருந்தான். கடைசியில் அவனுடைய அம்மா பாசக்கயிற்றை வீசி அவனை இழுத்தாள். எப்படியாவது அவனை எஸ்டேட் ஸ்லிகூலிருந்து இழுத்தெடுக்க வேண்டும் என்பதே அவளுடைய எண்ணம்.

''கடேசியாச் சொல்ரேன்! நீ யாருக்காக இல்லாட்டியும் எனக்காகவாவது இங்க வந்திரு! நான் சாகப் பொழைக்க இருக்கிரேன்...''

அவன் அப்போதுதான் அம்மாவை உற்றுப் பார்த்தான். உண்மையிலேயே அவள் தளர்ந்துதான் போய்விட்டாள். முகம் வெளுத்துக் களை இழந்திருந்தது...

அவன் தான் ஸ்கூலைவிட்டு விலகப்போவதாக முதன் முதலில் தோட்டத்துத் தபால்காரரின் காதில் போட்டான். அவர் அதைக்கேட்டுப் பேயறைந்தது போல் நின்றார். வெகு நேரத்திற்குப்பின்னர் சுயநினைவு வந்த அவர் கண்கள் கலங்கச் சொன்னார். ''நீங்க போனா ஸகூலை மூடவேண்டியது தான். யாருமே படிச்சிக் கொடுக்க வரமாட்டாங்க, இனி இந்தப் பட்டாளம் தோட்டத்தையே சுத்தும்...''

தபால்காரரின் ஒவ்வொரு சொல்லும் நனைந்து நனைந்துதான் வெளியே வந்து விழுந்தது. அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அந்தத் தபால்காரருக்குத் தன் முடிவைச் சொல்லாமல் இருந்திருக்கலாம் அவன். ஆனால் அந்த முடிவு எப்படியோ தெரியத்தானே போகிறது!

தபால்காரர் தபால் பையோடு ஒருபக்கம் சரிந்து சரிந்து நடந்து போனார், போகும்போது கெஞ்சும்

குரலில், ''நல்லா ரோசண பண்ணி முடிவு எடுங்க மாஸ் டர்...'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

அவன் யோசித்துப் பார்த்தான். வேறு எந்த முடிவும் எடுக்க முடியாது. எடுத்த முடிவு சரியாகப்பட்டது அவனுக்கு...

தபால்காரர் போன சற்று நேரத்தில் அவனுடைய குவார்ட்டர்ஸின் முன்னே சின்னக் கூட்டமே கூடிவிட்டது, அவனால் ஒன்றுமே செய்யமுடியவில்லை...அவர்களை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாமல் தவித்தான். அவர்கள் இப்படித் திடீரென்று வருவார்கள் என்று அவன் நினைக்கவே இல்லை. ஓ...அவன்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள்...! அவன் யார்? அவர்கள் யார்? இரண்டு பேரையும் இணைப்பது எது? அந்தப்பாசம்...

மெல்லத் தலைதூக்கி அவர்களைப் பார்த்தான். அந்தக் கூட்டத்தில் தலைவர், கங்காணி, தபால்காரர், பூசாரி...இப்படிப் பலர்...அதில் ஒரு கிழவி இரண்டு கையையும் ஆகாயத்தை நோக்கி விரித்துக் காட்டிப் பேசினாள்... ''மூடப் போன ஸ்கூல நீங்கதான் மூடாம காப்பாத்தி னீங்க! நல்லாப் படிச்சிக் கொடுத்தீங்க...உங்க மாதிரி பொறுப்போட பாசத்தோட படிச்சிக் கொடுக்கிர மாஸ்டர் மாருக கெடைக்கனுமே! வர்ர மாஸ்டர்மாருக எல்லாம் கொஞ்ச நாளைக்கி இருந்திட்டு, அவனைப் புடிச்சி இவனைப் புடிச்சி டவுண் ஸ்கூலுக்குப் போயிறானுக...நீங்க தான் எங்க புள்ளைகளுக்கு நல்லா படிச்சிக் கொடுத்தீங்க! இப்ப போறேனு சொல்றீங்களே...''

அந்தக் கிழவி ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். அவளுக்குப் பிறகு அடுத்தடுத்துப் பலர் பேசினார்கள். அவன் யோசித்து யோசித்துப் பார்த்தான்...கடைசியில் அவன் அப்பா வகுத்த வழியிலே நின்றான்...

கட்டிலில் மல்லாந்து படுத்துக்கிடந்த அவனுக்குத் தூக்கமே வரவில்லை. தூங்க வேண்டுமென்றுதான் கட்டி

லில் விழுந்தான். தூக்கம் வந்தால்தானே! பகலில் தூக்கம் வருமா என்ன!

கண்களை மெல்ல மூடினான் அவன். மூடிய கண்களின் இமைக்குள்ளே ஒரு காட்சி நெளிந்து...போனமாதம் ஸ்கூலில் சரஸ்வதி பூஜை. லயத்தில் உள்ள அத்தனை பேரும் வந்திருந்தார்கள். மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகள் நடந்தன. டவுனில் இருந்து வந்த ஒருத்தர் பேசினார். அவனும் பேசினான். கடைசியாகப் பூஜை நடந்தது. கடைசியாக அவன் நன்றி சொன்னான். அப்போது அவன் கழுத்தில் ஒரு இளைஞன் திடீரென்று மாலை போட்டான். அவன் போட்ட வேகத்திலேயே மாலையைக் கழட்டினான். அதன் பின்னர் அவன், தனக்கு மாலை போட்டது தவறு, மாலை இங்குள்ள ஒவ்வொருவருக்கும் போடவேண்டும். நான் என் கடமையைத்தான் செய்தேன். கடமையைச் செய்ததற்கு மாலை போட மாட்டார்கள்; சம்பளம் கொடுப்பார்கள். இங்கே சம்பளம் கொடுக்கிறார்களே!... என்று சொல்லிக் கைதட்டல் வாங்கினான்.

அப்போது ஒருத்தர் சொன்னார்...''நாங்களா தான் ஒங்களுக்கு மாலை போட்டோம். மத்தவங்க மாதிரி மாலையை வாங்கி எங்களுக்கிட்ட குடுத்துப் போடச் சொல்லலியே!''

அங்கிருந்த அத்தனை பேரும் சிரித்தார்கள்...

கண்களை மெல்லத் திறந்து பார்த்தான்...மேலே வீட்டுக் கூரைதான் தெரிந்தது. மீண்டும் கண்களை மூடினான். மறுபடியும் யோசனை ... யோசனை ... யோசனை...

அப்போது கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. யார் கதவைத் தட்டுகிறார்கள்? என்று நினைத்துக்கொண்டே அவன் கட்டிலைவிட்டு இறங்கிப் போனான். கதவைத் திறந்தான். தபால்காரர் அன்றைய பேப்பரும் கையுமாக

நின்றார். அவர் முகத்தில் வெளிச்சம் இல்லை. இருட்டுத் தான் இருந்தது ஏன்?

அவன் தபால்காரரிடமிருந்து பேப்பரை வாங்கினான். நேற்றுப் போன பேப்பர் லயத்தைச் சுற்றிவிட்டு இப்போது தான் வந்திருக்கிறது...

அவன் தபால்காரரைப் பார்த்தான்...

''தம்பி! நீங்க போகத்தான் வேணுமா?...''

தபால்காரர் கேட்டார்...அவன் மௌனமாக நின்றான்...

''ஒங்கள நம்பித்தான் இருக்கிறோம். ஏதோ யோசிச்சி செய்ங்க.' என்று சொல்லிவிட்டுத் தபால்காரர் சரிந்து சரிந்து நடந்துபோனார். அவருடைய தோளில் தபால்பை இல்லை. ஆனால் அதைத் தோளில் சுமந்து நடந்து பழகியதால் சாதாரணமாக நடக்கும் போதும் தபால்பை சுமப்பது போன்ற பாவனையில்தான் நடப்பார்.

தபால்காரர் போய்விட்டார். அவன் கட்டிலில் விழுந்து ஒரு பக்கம் சரிந்து படுத்தான்...தூக்கம் வரவே யில்லை...

அடுத்தநாள்...தன்னுடைய ராஜினாமாக் கடிதத்தை எடுத்துக்கொண்டு அவன் துரையின் பங்களாவுக்குப் போனான்...அது துரையின் தோட்டம்...முதலாளி துரை என்று இரட்டை வேடம் போடுவது இங்கே ஒருத்தர்தான்.

குறுக்குப் பாதையில் இறங்கினான் அவன். இரண்டு பக்கங்களும் தேயிலைச் செடிகள்...! அதில் பெண்கள் கொழுந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள்...அவனைப் பார்த்து அவர்கள் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவன் தலைகுனிந்தவாறு போய்க் கொண்டிருந்தான்.

குறுக்குப்பாதை கரத்தை ரோட்டோடு சங்கமிக்கும் இடம். அங்கே ஒரு மாமரம்...அந்த மரம் தன் கிளைகளை விரித்து நிழல் பரப்பிப் பூவும் பிஞ்சுமாய் நின்றது. வாண்

டுகள் கல்லும் தடியுமாய் அந்த மரத்துடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் ஒவ்வொரு தாக்கு தலுக்கும் மரம் பதில் தாக்குதல் தொடுக்காமல், அவர்களை ஆசீர்வதிப்பதுபோல் பூவையும் பிஞ்சையும் உதிர்த்தது.

அவன் மாமரத்தின் அருகே போனான். அவனைக் கண்டதும் தங்களின் யுத்தத்தை நிறுத்திய வாண்டுகள் தங்களின் ஆயுதங்களை அதாவது கல்லையும், பொல்லையும் போட்டு விட்டு ஓடினார்கள். அவனுக்கு ஆத்திரம் வந்தது. காயும் கனியுமாகப் பூத்துக் குலுங்க வேண்டிய பூவையும் பிஞ்சையும் அற்ப ஆசையால் உதிர்க்கிறார்களே! இவர்களை...ஒரு வாண்டுப் பயலை எட்டிப்பிடித்தான் அவன். அந்த வாண்டு அவனிடம் படிப்பவன்...ராக்கனின் மகன்; கொஞ்ச நாட்களாகத்தான் திருந்திப் படிக்க ஆரம்பித்திருந்தான். அவன் மீண்டும் இப்போது ஆடத் தொடங்கிவிட்டான்...!

''ஏன் மரத்த நாசமாக்கிறீங்க?''

வாண்டுப் பயலின் முதுகு தவித்துக் கொண்டிருந்தது. அவன் முதுகில்தான் அடிப்பான்...

''நாளைக்கி ஸ்கூலுக்கு வாங்க கவனிச்சிக்கிறேன்...'' அவனுக்கு வாய் தவறியது. அவன்தான் நாளை மாஸ்டராக இருக்கமாட்டானே!

''சரி...சரி...போயி படிங்க...மரத்தில காய் காய்க்கட்டும்...அவசரப்பட்டுப் பூவையும் பிஞ்சையும் நாசமாக்காதீங்க!...'' என்று சொல்லிவிட்டு வாண்டுப் பயலை ஓட விட்டான்.

துள்ளி ஓடிய வாண்டுப்பயல் சற்று தூரப்போய், ''இனி எங்க சேர் படிப்பு? நீங்க ஸ்கூலை விட்டுப் போறீங்களாம். அதனால் என்னை ஆயா இனி படிக்கப் போகாதேன்னு சொல்லிச்சி! இனி ஆட்டுக்கு எலை குழை வெட்டணும்? வெறகு பொறுக்கணும்!...''

அவன் அப்படியே நின்றான், அவனுடைய கால்கள் நடுங்கின. நேற்றுவரை படித்தவர்கள் நாளை முதல் படிக்க மாட்டார்களாம்...ஏன்? அவன்தான் அதற்குக் காரணம்... அவன் இருக்கும்வரை படித்தவர்கள் அவன் போகப் போகிறான் என்பதைக் கேட்டவுடன் மாறுகிறார்கள். மீண்டும் அந்த வாண்டுகள் லயத்தைச் சுற்றி விளையாடு வார்கள்...

அவன் மரத்தைப் பார்த்தான். மரத்தின் கீழே பூவும் பிஞ்சும் சிதறிக் கிடந்தன. காய் காய்ப்பதற்கு முன்னரே வாண்டுகள் அவசரப்பட்டு விட்டார்கள். இன்னும் கொஞ் சம் நாட்கள் விட்டிருந்தால் சிதறிக் கிடக்கின்ற பூவும் பிஞ்சும் காய்த்துத் தொங்குமே...? ஆனால்...ஆனால்...

அவன் திடீரென்று முடிவெடுத்தான். கையிலிருந்த கடி தத்தைக் கிழித்துப் போட்டான். அது பல துண்டுகளாகச் சிதறிப் பறந்தது.

''நான் ஸ்கூலை விட்டுப் போகல்ல...மாஸ்டரா இருப் பேன்...போயி ஆயாகிட்ட சொல்லுங்க''

வாண்டுகள் துள்ளிக் குதித்துக்கொண்டு லயங்களை நோக்கி ஓடினார்கள். அவன் திரும்பி நடந்தான்...

மாமரம் ஆடி அசைந்து கொண்டிருந்தது. அப்போ தெல்லாம் மரத்தில் உள்ள பூவும் பிஞ்சும் ஆடின. ஓ... அவைகள் தான் இனிமேல் காயாக...கனியாக... ★

இலங்கை யாழ்நகர் சிரித்திரன் மாத இதழில் 'மகுடக் கதையாக' 1979-ம் ஆண்டு பிரசுரம் பெற்றது. பிறகு இச்சிறுகதை இலங்கை வானொலி நாடகமாக உருவாக்கி ஒலிபரப் பாகியது.

# ஒரு தெருவின் கீதம்...

கைத்தடியை ஊன்றி ஊன்றித் தள்ளாடித் தள்ளாடி அந்தக் கிழவன் நடந்து வருகின்றான். அவன் அப்படி நடந்து வருகின்ற போது அவனுடைய நடைக்கு ஏற்ற வாறு தாளம் போடுவது போல் அந்தக் கைத்தடியிலிருந்து கிளம்புகின்ற 'டக்டக்' கென்னும் சத்தம் அவனுடைய வரவை எல்லோருக்கும் அறிவிப்பது போல் கம்பீரமாக ஒலிக்கிறது. அந்த சத்தம் கிழவன் நடந்து வருகின்ற இடத்திலிருந்து, ஒரு நாலைந்து வீடுகளுக்கு அடுத்தாற் போல் இருக்கிற ஒரு வீட்டின் வாசலில் அவனுக்காகக் காத்திருக்கின்ற கிழவியின் காதுகளிலும் தெளிவாக விழுகிறது. இனி கேட்கவா வேண்டும்? கிழவிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தொடர்ந்து அந்த சத்தத்தைக் கேட்கக் கேட்க அது வெறுமனே 'டக்டக்' கென்ற சத்தமாக கேட்கவில்லை கிழவனே தன் வாயைத் திறந்து இதோ வந்து விட்டேன் என்று சொல்வதுபோல் கேட்கிறது. கிழவிக்கு ஒரு நிமிடம் தன் காதுகளையே நம்ப முடியவில்லை! யாரை இவ்வளவு நேரம் எதிர் பார்த்தாளோ அவனே இப்போது வந்து கொண்டிருக் கிறான். இனி என்ன துன்பம் அவளுக்கு?

கிழவி தன்னை மறந்து ஒரு சின்னப் பிள்ளையைப் போல் சத்தமில்லாமல் சிரிக்கிறாள். சிரிக்கட்டும்; இந்த சிரிப்பும் அழுகையும் அவளைப் போன்ற பரதேசிக்குச் சொந்தமானதுதானே? சொந்தமானதுதான்! அப்படிச்

சொந்தம் என்பதற்காக கிழவி எப்போதும் சிரிக்கலாம் அழுகலாம் என்று அர்த்தமா? அதுதான் கிடையாது. அவளைப் பொறுத்த வரையில் எப்போது கிழவன் கைத் தடியை ஊன்றி வருகிறானோ அப்போதே அவளுடைய சிரிப்பு ஆரம்பமாகி விடும். அதேபோல் கிழவன் எப்போது 'இதோ வாறேன்' என்று சொல்லி விட்டு கைத்தடியின் சத்தத்தையும் சுருட்டிக் கொண்டு வெளியே போகிறானோ அப்போதே அவளுடைய அழுகை ஆரம்பமாகிவிடும்! இப்படி கிழவியின் சிரிப்பும் அழுகையும் அந்தக் கிழவனின் கையில் அதுவும் 'டக்டக்' கென்ற சத்தத்தில்தான் இருக் கிறது. உண்மைதான். ஒரு மனைவியின் சிரிப்பும் அழுகை யும் புருஷனின் கையில்தானே இருக்கிறது. இதற்கு கிழவி மட்டும் விதிவிலக்கா என்ன?

இப்போது கைத்தடியின் சத்தம் மிக நெருங்கி அதுவும் கிழவியின் காதின் உள்ளேயே ஒலிப்பதுபோல் கேட்கிறது. கிழவன் மிகமிக நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். கிழவிக்கு மகிழ்ச்சி தாங்கவே முடியவில்லை. போன உயிர் திரும்பி வந்ததுபோல் ஒரு சுறுசுறுப்புடன் தன் கண்களை மூடிக்கொண்டு ஏதேதோ நினைக்கிறாள். நினைவு களுக்கா பஞ்சம்? அது கிழவியின் உள்ளத்திலிருந்து வெள்ள மாய் பீறிட்டு அவளுடைய கண்களின் ஓரத்தில் நினைவு களாய்-கனவுகளாய்-கற்பனைகளாய் விரிகின்றது. கிழவி தன்னை மறந்து சிரிக்கிறாள்.

கிழவிக்கு முன்பு யாரோ நிற்பதுபோல் தெரிகிறது. கிழவியும் அது யாரென்று கொஞ்சம் உற்றுப் பார்க்கிறாள். அது வேறு யாரும் இல்லை, கிழவன்தான்! கிழவனா அவன்! கட்டுமஸ்தான தேகத்துடன் நிற்கும் வாலிபன் அல்லவா அவன்! கிழவியால் அவனை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை! என்றாலும் வெட்கத்துடன் ஒரு ரசிப்புடன் அவனை பார்க்கின்றாள். அப்போது அவன் சிரிக்கிறான். அதுவும் சும்மாவா சிரிக்கிறான்? அந்தக் காலத்தில் அவளைப் பார்த்து 'என்னா?' என்று கேட்பது போல் ஒரு

விதக் கேலியுடன் கண்களை ஒரு தடவை சிமிட்டி விட்டு சிரிப்பானே அதுபோல் சிரிக்கிறான். கிழவிக்கு அவனை அப்படியே பாய்ந்து சென்று அணைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. அவ்வளவு உணர்ச்சி அவளுக்கு!

இப்படித்தான் ஒரு நாள் இரவு. கல்யாணமான புதில் தனியறையில் அவன் அவளுக்காக காத்திருந்தான். அவளோ வெட்கத்துடன் அந்த அறையின் வாசலோரம் நின்று கொண்டிருந்தாள். அவனும் பல தடவை அவளைக் கூப்பிட்டுப் பார்த்தான். அவளோ வரவேயில்லை. கோப முற்ற அவன் திடீரென்று வாசலுக்குத் தாவிச் சென்று அவளை அப்படியே அணைத்து இறுகத் தழுவினான். அப்பறம் அப்பறம் என்ன? ஒரே சிரிப்பு கும்மாளம்தான்!

அப்படி அவன் சிரித்த சிரிப்பு. பேசிய குறும்பு, கோவித்த கோவிப்பு எல்லாம் அவளுடைய செவிப்பறைகளில் முட்டி மோதி அவளை மீண்டும் இளமையாக்குகின்றன...ஓ! அப்போது அவன் எவ்வளவு அழகானவன்? அவனை நினைக்கும் போதுகூட அவளுக்கு வெட்கம் பிய்த்துக்கொண்டு வந்தது. யாரோ கிச்சுகிச்சு மூட்டற மாதிரி. பின் இருக்காதா என்ன? அவன் அவளுடைய புருஷன் அல்லவா? புருஷன் என்றாலும் புருஷன் எல்லோராலும் புகழப்பட்ட புருஷன்!

அவனை மணந்து வீட்டுக்கு வந்தபோது அவளிடம் 'நீ கொடுத்தவச்சவடி. புடிச்சாலும் புடிச்ச புளியங்கொப்பா புடிச்சிருக்க!' என்று அவளையும் அவனையும் பார்த்து விட்டு அவர்களின் ஜோடிப் பொருத்தத்தைப் பலரும் விமர்சித்தார்கள். இப்போது அதை நினைக்கும்போது கூடத்தான் கிழவிக்கு ஒரு கிளு கிளுப்புத்தான் போங்கள்.

இப்படி நடந்தது எல்லாம் நினைவுகளாய் மாறி, கிழவியின் நெஞ்சைக் குதூகலிக்க வைத்தபோது கைத்தடியின் சத்தம் அதிகமாகக் கேட்க, கிழவன் வந்து விட்டான் என்ற நினைப்பில் ஏதோ ஒரு மகிழ்வில் திடீரென்று என்ன நினைத்தாளோ தெரியவில்லை தன்னையே மறந்து தனது

அகலமான பெரிய கண்களை அங்கும் இங்கும் உருட்டி மேலும் கீழும் கழட்டி ஒரு பார்வை பார்த்தாள். அவ்வளவுதான்! இவ்வளவு நேரமும் பூத்துக் குலுங்கிய அவளுடைய மகிழ்வு கசந்தது. நெஞ்சில் பேரிடி விழுந்தது போன்ற ஓர் உணர்வு, கிழவி துடிதுடித்தாள். பாவம் கிழவி! எல்லோருக்கும் போல் அவளுக்குக் கண்களும், அந்த கண்களில் அசைவும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எல்லோருக்கும் போல் கண்களில் இருக்கின்ற அவளுடைய கண்களில் இருக்க வேண்டிய-அந்த வெளிச்சம் ஏனோ கிழவியின் கண்களில் மட்டும் மங்கிமக்கி மருண்டு இருண்டே போய்விட்டது. இப்போது அந்த வெறும் கண்கள் மட்டும் சுழன்று என்ன செய்யும்?

''அய்யோ...ஒன்னும் தெரியலியே...'' தன்னால் பார்க்க முடியாததால் துயரத்தால் கிழவி மனசுக்குள் கதறினாள். பிறகு அந்த துயரத்தை அப்படியே மென்று விழுங்கி தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள். அப்போது அவளுடைய காதுகள் கண்களாக மாறி பார்க்கத் தொடங்கின. ஆமாம். அவளுக்குக் கண்கள்தானே காதுகள்!

ஓ...கிழவன் இப்போது எப்படி இருப்பான்?' கடைசியாகக் கண்களில் ஒளி சுரந்தபோது கிழவனைபார்த்த நேரம் அவன் நன்றாகத்தான் இருந்தான். 'ஆமாம். இப்போது கிழவன் எப்படி இருப்பான்? என்னைப் போல் தளர்ந்து தள்ளாடி கன்னஞ் சுருக்கமாகி அழகற்று அசிங்கமாக இருப்பானோ? சீச்சீ நான்தான் அவ்வளவு மோசமா இருந்தால் அந்த கிழவனுமா அப்படி இருப்பான்! பின் எப்படி இருப்பான்? அறுபதிலும் இருபதைப்போல் நிமிர்ந்து நடை போட்ட என் தாத்தாவைப் போல் இருப்பானோம்?... அப்படி இருக்கவே மாட்டான். அப்படி இருக்க கிழவன் அவனைப் போலவா சாப்பிடுகிறான் வாழ்கிறான்!...?

நெஞ்சில் மலர்ந்த அந்த நினைவுகள், சிக்குண்டு சிதறுண்டு போனதால் கிழவி, கிழவனைக் கற்பனையால்கூட

பார்க்க முடியாததை நினைத்து, சின்ன பிள்ளையைப் போல ஊமை அழுகை அழுதாள். அதென்ன ஊமை அழுகை! சிலர் ஊமைச் சிரிப்பு சிரிப்பார்களே, அதுபோல் இது ஊமை அழுகை!...நெருப்பை எப்படிதான் மூடிமறைத் தாலும் அது புகையத்தானே செய்யும்! அதுபோல் துயரத்தை எப்படிதான் மறைத்தாலும், அது வெளியே கிளம்பி, கண்களில் நீர் முத்துக்களாய் உதிரத்தானே செய் யும்!

கிழவி தன்னை மறந்து அழுதுவிட்டாள்...தான் அழு வதை கிழவன் பார்த்து விடுவானோ என்று பயந்து அவசர அவசரமாக கண்களை துடைத்தபோது, பக்கத்தில் வந்து நின்ற கிழவன் அவள் அழுததைப் பார்த்து விட்டான்.

''என்னா ஓம்பாட்டுக்கு தனியா அழுவுற!...நா... வரலேன்னா?...''

கிழவி சொன்னாள்...''அதுக்காக இல்ல. நம்ம பொழப்ப நெனைச்சுத்தான்''

''நம்ம பொழப்ப நெனைச்சா?...'' திடீரென்று கிழ வன் சிரித்தான்... ''அசல் பைத்தியகாரிதான் நீ... நம்ம பொழப்ப நெனைச்சு அழுவுறியா? அழுது என்னா செய்யிரது! நம்ம தலைவிதியதான் ஆண்டவன் இப்புடி எழுதியிருக்கானே!''

''எப்புடி எழுதி இருக்கான்?'' திடீரென்று கிழவி சத்தம் போட்டாள். கிழவன் பதிலே பேசவில்லை; அவள் கேட்டது சரியான கேள்விதானே!

இன்று என்னவோ நடுத்தெருவில், நாலு பேர் முன்னே பிச்சைக்காரர்கள் என்ற பட்டத்தை, நெற்றியில் ஒட்டிக் கொண்டு வாழ்ந்தாலும், ஒரு காலத்தில் அந்தக் கிழவனும் கிழவியும் குடியும் குடித்தனமுமாக, நாலுபேர் மெச்ச, சீரும் சிறப்புமாக, கொடிகட்டி வாழ்ந்தவர்கள் தான்!

ஃ ஃ ஃ

அப்போது கிழவன், வாழ்க்கைப் பாதையில் மனித னாகி, தந்தையாகி, தாத்தாவாகி பெரிய குடும்பமாய் பரிணமித்து, உயர்ந்து நின்றான். காலம் கடந்தாவது ஓயாத உழைப்பிற்கும் ஒரு நாள் ஓய்வு கிடைத்தது. கிழவ னும் கிழவியும், பெற்ற மகன் தானே என்ற பாசத்தின் உணர்வில், மகன் வீட்டிலேயே தங்கினார்கள். அவன் ஆக்கிப் போட்டதை அள்ளித் தின்றார்கள்.

நிம்மதியாகப் பொழுதுகள் கழிந்தன. கிழவனுக்கு ஒரே சந்தோஷம். தாங்கமுடியாத சந்தோஷம்! 'வாழ்க்கை என் றால் இதுதான் வாழ்க்கை-மகன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்-வயதான தாயையும் தந்தையையும் காப் பாற்றுகிறான்-இவன்தான் நல்லமகன். இதுதான் நிம்மதி யான வாழ்வு, கோடி ரூபா கொடுத்தாலும் கிடைக்காத வாழ்வு!' என்று கிழவன், தன் மகனைப்பற்றிப் பெருமை யாக நினைத்தான்.

இந்தப் பெருமிதம், ஊருக்கும் உலகத்திற்கும் பிடிக்க வில்லையோ என்னவோ, திடீரென்று ஒருநாள், அந்த கோடி ரூபா வாழ்க்கை லேசாக புகைய ஆரம்பித்தது....

கிழவனுடைய மகனுக்குக் கஷ்டமான காலம். தலை தூக்கமுடியாத துன்பம். தான் ஒருவன் உழைத்து தாய் தந்தை, பிள்ளை குட்டி, மனைவி எல்லோரையும் காப் பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம். கிழவன் கிழவியின் சேமலாப நிதிகூட கரைந்து அவர்கள் கையே ஓட்டையான நேரம்! மகனால் எதுவும் செய்ய முடியவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான், பொறுமையை இழந்தான்... அவன் என்ன பூமாதேவியா? பொறுமையை இழக்காமல் இருக்க?

''விடிஞ்சதும் விடியாததுமா அரிசி வேணும், பருப்பு வேணும்னு கேட்டா நா எங்க போவேன்? இங்க என்னா சல்லி, மரத்திலயா காச்சி தொங்குது?... சல்லிய வாரி வாரி

எறைக்கிரதுக்கு! நா ஒருத்தன் மாடா ஒழைச்சி பத்துபேர் சாப்பிடனும்னா எங்க போறது!...

"இந்த கஷ்டத்தில மலையாட்டம் ரெண்டு முண்டம் வேற வீட்டுல கெடக்குது. அதுகளுக்குத் தெண்டச்சோறு போடவே சரியா இருக்கு!"

சொந்தம், பந்தம், பாசம், உறவு எல்லாம், ஒருபிடி சோற்றின் முன் எம்மாத்திரம்? கிழவனுக்கு நன்றாக சூடு பட்டது. வாழைக்கு ஒருகுலை-வாழ்பவனுக்கு ஒரு சொல் தானே! பெற்றமகனா இப்படிச் சொன்னான்? இனி என்ன வாழ்க்கை!...கிழவன் துணிந்துவிட்டான். தன் மனைவியைக் கூட்டிக்கொண்டு, அன்று இந்த டவுனுக்கு வந்தவன் தான்-அதன் பிறகு போகவே இல்லை!...

இப்படி ஆறுவருடத்திற்கு முன்பு, வாழ்க்கை இருண்டது போதாதென்று, டவுனுக்கு வந்த பத்தே மாதத்தில், திடீரென்று ஒருநாள் கிழவியின் கண்கள் இருண்டன. கிழவனால் இந்தத் துன்பத்தை, தாங்க முடியவில்லை. துடியாய்த் துடித்தான். அவளுடைய கண்களை மலர்த்தி மலர்த்தி வைத்து, கிழவியிடம் 'தெரிகிறதா...தெரிகிறதா?' என்று கேட்டான்.

தெரிந்தால்தானே தெரியும் என்று சொல்ல! உடனே கிழவன் 'ஓ' வென்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினான். கிழவி சும்மா இருப்பாளா? அவனோடு சேர்ந்து கொண்டு அவளும் ஒப்பாரி வைத்தாள்!

கிழவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பட்டகாலிலே பட்டுவிட்டது. இனி என்னதான் செய்வது? இவ்வளவு காலமும் இருவரால் பங்கிடப்பட்ட துன்பத்தை இனிமேல் கிழவன் மட்டும்தான் பங்கிடவேண்டும். கிழவனும் கிழவியும் என்று வாழ்ந்தவர்கள் இனி கிழவிக்காக எல்லாம் என்றாகிவிட்டது...

இப்போதெல்லாம் கிழவன் பக்கத்தில் இல்லாவிட்டால் கிழவியால், ஒரு நிமிஷம் தனியாக சும்மா இருக்கமுடியாது. எப்போதும் கிழவன் பக்கத்திலேயே இருக்கவேண்டும்—இல்லாவிட்டால் பெரிய தொந்தரவு! இப்படித்தான் ஒரு நாள் கிழவன் கிழவியிடம் சொல்லாமல், கிழவியைத் தனியாக விட்டுவிட்டு, பக்கத்து வீடுகளில் பழைய சோறு வாங்கப்போயிருந்தான். திரும்பி வருவதற்கு நேரமாகிவிட்டது.

கிழவியோ, கிழவனைக் காணாது 'கிழவன் இருக்கிறானா' என்று தெரிந்து கொள்ள எல்லா முயற்சிகளையும் செய்து தோல்வி அடைந்தாள். கடைசியில் தனது இரண்டு கைகளால் அந்த இடத்தைத் தடவுதடவு என்று தடவிக் கொண்டிருந்தாள்!

இதைத் தூரத்தில் வந்து கொண்டிருந்த கிழவன் பார்த்துவிட்டான். இனி சொல்லவா வேண்டும், கிழவனின் கோபத்திற்கு? "நீ என்மேல நம்பிக்கை இல்லாமதானே, நான் வுட்டுட்டு போயிடுவேன்னு நெனைச்சிகிட்டு தேடுற இல்லியா! காலம் காலமா ஒன்னோட வாழ்ந்தும் நீ என்ன நம்பல்ல"...கிழவன் அழுதே விட்டான்... "இனிமே நீ என்ன காணோம்னு தேடுன அப்புறம் என்ன நீ பாக்கவே முடியாது. நெனைச்சுக்க..."

கிழவனுக்கு ஒரே யோசனை...தான் எவ்வளவு பாசமாக நகமும் சதையுமாக கண்ணும் இமையுமாக அவளோடு வாழ்ந்தும் அவள் இன்னும் என்னை நம்புகிறாள் இல்லையே?'

உண்மைதான்! குருடியான அவளுக்கு புருஷனுக்குப் புருஷனாக—கண்ணுக்குக் கண்ணாக—ஏன் இந்த உலகமாகவே—இருக்கிற அவனுக்கு, அவளிடம் நல்ல பெயரே இல்லையே...கிழவனுக்கு மீண்டும் கண்கள் கலங்கிவிட்டன. வாழ்க்கையே வெறுத்துவிட்டதைப் போல் இருந்தது. கிழவியை நினைக்க நினைக்க ஆத்திரம் வேறு பீரிட்டது அவனுக்கு.

'குருட்டுக் கெழவியோட நமக்குத் தொந்தரவுதான்.' கிழவியோடு கோவித்ததுபோல், தன் கைத்தடியை ஊன்றிக் கொண்டு அந்த வீட்டிற்கு எதிர்ப்புறம், வீதியைக் கடந்து சென்று ஒரு வீட்டின் வாசலில், சதா, நரையும் திரையு மான தாடியைத் தடவிக் கொண்டிருக்கும் தாடிக்கார னிடம் போகிறான். தாடிக்கிழவன் கிழவனைப் பார்த் ததும், உறவினரைப் பார்த்த சந்தோஷத்தோடு ஒரு உற்சாகத்தில் ஏதேதோ பேசுகிறான். அவனுக்கு நன்றாகத் தெரியும் கிழவன் கிழவியோடு கோவித்துக் கொண்டுதான் வந்திருக்கிறான் என று!

'கிழவிய இப்புடி தனியா வுட்டுட்டு வந்தா அவ ஒன்ன கானோமனு அழுவாளே...' தாடிக்காரனின் வலது கை தாடியைத தடவுகிறது.

'அதான் பாருங்க. கொஞ்ச நேரம் நா இல்லாட்டி போதும், ஒரேயடியா அழுவுறா, மனுசன்னா வெளிய தொரவு போறதில்லையா? அப்படி போயிட்டா நா வுட்டுட்டுப் போயிட்டேன்னு நெனைச்சி அழுவுறா. அப்படியா நா வுட்டுட்டுப் போகப் போறேன். நீங்களே சொல்லுங்க...'

தாடிக்காரன் சிரிக்கிறான்.

'என்னமோ தெரியல்ல...கெழவி என்ன நம்புறா இல்ல! நா வுட்டுட்டு போயிடுவேன்னு இன்னைக்கும் நினைச்சிகிட்டிருக்கா...'

தாடிக்காரனின் தாடியில் ஒரு குறுநகை தவழ்கிறது. 'நீ சரியான ஆள்தான்! அவதான் ஒன்னும் வெளங்காம அப்புடி அழுவுறான்னா நீயும் இல்ல அழுவுற. இந்த சின்ன வெசயத்துக்கு...! சரி நான்தான் ஒன்ன கேக்கிறேன்! ஒனக்கு கண் குருடா இருந்தா சொல்லு—ஒன்னய கெழவி வுட்டுட்டுப் போற நேரம் நீ பேசாமயா இருப்ப? கெழவிய விட நீதான் சரியான மாதிரி கரச்சல் பன்னுவ. எல்லாம் அந்தந்த எடத்தில இருந்தாத்தான் தெரியும். ஒனக்குத்

தான் நம்ம கதை தெரியுமே. அதுக்காக நா செத்தா போயிட்டேன்? நல்லாத்தானே இருக்கேன். ஒனக்கு கிழவிக்கு கண்ணில்லையேன்னு வருத்தமா இருக்கு—எனக்கு ஏண்டா கண்ணிருக்கேன்னு வருத்தமா இருக்கு! ஆமா எனக்கு இந்த கண்ணால பார்க்கிற நேரம் எல்லாரும் அவமாதிரி தெரியுது.' திடீரென்று தாடிக்காரன் தன்னையும் மீறி கத்திவிட்டான்... 'நாசமா போனவ!'

அந்தத் தாடிக்காரன் போட்ட சத்தத்தில், ஒரு நிமிடம் பயந்து நடுங்கிப் போன கிழவன் 'வீட்டுக்கு வீடு வாசப்படி தான் இருக்கு போல' என்று நினைத்துக்கொண்டு, கைத் தடியின் 'டக்டக்' என்ற சத்தத்தோடு, கிழவி இருக்கின்ற இடத்திற்குத் திரும்பி வந்தான்.

அன்றிலிருந்து கிழவிமேல் கிழவன் கோபப்படுவதே இல்லை. அப்படி கோபப்படுவது தவறானதென்றும், கிழவி தன்மேல் கோபப்படுவது நியாயமானதென்றும், கிழவன் நன்றாக உணர்ந்தான். தன்னால் கைத்தடி இல்லாமல், ஓரடி கூட நடக்க முடியாதபோது, கிழவியால் மட்டும் எப்படி தனியாக இருக்க முடியும்? கிழவன் இல்லாமல் குருட்டுக் கிழவியால் ஒரு நிமிடமும், ஏன் ஒரு கணம் கூட இருக்க முடியாது. இது கிழவன் மேல் கொண்ட பாசத்தினால் ஏற்பட்ட உணர்வு என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதுதான் இல்லை. அது முழுக்க முழுக்க கிழவன் இல்லாவிட்டால் எப்படி வாழ்வது என்ற பயத்தினால் ஏற்பட்ட உணர்வுதான்!

இந்த உணர்வு-உறவு-என்னவோ கிழவிக்குப் பயத்தினால் தனக்கு கண்கள் இல்லையே என்ற துயரத்தினால் ஏற்பட்டிருந்தாலும் இன்று கிழவன்தானே அவளுக்கு எல்லாமே!...

ஃ ஃ ஃ

அங்கும் இங்கும் தன் பார்வையை ஓடவிட்டு, அந்தக் கிழவிக்குப் பக்கத்திலிருக்கின்ற கிழவன், வீதியில் ஓடுகின்ற

கார்களையும் பஸ்களையும் ரசிக்க முடியாமல், தன்னையும் தன் வாழ்வைப் பற்றியும் ஏதேதோ நினைக்கிறான். என்ன நினைத்து என்ன செய்வது இப்போது? இப்படி கேவலமான ஒரு வாழ்க்கைக்கு வந்துவிட்ட பின்பு நினைவுகளாவது கனவுகளாவது?...கிழவனுடைய இதயம் தண்ணீரில் வீழ்ந்த எறும்பைப் போல் தத்தளிக்கிறது. கண்கள் கலங்குகினறன.

அப்போது கிழவி திடீரென்று கரகரக்கும் குரலில் கெஞ்சலாக ஏதோ கேட்கிறாள்... 'தண்ணி கொஞ்சம் கொண்ணாந்து தர்றீங்களா? ஒரே தாகமா இருக்கு!'

'ஒன்னோட பெரிய கரச்ச...மனுசன் கொஞ்ச நேரம் நிம்மதியா செவனேன்னு அசறவுடமாட்ட'...

கிழவன் கோபப்படாமல் கோபமாக பேசுவார்களே அதுபோல் பேசினான். அவன் பேசிய வார்த்தைகளில் எவ்வளவுதான் கோபம் தெறித்து விழுந்தாலும் அவனுடைய நெஞ்சில் பாசம் இருக்கத்தானே செய்கிறது. அதுதான் போலும், கிழவன் தகர டின்னைத் தூக்கிக்கொண்டு, பக்கத்து வீடொன்றை நோக்கிப் போகிறான்.

ஒரு வீட்டில் கெஞ்சிக் கூத்தாடி, அந்தத் தகர டின் நிறைய தண்ணீர் வாங்கியபோது வீட்டுக்கு விளக்கேற்று வதுபோல் வீதிகளிலும் விளக்கேற்றி விட்டார்கள். அவசர அவசரமாகக் கிழவியின் தாகத்தைத் தீர்க்கும் பொருட்டு கிழவன் நடந்தபோது திடீரென்று என்ன நினைத்தானோ தெரியவில்லை. சுமை தூக்குபவன், தன் சுமையை கீழே இறக்கி வைத்துவிட்டு, பெருமூச்செறிந்து ஓரிரு நிமிடம் ஓய்வு கொள்வானே அதுபோல் ஒரு வீட்டு வாசலில் உட்கார்ந்தான். காற்று இதமாக வீசியது. அப்படியே தன்னை மறந்து தூங்கிவிட்டான். நேரமோ அசைந்தது—நகர்ந்தது—நடந்தது—ஓடியது. கிழவன் எழும்பவே இல்லை,

கிழவியோ கிழவனைக் காணாது கதறிக் கொண்டிருந்தாள். அவளின் அழுகையைக் கேட்ட தாடிக்காரன் இரக்கப்பட்டு தூங்கிக் கொண்டிருக்கிற கிழவனை எழுப்ப முயன்றான். தூங்குபவனை எழுப்பலாம்! தூங்கிவிட்டவனை எழுப்ப இயலுமா?

''அய்யோ...கெழவன் செத்துப் போயிட்டானே'' அந்த தாடிக்காரனின் சத்தம் அந்தத் தெருவையே நடுங்க வைத்தது!

செத்துப்போன கிழவனைப் பார்க்க பெருங்கூட்டமே கூடிவிட்டது. எங்கிருந்துதான் அப்படி ஒரு கூட்டம் கூடியதோ தெரியாது. தாடிக்காரனும் கிழவியிடம் கிழவன் செத்துப் போனதை அழுதுகொண்டே சொன்னான். கிழவி நம்பவேயில்லை. அவர்கள் சொல்வது பொய் யென்றே நினைத்தாள். அழுதாள்—கதறினாள்.புலம்பினாள்...

'கெழவன் சாகல்ல...அவன் என்ன வுட்டுட்டு ஓடிப் போயிட்டான்! நா அத நம்பவே மாட்டேன். இந்த குருடிய வைச்சிகிட்டு எப்படி வாழறதுன்னுதான் கெழவன் போயிட்டான். நீங்கள்ளாம் அத மறைச்சி பொய் சொல்றீங்க! நா நம்பவே மாட்டேன்!'

இப்படியே கிழவி அந்த இரவு முழுவதும் சத்தம் போட்டு அழுதுகொண்டே இருந்தாள். மறுநாள் பொலிஸார் வந்தார்கள், கிழவனுடைய பிணத்தை லொறியில் தூக்கிப் போட்டுக்கொண்டு போய்விட்டார்கள். அப்போதும் கிழவி நம்பவேயில்லை, அழுதுகொண்டே இருந்தாள்.

அந்தத் தெருவில் போகிறவர்களும், வருகிறவர்களும் ஏதோ ஒரு அதிசயத்தைத் தமிழ் சினிமாவில் அழுகின்ற கதாநாயகியைப் பார்ப்பதுபோல் 'ஓ'வென்ற சத்தம் போட்டு அழுது கொண்டிருக்கிற அந்தக் கிழவியை கூட்டமாக நின்று பார்த்து கொண்டிருந்தார்கள், அவர்களுக்கு

இந்தக் கிழவி அழுவது வேடிக்கையாக இருக்கிறது போலும்! அதுதான் பார்க்கிறார்களோ! அப்படிப் பார்த்துவிட்டு என்ன செய்வார்கள்? வழக்கம்போல் ஆண்டவன் கொடுத்திருக்கிறானே அனுதாப வார்த்தைகளை-வெறும் வார்த்தைகளை ஒரு சதத்துக்கு உதவாத அனுதாப வார்த்தைகளை அள்ளி வீசினார்கள்...

...பாவம்...கிழவி—கெழவிக்கு கண்ணே தெரியாது இவ்வளவு நாளும் கெழவிக்குத் துணையா கெழவன்தான் இருந்தான் இப்ப அவனும் செத்துப் போயிட்டான். இனி கெழவி என்ன செய்வாளோ?

பாவம்! கிழவி! தன்னை கிழவன் அனாதையாக நடுத் தெருவில் விட்டுப் போய்விட்டானென்றுதான் கிழவி நினைத்துக் கொண்டிருக்கிறாள். இப்போதும் கிழவனை நினைத்து நினைத்து அவள் அழுதாள். அந்த அழுகையின் ஊடே கதறினாள்.

'கெழவன் சாகல்ல...கெழவன் சாகல்லை...'

அந்தத் தெருவெங்கும் கிழவியின் சோக கீதம் எதிரொலித்தது. அவள் அழுவதைக் கேட்ட தாடிக்காரன் கண்ணீர் வடித்தான். அவனால் இந்த துன்பத்தை தாங்க முடியவில்லை. இருந்தாலும் என்ன செய்வது? மறுபடியும் கிழவியிடம் கிழவன் செத்ததை சொன்னான்...''நா பொய் சொல்லல்ல! நெசமாத்தான் சொல்றேன்; கெழவன் செத்துப் போயிட்டான்... என்ன செய்யிரது? நடந்தது நடந்து போச்சி...!'' கிழவிக்கு தன்னோடு பேசிய குரல் செத்துப்போன கிழவனுடைய கூட்டாளியான தாடிக்காரனின் குரலென்று நன்றாகத் தெரியும். அதனால்தான் கிழவன் செத்ததை நம்ப வேண்டியதாயிற்று. நம்பினாள்! நம்பியதோடு நிற்கவில்லை...மறுபடியும் அழத் தொடங்கினாள்... ''கெழவன் செத்துப் போயிட்டானா? அய்யோ நா இனி எப்புடி வாழ்வேன்! என்னால தனியா இருக்க முடியாதே...அடக் கடவுளே! நீ இப்புடியா அநியாயம்

பண்ணணும்? கெழவன வுட்டுட்டு என் உசுர கொண்டு போனா என்னா!''

கிழவியின் புலம்பலைக் கூட்டத்தில் நின்றவர்கள் ரசித்தார்கள்...ஆனால் தாடிக்காரனோ என்ன செய்வதென்று தெரியாது கலங்கினான்...இப்படியான உணர்வு அந்தக் கும்பலிலேயே இந்தத் தாடிக்காரனுக்கு மட்டும்தான் ஏற்பட்டிருக்க வேண்டும்!... தாடிக்காரனின் இதயத்தில் கருணை திரண்டது போன்ற ஒரு நினைவு...ஏழைக்கு ஏழை தானே இந்த உலகத்தில் துணை?...

''நீங்க அழுவாதீங்க! என்னால முடிஞ்ச மட்டும் ஒங்களக் காப்பாத்திரேன்...! பரதேசிக்கு பரதேசிதானே ஒதவி? எனக்கு நீங்க கூடப் பொறந்த சகோதரி மாதிரி... ஏதோ எனக்கு கெடைக்கிறதில ஒங்களுக்கும் தாறேன்...''

தாடிக்காரன் இதயத் துடிப்பைக் கேட்ட கிழவியால் நம்ப முடியவில்லை. இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா? என்று நினைத்தாள். அவளைப் பொறுத்தவரை அது ஒரு தெய்வத்தின் குரலென்றுதான் உணர்ந்தாள். அந்த மனித தெய்வத்தை தன் கண்ணால் பார்க்க வேண்டும் என்று கிழவி துடித்தாள். ஆனால் முடியவில்லை... ★

வீரகேசரி—வார வெளியீடு
23—7—1972

# அதே மனிதர்கள்

விரித்து வைக்கப்பட்ட பெரிய குடையைப்போல் தன் கிளைகளைப் பரப்பி நிற்கும் அந்த மாமரத்தின் நிழலில், பெரிய பெரிய கற்களை இரும்புச் சுத்தியால் தட்டித் தட்டித் சிறு சிறு கற்களாக உடைத்துக் கொண்டிருக் கிறான் ஆண்டிக் கிழவன். அவனைச் சுற்றி தூரத் தூர ஆணும் பெண்ணுமாய் இன்னும் பலரும் அந்த மாமரத்தின் நிழல் படும் இடத்தில் இருந்தவாறு கல் உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்......

கல் உடைக்கும் ஒவ்வொருவருக்குப் பக்கத்திலும் உடைக்கப்பட்ட சிறு சிறு கற்கள் தனித் தனிப்பகுதிகளாகக் குவிந்திருந்தன. அப்படி குவித்து வைக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் தாங்கள் உடைத்த கற்களை அப்படிக் 'குவித்து வைத்தால்தான்' அதை, கற்களை உடைத்து விற்கும் முதலாளியிடம் சுட்டிக் காட்டி கூலி கூடுதலாகக் கேட்கலாமென்ற நினைப்புத்தான் அவர்களை அப்படிச் குவிக்க வைத்தது. ஆண்டிக் கிழவனுக்குப் பக்கத் திலும் அப்படி ஒரு கற்குவியல் இருக்கத்தான் செய்தது. எனினும் அது மற்றவர்களின் குவியலை விடச் சிறியது. அதற்குக் காரணம் கிழவனின் வயதுதான்! வேலை செய்யக் கூடிய வயதா அது? இந்தத் தள்ளாத வயதிலும் தளராமல் வேலை செய்வதே பெரிய காரியம். இந்த நிலையில் மற்றவர்களுடன் எப்படித்தான் போட்டி போட முடியும்...?

கிழவன் தன் நெற்றியில் பூத்த வியர்வைத் துளிகளைக் கையால் வழித்து வீசி விட்டு, உடைத்த கற்களைப் பார்த்து நிம்மதியடைந்து, உடைக்கப்படாத—அவனால் உடைக்கப் பட வேண்டிய கற்களைப் பார்த்தான். மறுகணம் அவனை யும் மீறி பெருமூச்சும் கவலையும் வந்தன. எப்படியும் அந்தக் கற்களை இன்று உடைத்தே ஆக வேண்டும். அப்போதுதான் ஒரு நாள் சம்பளம் முழுசாகக் கிடைக்கும். இல்லாவிட்டால் அதிலும் வெட்டு விழுந்து விடும்....

கிழவனுக்கு அப்போது அவசரம் வந்துவிட்டது. சம்பளத்தில் வெட்டு விழக் கூடாதென்ற நினைவு அவனை அவசரப் படுத்தியது. அவசர அவசரமாகக் கிழவன் ஒரு பெரிய கல்லைத் தன்னருகே நகர்த்தி வைத்து அதை உடைக்க சுத்தியலை ஓங்கினான். மின்னல்போல் ஓர் நினைவு. கையிலிருந்த சுத்தியல் கீழே விழுந்து விட்டது...

'பெரிய பெரிய கற்களை நாலு தட்டுத் தட்டினால் சிறு சிறு கற்களாக உடைத்து விடலாம். ஆனால் சில ருடைய கல் நெஞ்சத்தை எவ்வளவுதான் நல்ல வார்த்தை களினால் தட்டினாலும் உடைக்க முடியவில்லையே!...

கிழவன் தன் நெஞ்சில் சூழ்ந்த நினைவுகளில் மூழ்கி எழுந்துவிட்டு மீண்டும் கல் உடைக்கத் தொடங்கினான். தன் முழுப் பலத்தையும் வரவழைத்து வேகமாக—வேக மாகக் கிழவன் இப்போது கல் உடைக்கின்றான்...

ஒரு காலத்தில் இதே கிழவன் துடிப்புடன் தோட்டத் தில் உழைத்தவன்தான். ஆனால் இன்றும் முதுமை வந்த பின்னரும் சுத்தியலைத் தூக்கி கல்லுடைக்க வேண்டிய கட்டாயம் கிழவனின் தலையில் எழுதப்பட்டிருக்கிறது. தலையில் அப்படி எழுதியிருந்தாலும் பரவாயில்லையே! ஆனால் அதைவிடப் பொல்லாத எழுத்தொன்று அவ னுடைய வயிற்றில் எழுதப்பட்டிருக்கிறதே. அதற்காக வாவது உழைக்கத்தானே வேண்டும். அதற்காகத்தான்

கிழவன், இன்றும் நடுநடுங்கும் கைகளால் சுத்தியலைப் பிடித்து உழைக்கின்றான்.

கிழவனுக்கு இப்போது மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கத் தொடங்கியது. ம்...அவனால் முடியவில்லை. கைகள் நடுங்கியது. தேகம் முழுவதும் வியர்வை நீராய் வடிந்தது. தாங்க முடியாத களைப்பு ஏற்பட்டது. சில நிமிடம் ஓய்வு எடுத்தால் நல்லதென்று நினைத்தான். அந்த நினைவுடன் முதலாளி இருக்கிறாரா என்று பார்த்தான். முதலாளி அந்தத் தோட்டத்திலுள்ள தன் வீட்டிலிருந்தவாறு கல்லுடைப்பவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்... கிழவன் பயந்து விட்டான். ஓய்வெடுக்கும் அவனுடைய எண்ணத்தில் மண் விழுந்தது. கைகளோ தானாகவே சுத்தியலைப் பிடித்து ஓங்கி ஓங்கித் தட்டத் தொடங்கின.

ம்...அவனால் முடியவில்லை. கைகள் அதிகமாகவே நடுங்கின. சும்மா இருக்கும்போது முதலாளி அதைப் பார்த்துவிட்டால் அவ்வளவுதான்...கிழவனின் சீட்டுக் கிழிந்து விடும். அப்புறம் இப்போது கிடைக்கும் ஒரு நேரச் சாப்பாட்டுக்கும் அரோகரா போடவேண்டியதுதான்.

கிழவன் பயந்து பயந்து வேலை செய்து கொண்டிருந்தான். முதலாளி அவனையே பார்த்தார். கிழவனுக்குக் கோபம் கோபமாக வந்தது...ம்...கிழவன் தானே, மெதுவாக அவனை வேலை செய்யச் சொல்வோம் என்று ஒரு கருணை வருமா முதலாளிக்கு... வரவே வராது! இப்படி எல்லோருக்கும் கருணை காட்டினால் அவர் இப்படி முதலாளி ஆகியிருக்க முடியுமா?

ஓரக் கண்ணால் கிழவன் முதலாளி இன்னமும் நிற்கிறாரா என்று பார்த்தான். நல்லவேளை, அவர் வீட்டினுள்ளே போய்விட்டார். 'அப்பாடா?' இவ்வளவு நேரமும் அவன் அடக்கி வைத்திருந்த பெருமூச்சு யாவும் கிளம்பின. சுத்தியலைக் கீழே வைத்தான். அதன் பின்னர் பக்கத்தில் வைத்திருந்த போத்தலில் உள்ள தண்ணீரில் நாலு மடக்கை

வாயில் ஊற்றினான். காலிலும் கையிலும் நடுக்கம் குறைந்தது. மனதுக்கும் உடலுக்கும் இதமாக வீசிய காற்று அவனைத் தழுவிச் சென்றது. அவன் சந்தோஷப்பட்டான்...

கிழவன் ஓய்வுக்குப் பின் சுத்தியலைக் கையிலெடுத்து வேலை செய்தபோது பின்பக்கத்திலிருந்து யாரோ மாரி முத்துவோடு பேசும் சத்தம் அவனுடைய காதில் விழுந்தது. கிழவன் திரும்பிப் பார்த்தான். அப்போது அவன் பார்த்த அந்தக் காட்சி—ஓ...எவ்வளவு அழகான இனிய காட்சி! மாரிமுத்துவுக்கு அவனுடைய மகன் தேத்தண்ணி கொண்டு வந்து கொடுக்கிறான். அது...கிழவனுடைய வாழ்வில் நடக்காத காட்சி. அது அவனை அழவே வைத்துவிட்டது.

கிழவன் அழுததை அவனுக்குப் பக்கத்திலிருந்து கல்லுடைக்கும் சுப்பன் பார்த்துவிட்டான். அவனுக்குத்தான் கிழவனின் துயரங்கள் நன்றாகத் தெரியுமே.

''ஒங்களுக்கு எம்புட்டு சொன்னாலும் கேக்க மாட்டேங்க. சின்னப்புள்ள மாதிரி நெனைச்சி நெனைச்சி அழுவுவீங்க...''

கிழவன் தன் கண்களைக் கசக்கியபடி சமாளித்தான். ''இல்ல சுப்பு! நம்ம மாரிமுத்துவுக்கு அவன் மகன் தேத்தண்ணி குடுக்கிறதைப் பாத்தேன்...பாத்தோன்ன, அட... நமக்கும் புள்ளைக இருக்கே. ஏதாவது புரயோசனம் இருக்கான்னு நெனைச்சேன். அழுக வந்திருச்சி...ம்...அந்தக் காலத்தில் இவன்கள வளத்து எடுக்க எம்புட்டு கஷ்டப்பட்டோம். ஆனா இன்னைக்கி தகப்பன பாக்கணும்னு நெனைக்கிறாங்களா? அப்படி நெனைச்சா நான் ஏன் கல்லொடைக்க வாறேன்...''

கிழவனின் கண்களில் மறுபடியும் நீர் சுரந்தது—'நா எப்பவோ வீட்டை வுட்டுட்டு போயிருப்பேன். ஆனா என்னோட ஆதரவா இருக்கிற பேரன் முத்துவாலயும், வேலை செஞ்ச காலத்தில் இருந்து ஆசையா வளர்த்த டைகர்

நாயாலயும்தான் போகாம இருக்கேன். பேரன் முத்துவை நெனச்சா போக மனசே வராது. ம்...அந்த டைகர் நாய்—அதுக்குள்ள நன்றி பெத்த மகனுக்கு இல்லியே! அவன் என்னா மனுசன்...?'

சுப்பனுக்கோ எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றி விட்டோம் என்று வருத்தமாகிவிட்டது, கிழவனை ஒருவாறு தேற்றினான்—'அதுனா நெசம்தாங்க...ஒரு மகனுக்குப் பெத்த தகப்பன பாக்கணும்னு நெனைப்பு இல்லேன்னா அவன் மனுசன் இல்ல. ஆனா இப்ப அத நெனச்சுப் பாத்து என்னா செய்யிரது? கவலைதான் கூடிக்கிட்டுப் போகும். ஆனதுனால நீங்க கவலையை மறந்துட்டு தைரியமா இருங்க.''

சுப்பனின் இந்தப் பதில் கிழவனுக்கு அடங்காத சிரிப்பை ஏற்படுத்தி விட்டது. எனினும் சிரிப்பை அடக்கிக் கொண்டான். அவனைத் தைரியமாக இருங்கள் என்று சுப்பன் சொல்கிறான். கிழவனைப் போன்ற ஏழைகள் எப்படி தைரியமாக இருக்க முடியும்? ஒருநாள் பொழுதைக் கழித்து விட, ஒவ்வொரு நிமிடத்திலும் அவர்கள் படுகின்ற துயரத்தில் தைரியம் எங்கிருந்து வரும்...? இந்தத் தள்ளாத வயதில் வேலைக்குப் போனால் ஒழுங்காக வேலை செய்ய வேண்டுமே என்ற பயத்திலும், வீட்டுக்குப் போனால் சாப்பாடு கிடைக்குமா என்ற நினைப்பிலும் கிழவன் தவிக்கிற தவிப்பு கிழவனுக்குத்தான் தெரியும். இதில் எப்படி அவனுக்குத் தைரியம் வரும்...? அதிலும் அவனுடைய மகனை நினைத்துவிட்டால் இருக்கிற தைரியமும் உதிர்ந்து விடுமே, அது உதிர்ந்த பின்னர் மகன்மீது பயம்தான் வரும். இந்தப் பயத்தில்தான் மகனோடு கிழவன் பேசுவதேயில்லை. அவன் மகனோ பேசினாலும் பேசாவிட்டாலும் அவனோடு பேசுவதேயில்லை.

தன் மகனும் அவனுடைய மனைவியும் தன்னோடு பேசாமலிருப்பது அந்த வீட்டில் இருந்து தான் சாப்பிடுவதால்தான் என்பது கிழவனுக்குத் தெரியும். கேவலம்...ஒரு

கிழட்டு வயிற்றுக்கு ஆக்கிப் போட அவர்களுக்கு விருப்ப மில்லை. கிழவன் வீட்டிலிருப்பதே பெரிய பாரமாக இருக் கிறதாம் அவர்களுக்கு...

கிழவன் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான். கைகள் மீண்டும் கல்லுடைக்கத் தொடங்கின. மனமோ மகனோடு பேசிக்கொண்ட நாட்களை நினைத்து நினைத் துப் பார்த்தது. ஓ...எவ்வளவு இனிமையான நாட்கள் அவை கள்! நினைத்தாலே நெஞ்சு இப்போதும் இனிக்கிறதே...! அப்போதெல்லாம் அவர்கள் இருவரும் நன்றாகத்தான் பேசிக்கொண்டார்கள். அப்போது என்றால் எப்போது?

கிழவன் பென்ஷன் வாங்காமல் தோட்டத்தில் வேலை செய்தபோது...அதன் பினனர் ஒரு நாள் கிழவன் தோட் டத்திலும் வேலை இல்லாமல் பென்ஷன் வாங்கிக்கொண்டு தன்னுடைய ஒரே துணையான மனைவியையும் இழந்து விட்டு மகனுடைய வீட்டிலேயே தங்க ஆரம்பித்தான். அன்றிலிருநதுதான் மகனும் அவனோடு பேசுவதே இல்லை. அவனுக்கும் மகனுக்கும் உள்ள உறவு அதற்குப் பிறகுதான் சிதைந்து நொறுங்கியது. அதை மகனே தன் வாயால் சொல்லிவிட்டான்...

'ஒரு வீட்டுல ஒருத்தன் ஒழைச்சி ஒம்பது பேர் சும்மா யிருந்து சாப்பிட்டா உருப்பட முடியுமா? வீட்டுல தெண் டச் சோறு கூடிப் போச்சி!'

தன்மகனே தன்னை 'தெண்டச்சோறு' என்று சொல்லி விட்டானே என்ற ரோஷத்தில்தான் கிழவனும் அன்றி லிருந்து கல்லுடைக்கக் கிளம்பினான்...நேரம் தேய்ந்து கொண்டே இருந்தது. நேரம் தேயத் தேயக் கிழவன் கற்களை உடைத்துத் தள்ளிக் கொண்டிருந்தான். அவனு டைய கைகள் நடுங்கி நடுங்கி உழைத்தன.

பெரிய கற்கள் மெல்ல மெல்ல சிதறிச் சிதறி சிறு கற்க ளாக உருமாறிக் கொண்டிருந்தன. கிழவனால் வேகமாக

மற்றவர்களைப்போல் வேலை செய்ய முடியவில்லை. ஆனாலும் கிழவன் இன்னும் கொஞ்சநேரம்—அந்த ஐந்து மணிச் சங்கு ஊதும் வரை—தானே என்ற நினைவு தந்த உற்சாகத்திலும் வேலை முடிந்து விட்டுக்குப்போனால் முத்துவைப் பார்க்கலாம் என்ற ஆசை மனதில் படரவிட்ட மகிழ்ச்சியிலும், சோர்வை மறந்து ஒரு வேகத்தை வரவழைத்துக் கொண்டு ஐந்து மணி வரை கல்லுடைத்தான்...

ஐந்து மணிக்குப் பின்னர் அன்றைய நாள் சம்பளத்தை மூன்றே மூன்று ரூபாவை—வாங்கிக் கொண்டு முத்துவின் முகத்தை இதயத்தில் தேக்கியவாறு அவசர அவசரமாக வீட்டுக்குப் போனான் கிழவன்.

'தாத்தா...வந்திட்டியா...? எனக்கு என்னா வாங்கியந்த?' வீட்டுக்குள் நுழைந்த கிழவனை முத்து முகமெல்லாம் புன்னகை மலர வரவேற்றான். முத்து மட்டுமா வரவேற்றான்...? டைகர் நாயும்தான் கிழவனைக் கண்டதும் ஓடோடி வந்து அவனுடைய காலருகே நின்று, தனக்குத் தெரிந்த ஒரே ஒரு பாஷையில் 'ம்...ம்...' என்று முணுமுணுத்து, தன் வாலை விசிறியைப் போல் ஆட்டிக் கொண்டு வரவேற்றது. அது சிரிப்பதும் பேசுவதும் வாலை ஆட்டித்தான்...கிழவன் தன் துயரத்தை எல்லாம் மறந்து சிரித்து விட்டு, வேலை விட்டு வரும் வழியில் வாங்கிக் கொண்டு வந்த பிஸ்கட்டை முத்துவுக்கும், டைகருக்கும் பிரித்துக் கொடுத்தான். அப்போது பார்க்க வேண்டுமே முத்து சிரித்த சிரிப்பை. கள்ளமில்லாத தன் உள்ளத்தைப் பிரதிபலிப்பது போல அழகாக இனிமையாகச் சிரித்தான். டைகரும் சிரித்தது...கிழவனுக்கோ சந்தோஷம் தாங்க முடியவில்லை. உள்ளமே குளிர்ந்ததைப் போல் இருந்தது.

முத்து 'கறு புறு' வென்ற சத்தத்துடன் பிஸ்கட்டைக் கடித்து தின்று கொண்டிருந்தான். டைகரும் மனிதர்களைப் போல் பிஸ்கட்டைத் தின்று கொண்டிருந்தது...இதையெல்லாம் பார்த்து கிழவன் ரசித்துக் கொண்டிருந்தான். அப்

போதுதான் முத்துவின் அம்மா குசினியிலிருந்து சத்தம் போட்டாள்...இந்த நேரத்தில் ஏன்தான் வீணாக சத்தம் போடுகிறாளோ! கிழவனுக்கு என்னவோ போலாகி விட்டது... 'டேய்...முத்து! அங்க என்னடா செய்யிற? ஒடனே இங்கே வாறியா? இல்லே நா அங்கே வரட்டுமா...?'

அவள் அங்கே வந்தால், தன் முதுகில் நாலு விழும் என்பதை உணர்ந்த முத்து அவசர அவசரமாக பிஸ்கட்டை தின்றுவிட்டு குசினிக்கு ஓட எழும்பினான். கிழவன் அவனருகே வந்து அவனுடைய காதில் மெதுவாக ஏதோ சொல்லி அனுப்பினான்...

முத்து போனதும் கிழவன் சற்று முன்னர், முத்துவின் அம்மா வீணாகப் போட்ட சத்தம், ஏனென்று நினைத்துப் பார்த்தான். இந்த சத்தமும் கூச்சலும், தான் அந்த வீட்டில் நுழைந்து விட்டால்தான் என்பது அவனுக்குப் புரிந்தது. புரிந்தாலும் என்ன செய்ய முடியும் அவனால்? அதனால்தான் அவன் கேட்டும் கேட்காததுபோல் இருந்தான்.

சில நிமிடங்கள் ஓடின. முத்துவும் திரும்பி வந்தான், ஆனால் அழுதுகொண்டே வந்தான்...'ஏன் தாத்தா! நீ கேட்டதுக்கு மட்டும் தேத்தண்ணி இல்லேன்னு சொல்லிட்டு அப்பாவுக்கு மாத்திரம் ஊத்திக் குடுக்குது...'

கிழவன் பதிலே பேசவில்லை. கண்களில் மட்டும் நீர் வடிந்தது...

'ஏன் தாத்தா அழுவுற? அம்மா தேத்தண்ணி தரலேன்னா! அப்பா கிட்ட சொல்லி அம்மாவை ஊத்தச் சொல்லு தாத்தா...ஏன் தாத்தா பேசாம இருக்க? அப்பாவோட பேச மாட்டியா?...ஏன் தாத்தா பேசமாட்டே...'

கிழவனுக்கு நெஞ்சை வலிப்பது போலிருந்தது... தானும் மகனும் பேசாதது இவனுக்கு எப்படித் தெரிந்

தது...கிழவன் ஒன்றும் பதில் பேசவில்லை. திடீரென்று ஓர் நினைவு துணிவாக வந்தது...மகனைப் பிடித்து இழுத்து நாலு வார்த்தை உள்ளத்தை சுடுவதுபோல் கேட்டு...

ஓ...அவ்வளவு துணிவு கிழவனிடம் இருக்கிறதா? இப்படி எத்தனை நாளைக்குத்தான் மகனுக்கு தந்தை அடங்குவது? அதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? மகனும் தான் ஒரு மரியாதை இல்லாமல் கேவலமாக ஏசுகிறான்... அவைகளை எத்தனை நாள்தான் பொறுத்துக் கொள் வது?...

மகனை நினைக்க நினைக்க கிழவனின் ஆத்திரம் கூடிக் கொண்டே வந்தது...சற்று முன்னர் ஒரே ஒரு கிளாஸ் தேத் தண்ணி தான் கேட்டதற்கு தனக்கு நேர்ந்த அவமானத்தை யும் நினைத்துப் பார்த்தான். கோபம் இன்னும் கூடியது. அந்தக் கோபத்தில் கிழவன் உள்ளமெல்லாம் பதற துடித் துக் கொண்டிருந்தான்...

அப்போதுதானா கிழவனுக்கு முத்துவின் தங்கச்சி ராணி தேங்காய்ச் சிரட்டையில் தேத்தண்ணி கொண்டுவர வேண்டும்? 'இந்தா...தாத்தா! தேத்தண்ணி...!' கிழவன் பொறுமையை இழந்தான். நேற்றெல்லாம் தம்ளரில் வந்த தேநீர் இன்று தேங்காய்ப் பூவும் எறும்புகளும் மிதக்க தேங்காய்ச் சிரட்டையில் வந்ததை அவனால் பார்க்க சகிக்கவில்லை. அதைப் பார்த்த கிழவன் ஆவேசமுற்றான். தேங்காய்ச் சிரட்டையைத் தூக்கி வீசினான்...தேங்காய்ச் சிரட்டை தேநீரைக் கொட்டிக்கொண்டே 'கடா-முடா...' சத்தத்துடன் நிலத்தில் உருண்டது... 'டேய்...! மனசில என்ன நெனைச்சிகிட்டு இப்புடி செய்யிற? பெத்த தகப்பங் கிற நெனைவே ஒனக்கி இல்லையா? நா இங்க இருக்கிரது புடிக்கலேன்னா சொல்லு, நா எங்கயாவது...போறேன். அதுக்காக இப்படி அநியாயம் பண்ணாதே! என்ன தகப்பனா மதிக்காட்டியும் பரவாயில்ல, ஒரு மனுசனா மதிச்சா போதும்...'

கிழவன் அழுதான், அவன் அழுவதைப் பார்த்த முத்துவும் அழுதான்...ஆனால் கிழவனுடைய மகன் அசையவில்லை. அவனுடைய இதயத்தை கிழவனின் கண்ணீர் அவ்வளவு எளிதில் மாற்றிவிடுமா?... 'ஏன் சிரட்டையில் குடிச்சா உள்ளுக்கா போகாதோ? ஏதோ பாவம்னு குடுத்தா மொறெப்போடு வேறு பன்ன வந்துட்டாரு... பெரிய தொரை! புடிக்கலேன்னா போய் தொலைய வேண்டியதுதானே...ஏன் ஈரச்ச பண்ணனும்...'

'ஆமாண்டா...நா போகத்தான் போறேன்...இந்த வீட்டவுட்டுட்டு போயிட்டா வாழ முடியாதுன்னு நெனைச்சியோ?...இம்புட்டு நாளும் கல்லுடைச்சி சாப்பிட்டேன்... இனியும் கல்லு ஒடைச்சி சாப்புடுரேன்...ஆனா ஒனக்கு மாதிரி கல்லு நெஞ்சு மட்டும் எனக்கில்லை...'

கிழவன் தன்னுடைய பெரிய சொத்தான பழைய வேட்டியையும், கிழிசல் துண்டுகளையும் ஊத்தைப் போர்வையையும் தேடிப் பிடித்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு முத்துவிடம்கூட சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பினான்...

கிழவன் போவதைப் பார்த்த முத்து... 'தாத்தா... போறியா? நானும் ஒன்னோட வாறேன்!...' என்று சத்த மிட்டு அழுதுகொண்டே அவனிடம் ஓடத் துடித்தான். ஆனால் அவனுடைய அப்பா அவனை தன்னுடைய இரும்புக் கரத்தால் சிறைபடுத்திக் கொண்டான். முத்து அழுதான், திமிறினான். கால் கைகளை உதறினான்...ம்... அவனுடைய அப்பாவின் கைகள் விலகுவதாக இல்லை. அவனுடைய இதயமே மாறவில்லை. கைகளா மாறப் போகிறது?

கிழவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை...அவனுடைய செவிகளில் முத்து அழுகின்ற சத்தம் சோக கீதமாக ஒலித்தது. பலவீடுகள் தள்ளி இருக்கும் ஒரு வீட்டிலிருந்து ராசையாவும் அவனுடைய மனைவியும் பேசிக்கொண்டது

கிழவனுடைய காதில் முத்துவின் அழுகையை விலக்கிக் கொண்டு ஊசியாக விழுந்தது...

'ஏன் பாத்துகிட்டு இருக்கீங்க. நம்ம ஆண்டிக் கெழ வன அவன் மகன் வெரட்டிட்டான்போல இருக்கே...பாவம் கெழவன்...வேற யாரும் அவனுக்கு இல்ல...நீங்களாவது ஏதாவது சொல்லி சமாதானம் செஞ்சு வைங்களேன்...' இது ராசையாவின் மனைவி.

'அட...நீ ஒன்னு சமாதானம் செய்யச் சொல்லிட்ட... ஒனக்கு ஒன்னும் வெலங்காது. இப்ப வெரட்டப்பட்ட கெழவன்தான் இதே மகன் வயசில அவன் அப்பனை வெரட்டினான். அப்பனை வெரட்டின பாவம் இப்ப மகன் ரூபத்தில் வந்து கெழவன வெரட்டுது...காலம்தான் மாறிப் போச்சி. ஆனா காட்சி மாறல்ல, மனுசனும் மாறல்ல. அதே மனுசன்தான் இப்பவும் இருக்கிறான்...ஆமா அன் னைக்கி கெழவன் செஞ்சதை இன்னைக்கி மகன் செய்யி றான்...' இது ராசையா. ஆண்டிக் கிழவன் வீடுகளைக் கடந்து டவுணுக்குப் போகும் பாதையில் நடந்து கொண் டிருந்தான்...திடீரென்று ஓர் உணர்வு அவனுடைய மனதை உறுத்தியது...தன் பின்னால் யாரோ நடந்து வருகின்ற சத்தமும் கேட்டது...கிழவன் திரும்பிப்பார்த்தான். டைகர் நாய் தன் வாலை ஆட்டிக்கொண்டே அவன் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தது...

இருக்கும் வரை உறிஞ்சிவிட்டு இல்லாதபோது உதறித் தள்ளும் அதே மனிதர்கள் இன்னமும் இருக்கத்தான் செய் கிறார்கள். ✶

**வீரகேசரி—வாரவெளியீடு, 17-2-74**

# பெரிய மனிதர்கள்

தரையிலிட்ட மீன், மூச்சு நிற்கும் கடைசி நேரத்தில், உடம்பை நெளிப்பதுபோல் அந்த கோயில் மடத்தில், வெளிப்பக்கத் திண்ணையில், தன் உடம்பை நெளித்து வளைத்து புரண்டு படுத்துக் கொண்டார், மொட்டைத் தலை சாமியார்.

சற்று முன்னர் அவர் போர்த்தியிருந்த போர்வை, முழங்காலுக்கு கீழே கால் பாகத்தை விட்டு விலகிவிட்டது. தலைப்பக்கம் ஈரக்காற்று ஊசியாக குத்தியதை தாங்க முடியாமல், அதை தடுப்பதற்காக போர்வையை தலைப் பக்கம் இழுத்தபோது கால் பாகத்தை அதனால் மூட முடிய வில்லை. தலையைக் காப்பாற்றப்போய் கால்கள் மாட்டிக் கொண்டன. கால்களையும் ஈரக்காற்று ஊசிபோல் குத்தித் தாக்கின. அதை தாங்க முடியாமல்தான் புரண்டு படுத்து தன் கால்களை மூடிக் கொண்டார். முன்பெல்லாம் சாமி யாருக்கு, பகலில் தூங்கினாலும், இரவில் தூங்கினாலும், போர்வையே தேவை இல்லை. எந்த வெயிலும், எந்த மழையும் அவருடைய உடம்பை அசைத்தும் பார்க்க முடியாது. அவ்வளவு கெட்டியான உடம்பு. ஆனால் இப்போதோ பகலிலும் ஒரு போர்வை தேவையாக இருக் கிறது. இரவில் இரண்டு இருந்தால்கூட போதாது போலிருக்கும். போர்வை இல்லாமல் அவரால் தூங்கவே முடியாது. அவருடைய உடம்பு அப்படி ஆகிவிட்டது. உடம்பு ரொம்பவும் இளைத்துப் போய்விட்டது. அவர் தப்பிப் பிழைத்ததே அதிசயம்தான்,

சாமியாருக்கு அப்போது கண்களில் மஞ்சளேறி, முகமெல்லாம் வாடி, வெளுத்து, கன்னங்கள் ஒடுங்கி, கை கால்கள் யாவும் மெலிந்து, தளர்ந்து, நடக்கவும் முடியாமல், உரித்துப் போட்ட கோழியைப் போல் ஏதேதோ பிதற்றிக் கொண்டு அந்த வீட்டு வாசலில் கிடந்தார்.

ஆள் பிழைத்ததே அபூர்வம்தான், அப்படி ஒரு பொல்லாத காய்ச்சல் அவருக்கு வந்தது. ஆரம்பத்தில் லேசாகத் தொட்டு, போகப் போக அவரைப் பேயாக ஆட்டிக் குலுக்கி, அவரது உடம்பையே ஒரு காய்ப்பு காய வைத்துவிட்டது. எப்படி இருந்த உடம்பு? வாட்டசாட்ட மாக இருந்த உடம்பு, பத்து நாட்களுக்கு முன்னர் வந்த காய்ச்சலின் பின், காற்றில்லாமல் சுருங்கிக் கிடக்கும் பலூன் போல் வத்தி வதங்கிப் போய்விட்டது. மனித உடம்பே இப்படித்தான். சின்ன அசைவுக்கும் ஆட்டம் கண்டு விடுகிறது. இதற்குள்தான் எத்தனை துடிப்பு? எத்தனை ஆசைகள்?

சாமியாரின் உடம்பில் இப்போது சதையே இல்லை. எலும்பும் தோலும்தான் மிஞ்சி உள்ளது. ஆளைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது.

ஃ ஃ ஃ

சாமியார் இப்போது சுகமாகி, நோய் நொடி இல்லாமல், பழையபடி குளித்து உடுத்தி உண்டு படுத்து தூங்கி விழித்து நடக்க ஆரம்பித்து விட்டார். அவர் நடப்பது, படுப்பது, நிற்பது, குளிப்பது எல்லாம் அந்த ஊரிலிருந்து கால் மைல் தள்ளி இருக்கும் அந்தக் கோயில் மடத்தில்தான். முன்பெல்லாம் நோய் வருமுன்னர், அவருக்கு வேண்டியவரான முருகன் கோயில் நிர்வாக சபைத் தலைவர் வீட்டு வாசல்தான், அவரின் வீடாக இருந்தது. காய்ச்சல் வந்ததும்தான் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டி வந்து விட்டது.

ஆஸ்பத்திரிக்குப் போய் ஒரு வாரம் இருந்துவிட்டு அப்படியே இங்கே வந்துவிட்டார். ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும், தலைவர் வீட்டு வாசலுக்குப் போகத்தான் சாமியார் துடித்தார். ஆனால் இந்தக் கோயில் மடத்துப் பண்டாரம் முத்தையாதான் வற்புறுத்தி, இந்தக் குளிர் காலத்தில தலைவர் வீட்டு வாசல்ல எப்படி படுக்கப் போறீங்க? ஒங்க ஒடம்புக்கு அது ஒத்துக் கொள்ளாதே! நோய் நல்லா சொகமாகிற வரைக்கும்மாவது இந்த மடத்திலேயே இருங்க. அங்க யார்தான் இருக்கா கவனிக்க...?' என்று ஒரு காரணத்தையும் காட்டி, அதற்கு மேல் தானே கவனித்துக் கொள்வதாக அவரை ஆஸ்பத்திரியில் இருந்தே மடத்துக்கு அழைத்து வந்து விட்டான்.

மடத்துக்கு வந்த சாமியார், இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே பழைய நிலைக்குத் திரும்பிவிட்டார். முன்னர்போல் அவர் இப்போது சாப்பிடவும், தூங்கவும், மடத்தைச் சுற்றி நடக்கவும் ஆரம்பித்து விட்டார். ஆனால் சும்மா சொல்லக் கூடாது. இந்தக் கோயில் மடத்துப் பண்டாரம் முத்தையா சாமியாரை ஆஸ்பத்திரியில் இருந்தபோதும், மடத்தில் இருந்தபோதும், தன் வேலைகளைக் கூட அப்படியே விட்டுவிட்டு, பார்த்துக் கொண்டிருந்தான். தன் அப்பாவே சாமியாராக இருப்பது போல் நினைத்து, அவரைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான். ஒரு தாயைப் போல் அவருக்கு வேண்டியதைச் செய்து கொடுத்தான். அவர் தேறி வந்ததற்கு ஆஸ்பத்திரி மருந்துதான் காரணமென்றாலும் அதைவிட மேலான முத்தையாவின் அன்புதான் மருந்துக்கு மேலான காரணமாகும். இந்த அன்பு லாபத்துக்காகவோ ஆதாயத்துக்காகவோ ஏற்பட்டதல்ல, என்றோ ஒரு நாள் ஒரு வீட்டு வாசலில், சாமியார் நோயில் முனங்கிக் கொண்டு படுத்துக் கிடந்ததைப் பார்த்து விட்டதில் உருவான அன்பாகும்.

படுக்கையில் போர்வைக்குள்ளே இருந்த சாமியார், போர்வையை நீக்கி, பூ ஆயப்போன முத்தையா இன்னும் வராததால் மனத்தில் ஏதோ ஒன்று புழுவாய் நெளிய படுக்கையிலிருந்து எழும்பி, போர்வையைக் கழுத்து வரை போர்த்திக் கொண்டு, மெதுவாக நடந்து அந்த மடத்தின் முன் பக்கத்து தூணின் கீழ் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

தூணில் சாய்ந்து கொண்ட சாமியார், பூந்தோட்டத்தில் ஒரு கையில் பூக்கூடையை வைத்துக் கொண்டு மறு கையால் பூ ஆய்ந்து கொண்டிருந்த முத்தையாவைப் பார்த்தார். முத்தையா மளமளவென்று மல்லிகைப் பூக்களையும் முற்றிய அரும்புகளையும் ஆய்ந்து கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய பார்வை இவர் பக்கம் திரும்புவதாகத் தெரியவில்லை. அவருக்கோ மனதில் அவனிடம் ஏதோ சொல்ல வேண்டிய அவசரம் சுமையாக கனத்தது. கடைசியில் அவரே அவனைக் கூப்பிட்டார்.

''முத்தையா...'' சாமியாரின் குரல் மிகவும் மெலிந்து போய் விட்டது.

தன் செவிகளில் மெதுவாக விழுந்த சாமியாரின் குரலைக் கேட்டுப் பதறிப்போய், பயந்து அவரிடம் ஓடி வந்தான். ''ஏன் வந்தீங்க? குளிர் காத்துப் பட்டா ஒடம்புக்கு ஆகாதே!''

''இப்ப ஒடம்பு கொஞ்சம் சொகமா இருக்கு. நம்ம முருகன் கோயில் தலைவரைப் பார்த்திட்டு வரலாம்னு நெனைச்சேன். என்னால இப்ப நடக்க முடியும். எதுக்கும் நீ துணையா வந்தா நல்லா இருக்கும்! வாறியா?''

''நானும் உங்களோட வாறேன். ஆனா உங்களால அம்புட்டு தூரம் நடக்க முடியுமான்னுதான் யோசிகிறேன்...''

சாமியார் விடவில்லை. ''நாளும் ஓடிப் போச்சி. இனியும் பாத்துக்கிட்டு இருக்க ஏலாது. தலைவருகிட்ட இருக்கிற நம்ம பணத்தை வாங்கிட்டு சாகற முந்தி கதிர் காமம் போயிட்டு வரணும். அந்த முருகனைப் பாத்துட்டா போதும். அதுக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டேன்!''

கடைசி வார்த்தைகளைச் சொன்னபோது, முன்னர் ஒரு முறை பார்த்த கதிர்காமம் சாமியாரின் கண்களில் தெரிந்தது. மறுவிநாடி ஒரு பரவசம் அவரின் தேகமெல்லாம் பரவி வழிந்தது. இரண்டு கைகளையும் தலைக்கு மேல் குவித்து ''முருகா'' என்று சொல்லிக்கொண்டு கும்பிடு போட்டார்.

சாமியார், தான் முருகன் கோயில் தலைவரிடம் கொடுத்து வைத்திருக்கும் பணத்தை வாங்கிக் கொண்டு, கதிர்காமம் போகப் போவதை எண்ணி எண்ணி மனதில் சந்தோஷப்பட ஆரம்பித்தார். இந்தக் கதிர்காமம் போக வேண்டுமென்றுதான் சாமியார் எவ்வளவு கஷ்டப்பட்டு, வாயைக் கட்டி, வயித்தைச் சுருக்கி ஐந்தாறு பெரிய நூறு ரூபா நோட்டை தலைவரிடம் கொடுத்து வைத்திருக் கிறார். அவருடைய இலட்சியமெல்லாம் இன்னும் ஒரு தடவை கதிர்காமம் போய் வரவேண்டும் என்பதுதான்.

முன்பு ஒரே ஒரு தடவை கதிர்காமத்துக்குப் போய் வந்திருக்கிறார். அன்று போகும்போது எப்படியோ போய், வரும்போதுதான் எப்படியோ வந்தார். தன் மனைவியும் அவளுக்குப் பிறந்த குழந்தையும், பிரவசத்தின்போது, செத்தே பிறந்ததால், அந்த துயரத்தைத் தாங்கமுடியாமல் தான் கதிர்காமத்துக்குப் போனார். போகும்போது ஒழுங் காகத்தான் போனார். வரும் போதுதான், தன் அழகான முடியை வழித்துத் தள்ளிவிட்டு, மொட்டைத் தலையுடன் காவி உடையணிந்து கையில் திருவோடு ஏந்தி சாமியாராக வந்தார்.

அன்று தன் தலைமுடியை அவர் வழித்துத் தள்ளும் போது முடியை வெட்டித் தள்ளுகிறோம் என்று சாமியார்

நினைக்கவில்லை. தன் மனதில் இருந்த துயரத்தை வெட்டித்தள்ளுகிறோம் என்றுதான் நினைத்தார். இப்போது தன் வாழ்வையே திசைதிருப்பிவிட்ட கதிர்காமத்துக்குத் தான் இப்போது திசை திருப்பப்பட்ட வாழ்வின் நிறைவுகளுக்காக போகத்துடிக்கிறார்...

அதற்காகத்தான் அவர் எவ்வளவோ கஷ்டப்பட்டு, அந்தத் தொகையைச் சேர்த்திருக்கிறார். அது சேர்ந்தது என்று சொல்வதைவிட, அதைச் சேரவைத்த திறமை அவருக்குத்தான் உண்டு. அந்த திறமையும் அறிவும் இருந்ததால்தான் அவர் முருகன் கோயில் வாசலில் பூஜை நேரத்திலும் திருவிழாக் காலங்களிலும் நின்றார். கோயிலுக்கு வருகின்ற பெரிய பெரிய மனிதர்களை, ''வாங்க வாங்க'' என்று வரவேற்பார், அவர்கள் இவரைப் பார்க்காவிட்டாலும், இவர் அவர்களைத் தன்பக்கம் திருப்பி வரவேற்பார். அந்தப் பெரிய மனிதர்கள் போகும்போது அவருக்கு சில்லறை போடுவார்கள். சிலர் நோட்டுகளும் போடுவார்கள். சிலர் தேங்காய் மூடி கொடுப்பார்கள்.

இப்படிச் சேர்த்த தொகைதான், தலைவரிடம் இப்போது இருக்கிறது. அதைக்கூட அவர் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து, தன்னிடம் இருந்தால் யாராவது திருடிவிடுவார்கள் என்ற பயத்தில்தான், கொடுத்து வைத்திருக்கிறார். தலைவரும் அவருடன் அன்புடன்தான் பழகினார். சாமியார் கொடுக்கும் ரூபாவின் தொகை கூடக்கூட அவரின் அன்பும் கூடியது. அந்த அன்பில் ஒருநாள் தலைவர் சாமியாரை தன் வீட்டு வாசலிலேயே படுக்கச் சொன்னார்.

ஃ ஃ ஃ

இருவரும் அந்த மடத்தைவிட்டு, வீதிக்கு வந்து, முருகன் கோயில் தலைவர் வீட்டை நோக்கி, நடக்க ஆரம்பித்தார்கள். முத்தையா வழக்கம்போல் நடந்து போனான். சிறிது தூரம் நடந்த பின்னர், சாமியார் தன்னுடைய நடை வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மெதுவாக பின்னால்

கஷ்டப்பட்டு நடந்து .வருவதை பார்க்க முடிந்தது உடனே அவன் மேலே நடக்காமல், அப்படியே நின்று சாமியார் வரும்வரை காத்திருந்தான். சாமியார் வந்த பின்னர் தன் நடையின் வேகத்தைக் குறைத்துவிட்டு அவரோடு சேர்ந்து நடக்கத் தொடங்கினான்.

சாமியாரோடு மெதுவாகப் பேச்சுக்கொடுத்தான் அவன்-''நா ஒன்னு கேக்கிறேனு கோவிச்சிக்காதீங்க. நம்ம முருகன் கோயில் தலைவர்கிட்ட பணத்தை கொடுத்து வைச்சிருக்கீங்க! இப்ப அதை கேக்கப்போறீங்க. அவருதர மாட்டேனு சொல்லிட்டா?'' இப்படிக் கேட்டுவிட்டு முத்தையா, தான் அப்படி கேட்டிருக்கக் கூடாது என்ற நினைப்பு நெஞ்சில் படவும் சமாளித்துக் கொண்டான். ''ஒரு பேச்சுக்குத்தான் கேட்டேன். கோவிச்சுக்காதீங்க.''

சாமியார் நடந்து கொண்டே பேசினார்—''தலைவரைப்பத்தி நீ தப்புக் கணக்கு போட்டுட்ட முத்தையா! அவரு எவ்வளவு நல்ல மனுசன் என்பது எனக்குத்தான் தெரியும். ஒனக்கு தெரியாது. ஒனக்கு பூ ஆயத்தான் தெரியும். நல்ல மனுசன் யாருன்னு ஆயத் தெரியாது. நீ நெனக்கிற மாதிரி அவரு இந்த பிச்சைக்காரசாமியார் பணத்தை வைச்சிகிட்டு இல்லேனு சொல்லிபுடுவாரா? அவரு லெச்சம் லெச்சமா வைச்சிருக்கிறவரு இந்த பிச்சை காசதான் எடுத்துக்குவாரா. அவருக்கிருக்கிறதை அனுபவிக்கவே ஆளு இல்லேனு எங்கிட்ட அவரே சொன்னாரு. ஒரு கோயிலையே பொறுப்பா பாக்கிற தலைவரு ஊர்ல பெரிய மனுசன். அவர் பேரைச் சொன்னாலே தோள்ல உள்ள துண்டை இடுப்புல கட்டிக்குவாங்க. இப்படி பெரிய மனுசனா இருக்கிற அவரா அதை வைச்சுக்க போறாரு.

''தலைவருக்கு தங்கமான மனசு. அதனால்தான் அவர் என்னை அந்த வீட்டில் படுக்கச் சொன்னாரு. அது மட்டுமா? ஏதாவது சாப்பிட குடிக்க தருவாரு. ஆஸ்பத்திரியில் இருக்கிற நேரம் வந்து பாத்தாரு.''

இப்போதுதான் முத்தையா ஆச்சரியம் முகத்தில் நிழலாட சாமியாரைப் பார்த்தான். தலைவர் சாமியாரை ஆஸ்பத்திரியில் வைத்துப் பார்த்தாரா?

''ஒரு நாள் பகல்ல நீ என்னப் பார்த்துட்டுப் போன கொஞ்ச நேரத்தில அவரு என்னப் பாரீக்க வந்தாரு. சொகமான்னு கேட்டாரு. நல்லா சொகமாக்கிட்டு வாங்கன்னு சொன்னாரு. எனக்கு ஒரே சந்தோஷம். அவ்வளவு பெரிய மனுசன் என்ன வந்து பாக்கணும்ணு அப்படி என்னா அவசியம் இருக்கு? அவரு நல்ல மனுசன்னால வந்து பாத்திட்டு போனாரு...''

அவரை ஆஸ்பத்திரியில் தலைவர் பார்த்து விட்டுப் போனது உண்மைதான். ஆனால் தலைவர் உண்மையிலேயே சாமியாரைப் பார்க்க வரவில்லை. வேறு யாரையோ பார்த்துவிட்டு போகும்போது, சாமியாரைப் பார்த்துவிட்டு, சாமியாரும் அவரைக் கண்டு விட்டதால், பார்க்காமல் போனால் ஏதும் சாமியார் நினைப்பாரென்று சாமியாரைப் பார்த்து சுகம் விசாரித்துவிட்டுப் போனார்.

இருவரும் தலைவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். முத்தையா கேட்டுக்கு வெளியேயே நின்றான். சாமியார் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். வீட்டு வாசலில் அழகாக விதவிதமாக மாக்கோலங்கள் போடப் பட்டிருந்தன. வீட்டின் வாசல் கதவுக்கு வெளிப்பக்கம் மாவிலை தோரணம் கட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. அதே கதவுக்கு மேலே சுவரில் திருஷ்டி கழிக்க ஒரு பூசணிக்காய் தொங்கவிடப்பட்டிருந்தது. தலைவரின் கார் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள காரேஜில் நிறுத்தப்பட்டிருந்தது. காரைப் பார்த்ததும் சாமியார் தலைவர் வீட்டில் தான் இருக்கிறார் என்று சந்தோஷப்பட்டார்.

காலில் சுடுநீரை ஊற்றிக் கொண்டவன்போல் ஓடிக் கொண்டிருந்த வேலைக்காரனை நிறுத்தி சாமியார் கேட்டார்; ''தலைவர் அய்யா இருக்காரா?''

''இருக்காரு; ஆனா இப்ப அவரை பார்க்க முடியுமோ என்னவோ? அவரு ஒரே வேலயா இருக்காரு. எதுக்கும் நீங்க போய்ப் பாருங்க'' என்று சொல்லிவிட்டு வேலைக் காரன் போய்விட்டான்.

தலைவர் இருக்கும் அறைக்குப் போனார். தலைவர் உள்ளே அறையில் ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார்.

''கும்பிடுறேன் அய்யா...'' சாமியார் இரண்டு கைகளால் பெரிய கும்பிடு போட்டார். சாமியாரின் குரலைக் கேட்ட தலைவர் குனிந்த தலையை நிமிர்த் தினார். தலை நிமிர்வதற்குள் ஒரு சுருக்கம் அவரின் நெற்றியில் விழுந்து மறைந்தது. இப்போதோ சிரித்துக் கொண்டிருந்தார்... ''ஓ நம்ம சாமியாரா? ஆஸ்பத்திரில யிருந்து எப்ப வந்தீங்க. இப்ப சொகம்தானே! நிக்கிறீங் களே! சும்மா ஒக்காருங்க...'' தலைவருக்கு சாமியாரைப் பற்றி தெரியும், எவ்வளவுதான் வற்புறுத்திச் சொன்னாலும் அவர் தன் முன்னால் சமமாக உட்கார மாட்டார் என்று... ''ஏதும் குடிக்கிறீங்களா?'' சாமியார் மறுத்துவிட்டார். அவருடைய உள்ளம் குளிர்ந்து போய்விட்டது. தலைவரின் கௌரவம் அந்தஸ்து இந்தச் சாமியாரோடு சேர்ந்து குடிக்கக் கூடியதா? தலைவர் குடிக்கிறேன் என்கிறாரே! ஓ...எவ்வளவு பெரிய பரந்த நெஞ்சம் அவருக்கு...

''அதெல்லாம் வேணாங்க...ஆனால்...'' நம்ம கணக்கை பாத்து கொடுத்து வைச்சதத் தந்தீங்கன்னா புண்ணியமா இருக்கும். நானும் கதிர்காமம் போகலாம்னு இருக்கிறேன்...''

தலைவர் அந்த வீடே அதிர சத்தம் போட்டார்... ''நீங்க எங்கிட்ட கொடுத்து வச்சிருக்கீங்களா? ஒன்னுமே புரியலியே!''

சாமியார் பதறிவிட்டார். அவருடைய உடம்பில் உயிரே இல்லை. உள்ளம் அதற்கு முன்னரே அதைக்

கேட்டு செத்துப்போய் விட்டது. ''அதாங்க நா சிறுக சிறுக கொடுத்து வைச்ச தொகை... அறுநூறு ரூபா அதைத் தான் கேக்கிறேன்''

''அறுநூறு ரூபாயா? எப்ப என்கிட்ட கொடுத்தீங்க சாமியாரே! நல்ல கதை சொல்றீங்களே. உங்ககிட்ட நானாவது ரூபா வாங்கறதாவது, எங்கிட்ட பணமே இல்ல அதுனாலயா? நாலு பேரை கூப்பிட்டு பேசுவோம்...''

சாமியாரால் பேச முடியவில்லை. கண்களில் நீர் வடிந்தது.

''அய்யோ கடவுளே! இந்த அநியாயத்தைக் கேக்க மாட்டீயா?''

தலைவர் பதில் பேசவில்லை. ஆனால் அவர் பதில் வேலைக்காரன் வழியே வந்தது. அவர் சொன்னபடி சாமியாரின் கையைப் பிடித்து, 'தரதர'வென்று இழுத்துக் கொண்டுபோய் வீட்டு வாசலுக்கு வெளியே, முத்தையா நின்ற இடத்தருகே நிறுத்திவிட்டுப் போய்விட்டான், முத்தையாவுக்கு உண்மை புரிந்துவிட்டது. சாமியார் மொட்டைத்தலையில் தன் கைகளால் அடித்துக் கொண்டே அழுதார்.

அப்போது தலைவர் வீட்டருகே கப்பல் போன்ற ஒரு பென்ஸ் கார் வந்து நின்றது. கதவுகள் 'படபட'வென்று திறந்து மூடிக்கொண்டன. பெரிய மனிதர்கள் மூன்று நாலு பேர் கோட்டும் சூட்டும் போட்டவர்கள் இறங்கி கேட்டைத் திறந்து கொண்டு வீட்டின் உள்ளே ஓடினார்கள்.

''கங்கிராஜ்லேசன்ஸ் மிஸ்டர் நாகலிங்கம், நவ் யூ ஆர் ஏ ஜே பி!''

தலைவரின் கையை குலுக்கிக் கொண்டார்கள். ஒருத்தர் மாலை போட்டார்.

முருகன் கோயில் தலைவர் இப்போது அரசாங்கத் தால் நியமிக்கப்பட்ட ஓர் சமாதான நீதிபதி. இன்றுதான்

அச்செய்தி எட்டியிருக்கிறது. இனி அவர் மிஸ்டர் நாக லிங்கம் அல்ல. மிஸ்டர் நாகலிங்கம் ஜே...பீ...

காரில் வந்தவர்கள் ஒவ்வொருவராக தலைவரைப் பாராட்டிக் கெகண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் தலைவர் ‘‘நன்றி’’ சொல்லிக் கொண்டார். திடீரென்று அந்த அறையில் சத்தம் போட்டுக்கொண்டே சாமியார் நுழைந்தார். வந்தவர்கள் பயந்து போனார்கள். தலைவர் சிரித்துவிட்டு சொன்னார் ...‘‘அவரு பைத்தியம். அதனால் கத்தறார். ஏய் சுப்பா? இந்தப் பைத்தியத்தை பிடிச்சி வெளியே தள்ளு.’’ வேலைக்காரன் ஓடிவந்து சாமியாரின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான். உள்ளே எல்லோரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் சிரிப்பில் சாமியாரின் அழுகை தேய்ந்து போய்விட்டது. ★

# பெரிய இடத்து நாய்!

டவுண் முழுவதையும் ஒரு அலசு அலசிவிட்டு கிடைத்த தைத் தூக்கிப்போட்டுக்கொண்டு, டவுனுக்கு அருகிலுள்ள ஒரு வீதியின் உள்ளே, அந்த நாய் வண்டியை தள்ளிக் கொண்டே போனான் அவன். அந்த வீதி டவுனுக்கு அருகில்தான் இருக்கிறது. ஆனால் டவுண் வீதிக்கும், அந்த வீதிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இரவு நேரத்தில் பார்த்தால், டவுன் வீதிகளில் மெர்க்குரி பல்புகள் வெளிச்சத்தை அள்ளி வீசும். வீதிகளோ வெளிச்சத்தில் மிதக்கும். ஆனால் இந்த வீதியோ மங்கலாகத்தான் இருக்கும். லைட் தூண்களில் உள்ள பல்புகள், லாந்தர் லாம்பைவிட மோசமாக 'மினுக் மினுக்' போட்டு எரியும். இப்படி வீதியில்தான் வித்தியாசம். ஆனால் மனிதர்களிடம் அந்த வித்தியாசமே இல்லை. அங்கே டவுனில் உள்ள மனிதர்கள்தான் இங்கேயும் இருக்கிறார்கள். இங்கே இருக்கிற மனிதர்கள்தான் அங்கேயும் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த வீதிகளில் உள்ள ஆடு, மாடு, நாய், பூனைகள் டவுனிலுள்ள ஆடு, மாடு, நாய், பூனைகளைப்போலவே திரிகின்றன. மனிதர்களிடமே வித்தியாசம் இல்லாதபோது ஆடு, மாடு, நாய், பூனை யிடமா வித்தியாசம் இருக்கப்போகிறது,

டவுனைப்போலவே இந்த வீதியிலும் நாய்கள் திரிகின்றன. அவைகளைப் பிடிக்கத்தான் இந்த நாய் வண்டி அந்த வீதியில் போகிறது. இதுவரை நாலே நாலு நாய் களைத்தான் அவனால் பிடிக்கமுடிந்தது. இன்று எப்படியும் பத்து நாய்களைப் பிடிக்க வேண்டும். அந்த வீதியில் பத்து நாய்கள் என்ன, அதற்கு அதிகமாகவே பிடிக்கலாம்,

காரணம் நாய்கள்தான் மனிதர்களைப்போல திரிகின்றனவே, மனிதர்களைத்தான் பிடிக்க முடியாது. நாயையாவது பிடிக்கலாமே!

நாய்வண்டி மெதுவாக, சத்தம்போட்டுக்கொண்டே நகர்ந்தது. அவன் கூடுமானவரை சத்தத்தைக் குறைத்துக் கொண்டே வண்டியைத் தள்ளினான். அதில் அவன் கவனம் செலுத்தாவிட்டால் அந்த வீதியில் 'தடதட' வென்ற சத்தம் எதிரொலிக்கும். அந்தச் சத்தத்தைக் கேட்டு நாய்கள் ஓடி ஒழித்துவிடும். அதனால்தான் ஒரு லாவகத்தோடு சத்தமில்லாமல் வண்டியைத் தள்ளினான். அப்படித் தள்ளிக்கொண்டுபோக அவனால் முடியுமா? ஏன் முடியாது? இன்றா நேற்றா அந்த வண்டியைத் தள்ளுகிறான்? பல மாதங்கள் தள்ளி பல நாய்களைப் பிடித்திருக்கிறான்.

அவனுடைய தோள்பட்டையில் எமனுடைய கையிலிருப்பதாகச் சொல்வார்களே அதுபோல ஒரு கயிறு இருந்தது. காலில் செருப்பேயில்லை. வாயில் வெற்றிலை நிறைய இருந்தது. வழிநெடுக பாதை காட்டுவதுபோல அந்த வெற்றிலையைத் தின்று, மென்று துப்பிக்கொண்டே வந்தான். அது அடையாளம் போட்டுக்கொண்டே இருந்தது.

நாய்வண்டி முன்னே போய்க் கொண்டிருந்தது. அவன் அதைத் தள்ளிக்கொண்டே நடந்து கொண்டிருந்தான். அப்போது கூட அவனுடைய கண்கள் வீதியின் இரு பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்து அவைகள் தன் கடமையைச் செய்தன. அவனுடைய கால்கள், கைகள் தங்கள் கடமையைச் செய்யும்போது அவனுடைய கண்கள் மட்டும் சும்மா இருக்கலாமா? அது சும்மாவே இருக்கவில்லை. சக்கரம் போல் அங்குமிங்கும் சுழன்றன, எதையோ தேடின. எதைத் தேடியிருக்கும்? எமன் உயிரைத் தேடுவான்... இவனோ

நாயைத் தேடுகிறான். அவ்வளவுதான். அதுவும் லைசென்ஸ் இல்லாத நாய்களை.

வண்டியைத் தள்ளிய அவன் நெற்றியில் உதிர்ந்த வியர் வைத் துளிகளைக் கையால் துடைத்து வீசிவிட்டு தொடர்ந்து வண்டியைத் தள்ளாமல் நிறுத்திவிட்டு வீதியோரத்தில் கிடந்த ஒரு கல்லின்மீது உட்கார்ந்து நெஞ்சு வரை இருந்த சட்டைப் பொத்தான்களைக் கழட்டி விட்டு உள்ளே வாயால் காற்றை 'பூ பூ' வென்று ஊதி னான். உள்ளே போன காற்று நெஞ்சோடு ஒட்டிக்கிடந்த சட்டையைப் பிரித்து வைத்தது. என்ன செய்வது? சரியான வெய்யில்... தலைக்குமேலே நெருப்பைக் கொட்டியது போல.

பத்து நிமிடம் ஓய்வெடுத்த அவன், தூரத்தில் ஒரு நாய் நிற்பதைக் கண்டதும் அதைப் பிடிக்க கயிறைப் பின் பக்கம் மறைத்துக்கொண்டு மெதுவாக நாயருகே போனான். நாய் அப்படியே நின்றது. அதற்கு என்ன தெரியும்? சும்மா முழித்துக் கொண்டிருந்தது. நாய் வண்டிக்காரன் அந்த நாயின் அருகே போய் கயிறை எடுத்து ஒரு சுருக்குப்போட்டு ஒரு வீசு வீசினான். சுருக்கு டக்கென்று நாயின் கழுத்தில் விழுந்து கழுத்தைச் சுற்றியது. எல்லாம் கண் இமைக்கும் பொழுதில் நடந்தது. நாய் தப்புவதற்காக தன் தலையை ஆட்டி அசைத்தது. சுருக்கு இன்னும் இறுகியதுதான் மிச்சம். அதனால் தப்பவே முடியவில்லை. தப்பவே முடியாது. எமனிடம் கூடத் தப்பலாம். இவனிடமா தப்பமுடியும்?

நாய் பயங்கரமாய்ச் சத்தம் போட்டது. கேட்கவே பாவமாக இருந்தது. பாதையில் போன சிலர் பெரிய மனி தர்கள்-ஜீவகாருண்ய புருஷர்கள் அவனை "வாயில்லாப் பிராணியைப் பிடிச்சுக் கொல்றானே" என்று முணுமுணுத் தார்கள். ஆனால் உண்மையில் அவனா கொல்கிறான்? சட் டந்தான் கொல்கிறது. லைசென்ஸ் இல்லாமல் திரியும் நாய் களைத்தான் பிடித்துக் கொல்கிறார்கள். அவனும் பிடித்துக் கொடுக்கிறான். அப்படிக் கொடுத்தால்தான் அவனைக்

கொல்லும் பசியிடமிருந்து அவன் தப்பலாம். ஒரே ஒரு நாளைக்கு அவனுக்குப் பத்து, பன்னிரண்டு நாய் பிடித்தால் போதும். அதற்காகத்தான் இப்படித் திரிகிறான் அவன்.

இப்படி நாய் பிடிப்பது நிரந்தர தொழிலும் அல்ல. ஏதோ ஒரு காலத்தில் கைகொடுக்கும் தொழில். கைகொடுக்கும் தொழிலென்றாலும் அவன் கைவீச்சில் தான் எல்லாமே இருக்கிறது. இல்லாவிட்டால் சும்மா வண்டியைத் தள்ளிக்கொண்டு அந்த வீதியில் சுற்று வதில் அர்த்தமேயில்லை. எத்தனை நாய் பிடிக்கிறானோ அத்தனை நாய்க்குத்தான் காசு.

இதுவரை அரை மைலுக்கு மேல் வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்தான். இங்கே ஒரு நாய்க்கு மேலே கிடைக் கவேயில்லை. டவுனில் பிடித்த நாலும் இப்போது பிடித்த ஒன்றும்தான் உள்ளே கிடந்தன. ஆனால் வேறு ஒரு நாயும் இந்த வீதியில் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, கண் ணிலாவது படவேண்டுமே! ம்... ஒன்றுகூட படவேயில்லை. இங்கே நாய்களே இல்லையா? எங்காவது ஓடிவிட்டதா? ம்... எங்காவது ஓடித்தான் இருக்கும். புத்திசாலி நாய்கள் வண்டியைக்கண்டதுமே மறைந்துவிட்டனபோலும். வண்டி நகர நகர வண்டிக்குள்ளே கிடந்த நாய்கள் சத்தம் போட் டுக்கொண்டிருந்தன. சில நாய்கள் உள்ளேயே விளையாட் டுப் போட்டன. அதற்கு காரணம் கடைசியாகப்பிடிபட்டது பெட்டை நாய், மற்றது எல்லாமே ஆண். இனி கேட்கவா வேண்டும்? வண்டிக்குள்ளேயே ஒன்றுடன் ஒன்று புரண்டு தாவி... சே, சொல்லவே அசிங்கம்.

வண்டியை நிறுத்திய அவன் வண்டியில் சொருகியிருந்த ஒரு தடியை எடுத்து உள்ளே கிடந்த நாய்களைக் குத்தி னான். நாய்கள் வலி தாங்க முடியாமல் சத்தம் போட் டன. வண்டியின் பின்னால் கூடியிருந்த வாண்டுக் கூட்டம் கைதட்டியது.

மீண்டும் வண்டி நகர்ந்தது. அவனுடைய கைகள் வண்டியைத் தள்ளின. கால்கள் நடந்தன. கண்கள்

வேட்டை நாயைப்போல் சுற்றி அலைந்தன. அப்படிச் சுற்றிச் சுற்றி ஒரு நாயைக் கண்டுபிடித்தான். பிறகென்ன வண்டியை நிறுத்திவிட்டு கயிறை மறைத்துக்கொண்டு மெதுமெதுவாகப் போனான். சற்று தூரத்தில் அழகான ஒரு நாய் நின்றது. அது பார்க்கவே அழகாயிருந்தது. வால் விசிறியைப்போல் அசைந்தது. வண்டிக்காரன் மெதுவாக அதன் பின்னால் போய் ஒரே ஒரு சுருக்குப்போட்டு அதைப் பிடித்தான். நாய் தடுமாறியது. அசைந்தது. குதித்தது. கயிறுதான் மேலும் இறுகியது. நாயால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வண்டிக்காரன் அதைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு வண்டியருகே போய் வண்டியின் உள்ளே நாயைத் தள்ளினான். பிறகு ஏதோ செய்து கயிறைக் கழட்டி விட்டான். அழகான அந்த நாய் இப்போது உள்ளே. அது மட்டுமா? மொத்தம் ஆறு நாய், ஆறு பிடித்தால் போதும்...சோறு கிடைக்கும்.

வண்டி நகர்ந்தது. வண்டிக்குப் பின்னால் நின்ற வாண்டுக் கூட்டத்தில் இருந்த வாண்டு கடைசியாகப் பிடித்துப் போட்டதை அடையாளம் கண்டு ஓடியது. "ராஜா! உன் நாயைப் பிடிச்சுகிட்டுப் போறாங்க."

வீட்டில் படித்துக் கொண்டிருந்தான் ராஜா. ரோட்டுக்கு ஓடிவந்தான். அவன் இதயம் வெடிப்பது போலிருந்தது. முனிசிப்பல் வண்டியின் உள்ளே சொறி பிடித்த நாய்களுடன் அவன் ஆசையாக வளர்த்த நாய் மணி!

அவனால் கண் கலங்கத்தான் முடிந்தது. மணி சின்னக் குட்டியாக இருந்த காலத்தில் இருந்து அவன் வளர்க்கிறான். அதைப் பிரிய அவனால் முடியாது. படுக்கும்போது கூட அதைப் பக்கத்தில் படுக்க வைப்பான். அவ்வளவு பிரியம் அதன்மேல் அவனுக்கு. அதை அவனால் பிரிய முடியாது. வண்டிக்காரனிடம் கெஞ்சினான். 'ஐயா! இப்ப புடிச்சது என் நாய் தந்திடுங்க."

''இப்ப புடிச்சது உன் நாயா? ஏன் லைசன்ஸ் வாங் கல்ல...லைசென்ஸ் வாங்காட்டியும் பரவாயில்ல...ஏன் கட்டிப் போடல்ல? நாயைத் திருப்பித் தரமுடியாது. நாளைக்கு அதை சுட்டுப் போடுவம் ம்... போ, போ...''

ராஜாவுக்கு வியப்பாக இருந்தது. நாய்க்கு லைசென்ஸ் வேண்டுமா? என்ன லைசென்ஸ்? அவனுக்கும் அதற்கும் பாசம் இருக்கிறதே...அதற்கே லைசென்ஸ் இல்லை. இவன் லைசென்ஸ் வேண்டுமென்கிறானே!

''அப்புடி சொல்லாதீங்க. எப்படியாவது தந்திருங்க. அது இல்லாம என்னால இருக்க முடியாது.''

மணி கூட்டில் தவித்தது. ராஜா வெளியே தவித்தான். வண்டிக்காரன் அசையவில்லை. கஷ்டப்பட்டு பிடித்ததே ஆறு. அதில் ஒன்றுபோனால் ஐந்துதான். ''அதெல்லாம் தர முடியாது தம்பி. இது பெரிய இடத்து சங்கதி, முனிசிப்பல்ல வந்து கேக்கணுமே. நெறைய தெண்டம் போடுவோம். அதுக்குத்தான் வேற நாய் வளர்க்கலாமே!''

மணியைப் பறிகொடுத்து விட்டு வேறு நாய் வளர்க்க வேண்டுமா? அவனால் முடியவே முடியாது. எத்தனை நாய் வளர்த்தாலும் மணிபோல் வராது என்பது அவ னுடைய நினைவு. அந்த வீட்டில் மணியை அவனாகத் தான் வளர்த்து வருகின்றான். அவனுடைய அப்பாவுக்கும் அண்ணனுக்கும் அதை வளர்ப்பதில் பிரியமில்லை. எப் போதோ துரத்தியிருப்பார்கள். ராஜா அதை வளர்ப்ப தால் சும்மா இருந்தார்கள்.

ராஜா கெஞ்சிக்கொண்டே பின்னால் போனான். திடீ ரென்று ஓரிடத்தில் வண்டி நின்றது. ராஜா நினைத்தான், நாயைத்தான் எடுத்துத் தரப் போகிறான் என்று. ஆனால் அவனோ இன்னும் ஒரு நாயைப்பிடிக்க கயிறை வீசினான். அட! வீசியேவிட்டான்.

ராஜாவுக்குப் பயமாக இருந்தது. இப்படித்தான் மணி யையும் பிடித்திருப்பானோ என்ற எண்ணம் அவன் மனதில்

ஓடியது. அந்த எண்ணத்துடன் பிடிபட்ட புதிய நாயைப் பார்த்தான். மீண்டும் பழைய கதைதான். நாய் வண்டியின் உள்ளே போய்விட்டது. உள்ளே போவதற்கு முன்னர் அதுவும் என்னென்னவோ சண்டித்தனம் செய்து பார்த்தது. ஒன்றும் சரிவரவில்லை.

நாயின் கழுத்திலிருந்து கயிறைக் கழட்டிய வண்டிக் காரன் அதைச் சுருட்டி வைத்துக்கொண்டு வண்டியைத் தள்ளிக்கொண்டே வந்து ஒரு தேத்தண்ணிக் கடையின் முன்னே நிறுத்தினான். ராஜா கெஞ்சினான். வண்டிக் காரன் உடனே அவன் பக்கம் திரும்பி, ''இந்தப் பாச்சா வெல்லாம் எனக்கிட்ட பலிக்காது தம்பி! பேசாம போ'' என்று சொல்லிவிட்டு தேத்தண்ணிக் கடையின் உள்ளே போனான். ராஜா வாசலில் நின்று போராடினான். அவ னுடைய போராட்டத்தைத் தெரிந்து கொண்ட ஒருவர் அதை வண்டிக்காரனிடம் சொல்லி ஆதரித்தார். ''சரி, சின்னப்பொடியன்தானே, ஆசையோட வளர்த்திருக்கிறான் கொடுத்திரப்பா.''

வண்டிக்காரன் விடுவானா? ''ஆமாம்! இப்ப கொடுக் கச் சொல்லுங்க. இதே நாய் யாரையாவது கடிச்சிருந்தா முனிசிப்பல்காரன் என்னா செய்யிறான்னு கேப்பீங்க. அதெல்லாம் நம்மக்கிட்டே நடக்காது'' என்று சொன்னவன், இப்போது ராஜாவின் பக்கம் திரும்பி ''பேசாம போ தம்பி, இனி கடவுளே வந்தாலும் நாயைத் திருப்பித் தரமாட் டேன்'' என்றான்.

ராஜா அழுது கொண்டிருந்தான். வண்டிக்காரன் வண்டியுடன் நடந்தான். ஒரு ஐம்பது யார் நடந்திருப்பான். யாரோ கைதட்டிக்கூப்பிடும் சத்தம் கேட்டது. தன்னையே கூப்பிடுவதுபோல் ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. வண்டியை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தான். லோங்ஸ் போட்ட ஒருவன் ஓடிவந்தான். கை தட்டிக் கொண்டே ஓடி வந்தான். வண்டிக்காரன் மௌனமாக நின்றான். லோங்ஸ் போட்டவன் அவன் அருகில் வந்தான். அவன் பின்னால்

இருவர் வந்தார்கள். ஒருத்தர் தொப்பை வயிறு. மற்றவன் அவர் மகன்போல் இருக்கிறது.

லோங்ஸ்காரன் பேசினான். பேசினான் என்பதை விட சத்தம் போட்டான் என்றே சொல்ல வேண்டும். ''என்னப்பா! ஊர்ல உள்ள நாய்களைப் புடிக்கிறேனு இவருடைய நாயைப் புடிச்சிட்டியே. இவரு யார் தெரியுமா? இவருதான் முனிசிப்பலுக்கே முந்தி மெம்பர்'' வண்டிக்காரன் உற்றுப் பார்த்தான். தொப்பை வயிறு உள்ளவர் முந்தி முனிசிப்பல் உறுப்பினர்தான். இருந்தாலும் தயங்கினான்.

லோங்ஸ்காரன் மேலும் கத்தினான். ''ஏம்பா பாத்துகிட்டு இருக்க? இவரு நெனைச்சாருன்னா இன்னும் ஆயிரம் நாயை வாங்கி வளர்க்கலாம். ஆனா இது பழகின நாய், அதனாலதான் கேக்கிறாரு. பேசாம கொடுத்திடு. இவர் யாருன்னு தெரியும்தானே?''

வண்டிக்காரன் நடுங்கினான். பதிலே பேசாமல் கடைசியாகப் பிடித்த நாயைப் பிடித்து வெளியே விட்டான். அது வாலை ஆட்டிக் கொண்டே தொப்பை வயிறு உள்ளவரிடம் சென்றது. நாயை தர முடியாது என்று மறுத்துப் பேச அவனால் முடியவில்லை. மறுத்துப் பேசினால் வீண் பொல்லாப்புத்தான் வரும். முனிசிப்பல் வேலை, நாய் பிடிக்கும் வேலைதான். போனாலும் போய் விடும். நாய் சாதாரண நாயில்லையே...பெரிய இடத்து நாய்.

வண்டிக்காரன் பேசாமல் வண்டியைத் தள்ளிக் கொண்டே போனான். அவனுக்குச் சரியான ஆத்திரம். கஷ்டப்பட்டுப் பிடித்த ஆறு நாயில் ஒன்று குறைந்து விட்டதே.

ராஜா அவன் பின்னால் அழுது கொண்டே போனான். அவனுடைய அழுகைக்குரல் வண்டிக்காரனுக்கு எரிச்சலாக

இருந்தது. முன்னர் ஆத்திரம் வந்தது பிடிபட்ட நாய் போய்விட்டதால். இப்போது எரிச்சல் வந்தது இந்தச் சின்னப்பயல் விடாமல் துரத்திக் கொண்டு வந்து நாயைத் தருமாறு கேட்கிறானே. அதனால் அடிக்கடி திரும்பித் திரும்பி ஏதோ சொன்னான். ''மரியாதையா போயிரு, நாய் தரவே மாட்டேன். இதென்ன வெளையாட்டுன்னு நெனச்சியா? போ, போ. போயி யாரையாவது கூட்டிக் கிட்டு முனிசிப்பலுக்கு வா...போ.''

ராஜா போகமாட்டேன் என்றான். அழுகை 'ஓ' வென்று வந்தது. வண்டிக்காரனால் எரிச்சலையும் ஆத்திரத்தையும் அடக்க முடியவில்லை. வண்டியில் சொருகிவைத்திருந்த தடியை இழுத்தெடுத்து அவனை அடிக்க ஓங்கியவன், ஏனோ அடிக்காமல் தடியை வண்டி யிலேயே மீண்டும் சொருகி வைத்தான்.

ராஜா விடவில்லை. மீண்டும் நாயைக் கேட்டான். அவனுக்கு நாய்தான் தேவை. அதற்காகத்தான் அவன் அழுகிறான். அவனுக்கு நாய் கிடைக்காதா...? ''நாயைத் தாங்க...நாயைத் தாங்க'' வண்டிக்காரன் பொறுமையை இழந்து, வண்டியில் சொருகி வைத்திருந்த தடியை வெளியே எடுத்து ராஜாவின் முதுகில் ஒரு 'போடு' போட்டான். இம்முறை அவன் பின் வாங்கவில்லை, அடித்து விட்டான். ராஜா ''ஐயோ அம்மா'' என்று அலறி னான். பிறகு அடியைத் தாங்கிக் கொண்டு அவனிடம் நீதி கேட்டான். ''எனக்கு மட்டும் ஏன் நாயைத் தரமுடியா துன்னு சொல்றீங்க, கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒருத்தர் கேட்டதும் நாயைத் தூக்கிக் குடுத்தீங்களே! இது ஞாயமா? எனக்கொரு நீதி, அவங்களுக்கு ஒரு நீதியா? நாயைத் தாங்க, இனி கட்டி வைக்கிறன்.''

ராஜா துணிந்து நீதி கேட்டான். அவனுக்கு வயது பதினாறு என்றாலும் துணிந்து விட்டான். ஆனால்

வண்டிக்காரன் அவனுடைய நீதியைக் கேட்கத் தயாராக இல்லை. அவன் நாய் வண்டியை தள்ளிக்கொண்டே போனான். வண்டியினுள்ளே ராஜாவின் நாய் இருந்தது. ஆம்! பெரிய இடத்து நாயாக இருந்திருந்தால் எப்போதோ வெளியே வந்திருக்கும். ஆனால் அது ராஜாவின்...ஓ... அவன் பெயர்தான் ராஜா! நாய் அல்லவா? ★

# அவனுக்கும் ரோசம் உண்டு

அந்த சின்ன அறைக்குள் முன்னும் பின்னும் நடந்து விட்டு அப்படி நடந்த பின்னரும், ஒரு முடிவுக்கு வரமுடியாத தால், மனதில் போராட்டங்கள் தொடரவே சலிப்புற்ற வனாக, அந்த அறையின் ஒரு மூலையில், ஒதுங்கிக் கிடந்த ஒட்டை நாற்காலியில் டிரைவர் மாரிமுத்து உட்கார்ந்திருந் தான். ஏற்கனவே அந்த நாற்காலிக்குப் பென்சன் கொடுக்க வேண்டிய வயது தாண்டிவிட்டது. வயது தாண்டினாலும் இன்றும் அது உழைக்கிறது. மாரிமுத்து அதில் உட்கார்ந்த தும் அவனுடைய பாரம் தாங்க முடியாமல் 'கிறீச்' சென்ற சத்தம் போட்டது. சத்தத்தைக் கேட்டதும், நாற்காலியில் இருந்து கால்களை ஆட்ட நினைத்தவன், அப்படி ஆட்டி னால், அது உடைந்துவிடும் என்ற பயத்தில், ஆட்டாமல் இருந்துவிட்டான். கால்கள் துடித்துக்கொண்டுதான் இருந்தன.

எப்போதும் அவன் நாற்காலியில் இருந்தால் கால்களை ஆட்டிக்கொண்டுதான் இருப்பான். அது பழக்கமாகப் போய் விட்டது. இப்போதோ கால்களை ஆட்டாமல் அசைக் காமல் இருந்தான். தப்பித் தவறி கொஞ்சம் அசைத்தாலும் அந்த ஒட்டை நாற்காலி படுத்துவிடும். இப்போதுபோல் ஒட்டைக் காலுடன் அது நிற்காது!

காலை ஆட்ட முடியாதவன், சட்டை சேப்பிலிருந்து ஒரு பீடித்துண்டை எடுத்து, கையில் நெருப்புப்பெட்டி இல் லாததால், குசினிக்குப் போய் ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்து அதை பற்றவைத்துக்கொண்டு, திரும்பவும் ஒட்டை நாற்காலியில் இருந்தான். இப்போதும் 'கிறீச்' சென்று

சத்தம் போட்டு, அது அவனை எச்சரித்தது. அது எச்ச ரித்தாலும் எச்சரிக்காவிட்டாலும், இப்போது அவன் காலை ஆட்டவே மாட்டான்; காரணம் அவனுடைய நினைவெல்லாம் ஒரு முடிவைத் தேடுவதுதான். இப்போது அவனுக்குத் தேவையானதும் அதுதான். இன்று எப்படி யாவது ஒரு முடிவு எடுத்தாகவேண்டும். முடிவு எடுக்காவிட் டால் துன்பத்தில்தான் அவன் மிதக்கவேண்டிவரும்...

இதற்கு முன்னர் ஒரு முடிவெடுத்திருந்தான். அது அசைக்க முடியாதது என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் அந்த நினைவு வீணாகிவிட்டது. நினைத்ததுபோல் உறுதியாக இருக்க முடியவில்லை. வாழ்க்கை தள்ளாடத் தொடங்கியது. இன்னும் சில நாட்களில் என்ன ஆகுமோ என்று சொல்ல முடியாதவாறு அது தள்ளாடியது. வாழ்க்கை என்பது அப்படித்தானே! அது அசைக்க முடியாத இரும்பு என்றோ உருக்கு என்றோ சொல்ல அவன் தயாராக இல்லை. அடுத்த நேர தேவைக்கும் நிம்மதிக்கும், அவனைப் போன்றவர்களின் வாழ்க்கையில், உத்தரவாத மில்லை என்பது அவனுக்குத் தெரியும். கேவலம் நாய்க்குக் கலக்கிக் கொடுக்கும் பால் டின்னுக்குக்கூட உத்தரவாதம் இருக்கிறது. மனித வாழ்வுக்கு அதுவும் ஏழைகளின் வாழ் வுக்கு உத்தரவாதமில்லை. தெரு நாய்போல் அலைய வேண்டி வந்தாலும் வரும். ஆனால் அவனுக்கு இதுவரைக் கும் அப்படி ஒரு கேவலம் வந்து விடவில்லை; இனியும் அது வராது என்று சொல்லவும் முடியாது. சமாளித்து விடுவான். ஆனால் அந்தச் சமாளிப்பு எத்தனை நாளைக்கு... கையில் இருக்கும் வரைதான். அது முடிந்தால் அவனுக்கு இருக்கப்போவது...கவலைகள், துன்பங்கள், பெருமூச்சுகள், அழுகை ஒலிகள்...

மாரிமுத்துவுக்கு தவிப்பு அதிகமாகியது. தன் மனதை அடக்கி ஒரு முடிவெடுக்க அவனால் முடியவில்லை. முன்னர் எடுத்த முடிவையும் அவனால் விட முடியவில்லை. முன்னர் எடுத்தது முடிவென்று சொல்ல முடியாது. ரோஷம் உள்ள

வன் இப்படித்தான் செய்திருப்பான். செய்திருக்கவேண்டும். அவனும் அதைத்தான் செய்தான். ஆனால் அவனுடைய மனைவியோ அதை எதிர்த்தாள். அவள் மட்டும் எதிர்க்கவில்லை, வீட்டிலுள்ள வயிறுகளெல்லாம் கறுப்புக் கொடி பிடித்து எதிர்ப்பைத் தெரிவித்தன. இனியும் தாமதிக்க முடியாது. எப்படியும் ஒரு முடிவு எடுத்தாகவேண்டும்.

பற்ற வைத்த பீடித் துண்டு எரிய ஆரம்பித்தது. இரண்டு மூன்று தம் இழுத்துக்கொண்டான். முடிவுதான் வரவில்லை. முடிவு வரவேண்டும் என்பதற்காகத்தான் பீடியைப் பற்ற வைத்தான், முடிவு கிடைக்கவே இல்லை. மனசோ பற்றவைக்காமல் உள்ளே எரிந்தது...

நடந்ததை நினைக்க நினைக்க ரோஷம்தான் கிளம்பி வருகின்றது. அது ஒன்றுதான் அவனிடம் இருந்தது. அதையும் பாதிக்கும்போல் கிளம்பியிருந்தது வீட்டுப் போராட்டம். சின்னக்குழந்தைகளுக்கு என்ன தெரியும்! ரோஷமென்றால் என்ன-பாசமென்றால் என்ன என்று புரியுமா? அதற்குத் தேவையானது சாப்பாடுதானே... அதுகள் எந்த ரோஷத்தைப் பார்த்தன. ரோஷமும் பசியின் முன்னே பஸ்பமாகி விடும். அதைத்தான் அவனுடைய மனைவியும் சொன்னாள்—

"அட-அவன்தான் அப்புடி ஏசிட்டான்னா நீங்க ஏங்க அதைப் போய்க் கேக்கணும். இப்ப ரோஷம் சோறு போடுதா? புள்ளைக பசிபசின்னு கத்துது. இப்ப என்ன செய்யிறது? இம்புட்டு நாளும் எப்படியோ ஒப்பேத்தியாச்சி... இனி என்னால ஒன்னும் செய்யமுடியாது. புள்ளைகளெல்லாம் பட்டினியில் சாகவேண்டியதுதான். நமக்கு ரோஷம் தேவை தான். இல்லேனு சொல்லல்ல. ஆனா ரோஷம் ரோஷமன்னு சொல்லிட்டு வேலையை விட்டு வர்ரதா. அவன் என்னத்தை சொல்லட்டுமே...அதை பாத்துகத்தான் மேல ஒருத்தன் இருக்கிறானே...அவன் எல்லாத்தையும் பாத்துக்குவான். நீங்க ஏன் அவசரப்படனும். சொல்றதை சொல்லு... கேக்கிறதை கேக்கிறேனு மத்த காதால விட்டுட்டு

வேலையை பாக்காம போய் கேட்டீங்களா? இப்ப என்ன தான் கெடைச்சிச்சி?''

மனைவி சுலபமாகச் சொல்லி விட்டாள். ஒரு காதில் வாங்கி மறுகாதில விடவேண்டுமாம்...சொல்வது சுலப மாகச் சொல்லிவிட்டாள். ஒரு காதில் வாங்கி மறு காதில் விடவேண்டுமாம்...சொல்வது சுலபமாகத்தான் இருக்கிறது. வாங்கிவிடத்தான் முடியவில்லை. காது செவிடாக இருந்தி ருந்தால் அப்படிச் செய்திருக்கலாம். காதுதான் கேட்கிறதே வாங்கிவிட்டான். வாங்கினாலும் விடமுடியுமா? விடக் கூடிய வார்த்தைகளா அவைகள்... வார்த்தைகள் கேவல மானதில்லை. ஆனால் ரோஷத்தைக் கிளப்பக் கூடியது, கிளப்பிவிட்டது; கிளப்பிவிட்டதோடு நிற்கவில்லை. காயத் தில் சலம் இருப்பதுபோல் உள்ளேயிருந்து அவனைச் சுட்டுக் கொண்டே இருந்தது.

கையிலிருந்த பீடியைக் கீழே போட்டு மிதித்து, நசுக்கிய போது, பீடி நெருப்பு லேசாக அவன் காலைச் சுட்டது. வலிக்கவில்லை. தாங்கிக்கொண்டான். ஆனால் அப்போது மனதைச் சுட்டுக்கொண்டிருந்த நினைவுகளை அவனால் தாங்க முடியவில்லை.

அப்போது மாரிமுத்துவும் ஆறுமுகமும் ஒரு பேப்பரை இரண்டாகப் பங்கு போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார் கள். அந்த நேரத்தில்தான் கரடிபோல் நுழைந்தான் முதலாளியின் மகன்.

''ஏய்...டிரைவர் உன்னைத்தான்... அப்பா உன்னைப் பார்த்துக்கிட்டிருக்காரு...நீ இங்க ஒய்யாரமா பேப்பரா பார்க்கிற? சம்பளம் மட்டும் மாதம் முடிஞ்சதும் பல்லை இழிச்சிகிட்டு வாங்க வந்திரு; வேலையை மட்டும் ஒழுங்கா செய்யாதே—ம்—அப்பா கூப்புடுறாங்க—எடுத்துகிட்டுப் போ! மரம் மாதிரி நிக்காதே—''

இப்படித்தான் முதலாளியின் மகன் ஏசினான். இதைக் கேட்டதும் அவனுக்கு ரோஷம் வரத்தான் செய்தது.

தனக்குத் தெரிய மூக்கை வடித்துக்கொண்டு திரிந்த பயல் இப்படி ஏசுகிறானே என்று குமுறினான். மறுகணம் அப்படி ஏசியவன் முதலாளியின் மகன் என்ற நினைவு வரவும் எல்லாமே ஓடிவிட்டது. ஆனால் அவனுடைய கூட்டாளி ஆறுமுகம் அவனைத் தூண்டிவிட்டான். அவனுடைய வாயி லிருந்து வந்த வார்த்தைகள் சோடா போத்தல் மூடியைக் கழட்டிவிட்டால் பாய்ந்துவரும் காஷைப்போல கிளம்பி வந்தன.

''அட...நீ இன்னும் மரம் மாதிரி நிக்கிற—ஒனக்கு ஒன்றுமே புருயலியா? எறுமை மாடு மேல மழை பெஞ்ச மாதிரி ஏசிட்டுப் போறான்—நீ மரம் மாதிரி நிக்கிற—போ —போயி மொதலாளிகிட்ட என்னானு கேளு. ஒங்க மகனை அடக்கி வைங்கன்னு சொல்லு...பணத்துக்கு அடிமையாகிறதா? நீ ஒன்னும் சும்மா சம்பளம் வாங்க லியே...கஷ்டப்பட்டு ஒழைச்சிதானே சம்பளம் வாங்கிற— இதில வேற அவரு மகனுகிட்ட ஏச்சு வாங்கணுமா? இன் னைக்கி மகன் ஏசுவான்—நாளைக்கி அவன் பொண்டாட்டி யும் ஏசுவா—கேக்கவேண்டியதுதான்—''

ஆறுமுகத்தின் வார்த்தைகள் மாரிமுத்துவின் நெஞ்சில் ஊசிகளாகக் குத்தின. அவன் சொல்வதில் நியாயம் இருக் கத்தான் செய்தது. ஆனால் மாரிமுத்துவுக்கோ இதற்காக முதலாளியைச் சந்திக்கவேண்டும் என்று தோன்றவில்லை— விழுதுகளைப் போட்டு வளர்ந்துவிட்ட ஆல மரத்தைப் போல், ஊரில் பேரும் புகழும், வீடும் வாசலும், காணியும் பூமியும் தேடிக்கொண்ட ஒரு முதலாளியிடம் (பெயர் செல்லையா செட்டியார்) பத்து வருடமாக நம்பிக்கை யுடன் காரோட்டி வருகின்றான். நம்பிக்கை அவனிடம் மட்டும் இல்லை. அவரிடமும் இருந்தது. அந்த நம்பிக்கை யில்தான் வியாபார ரகசியங்களை அவன் தெரியவே செய்து கொடி கட்டிப் பறந்தார் முதலாளி.

அவருக்கு அவன்மேல் நல்ல நம்பிக்கை இருந்தது. கொடுக்கும் சம்பளந்தான் 150 ரூபாவாக இருந்தது. அந்த

நூற்றியம்பதில்தான் அவனுடைய வாழ்க்கை எப்படியோ ஓடுகிறது. ஆனால் அதையும் இப்போது மகன் ஏசிவிட்டான் என்பதற்காக முதலாளியிடம் மோதி கெடுத்துக் கொள்ளத் துணியவில்லை அவன்!

“என்னப்பா மாரிமுத்து! இம்புட்டு சொல்லியும் போகாம இருக்க—வேலை போகும்னு பயமா—இந்த வேலை போனா இன்னொரு வேலையும் தேடிக்கலாம்—போ—போயி—என்னானு கேளு! சும்மா இருக்காதே—ஒங்க மொதலாளி என்னா மாசாமாசம் நூத்தியம்பது ரூபா தானே தர்றாரு. இந்த வேலையை விட்டா ஒனக்கு நூத்தியம்பதுதானே நஷ்டம். இதுக்குபோய் பயப்படலாமா?”

அப்போதும் அசையாமல் மாரிமுத்து நின்றான். அவன் அசையவேயில்லை. மனம் அசைந்தால்தானே அவன் அசைவான். ஆறுமுகத்திற்கு அவனைப் பார்க்கின்றபோது ஒரு பக்கம் ஆத்திரமாகவும் மறு பக்கம் சூடு சொரணை ரோஷம் இல்லாதவனோ என்று வியப்பாகவும் இருந்தது. இவ்வளவு சொல்லியும் அவன் போகாமல் இருக்கிறானே!

மனுசனுக்கு ரோஷம்தான் முக்கியம்.

நீ என்னடான்னா சின்ன பையன்கிட்ட ஏச்ச வாங்கிட்டு பேசாம நிற்கிறியே. ஒனக்கும் மொதலாளி மகன் வயசில மகன் இருக்கிறான். அவன் ஒன்னை ஏசுற நேரம் பக்கத்தில இருந்திருந்தா என்னா நடக்கும்? மொதலாளி மகனை பிடிச்சி அடிச்சி ஒதைச்சிருப்பான். அவன் ஏன் அப்புடி செய்வான்! நம்ம அப்பனை இன்னொருத்தன் ஏசுறானேங்கிற ரோசத்துக்காக செய்யிறான். இது சொல்லிக் கொடுத்தா வருது...சொல்லாமே வரும். ஒனக்கென்னடான்னா சொல்லியும் வரலியே ரோஷம்—இல்லியே?”

அவ்வளவுதான். மாரிமுத்து நிற்கவில்லை. தன்னை ஏசியவனைப்போல் தனக்கும் ஒரு மகன் இருக்கிறான் என்பதை நினைத்துப் பார்த்த அவன் ஆறுமுகத்திடமும்

சொல்லாமல் முதலாளியிடம் போனான். ரோஷம் வந்து விட்டதாம்!

முதலாளி வீட்டில்தான் இருந்தார். ஒரு சோபாவில் சாய்ந்திருந்தார். தலைக்கு மேலே மின் விசிறி சுழன்றது. அவர் கையில் பேப்பர் இருந்தது. மாரிமுத்துவின் நிழல் தங்க பிரேம் போட்ட கண்ணாடியில் பட்டது. வைரம் பதித்த மோதிரக் கையால் பேப்பரைக் கீழே போட்டுவிட்டு கண்ணாடியைக் கழட்டி கையில் வைத்துக்கொண்டு அவனைப் பார்த்தார். பார்த்துவிட்டு மறுபடியும் மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டார். அவருக்கு எப்போதும் இப்படி ஒரு பழக்கம், யாரையும் முதலில் பார்க்க கண்ணாடியைக் கழட்டுவது இருக்கிறது.

முதலாளி சட்டை போடாமல் இருந்தார். கழுத்தில் மூன்று ஏழைப் பெண்களுக்குத் தாலியாகத் தொங்கவேண்டியது நெஞ்சு வரை கண்ணைப் பறிக்கும் செயின் தொங்கியது. வயிற்றில் நல்ல தொந்தி ஒரு பானையைக் கவிழ்த்து வைத்ததுபோல்... தொந்திக்குக் கீழே கொக்கின் நிறமும் பிச்சை வாங்கும் வெள்ளை நிறத்தில் வாயல் வேட்டி பளபளத்தது.

''என்னப்பா மாரிமுத்து''—இந்த நேரத்தில் அவரிடம் அவன் வரமாட்டான், அப்படியும் வந்தால் அதற்கு ஏதாவது காரணம் இருக்கும். அஞ்சோ பத்தோ கடன் கேட்டு வந்திருப்பான். அதுவும் இப்படி வரமாட்டான். வளைந்து நெளிந்து ஆள் வரும்போதே ஏன் வந்தான் என்று அடையாளம் தெரிந்துவிடும். ஆனால் இன்று அப்படி வரவில்லை. விறைப்பாக வந்திருக்கிறான். ஏன் வந்தான்?

''ஆமாங்க! முக்கியமான சங்கதி... ஒங்களுக்கிட்ட பேசணும்'' வார்த்தைகள் தனித்தனியே வந்தன.

''முக்கியமான விசயமா? அப்படி என்ன விசயம்! சொல்லு மாரிமுத்து...''

''எல்லாம் ஒங்க மகன் விசயமாதான். இன்னைக்கு காலையில நான் பேப்பர் பார்த்துகிட்டிருந்தேன். அப்ப திடீர்னு ஒங்க மகன் கொஞ்சம் கூட மரியாதை இல்லாம கேவலமா நாலு பேர் முன்னுக்கு ஏசினாரு. கேக்கிறதுக்கு வெக்கமா இருந்திச்சி. ஒங்க மகங்கிரதுனால விட்டேன். இல்லேனா சத்தியமா அடிச்சிருப்பேன். ஒங்களுக்கிட்ட வேலை செய்யிறேன். சம்பளம் வாங்கிறேன். அதுக்காக ஒங்க மகனுகிட்ட ஏச்சு வாங்கணுமா? ஒங்க மகன் ஏசுற நேரம் என் மகன் மட்டும் இருந்திருக்கணும் என்ன நடந்திருக்கும் தெரியுங்களா?''

முதலாளி தங்கப்பல் இரண்டும் தெரியச் சிரித்தார். அவர் சிரிப்பின் அர்த்தம்... பூ! இதுக்குத்தானா? நானும் என்னமோ என்று நினைத்துவிட்டேன்...! அதை வார்த்தைகளாலும் சொன்னார்... ''அட இதுக்குத்தானா இப்புடி வந்த! மகன் சின்னப் பையந்தானே அதை தப்பா நெனைச்சுக்காதே... தெரியாம பேசியிருப்பான்...''

''நீங்க சொன்னா சரிங்களா; மகனை கூப்புட்டு கண்டிங்க. அதுதான் நல்லது. இல்லே நாளைக்கி இதை விட மோசமா நடக்கும். அப்ப வீண் தொந்தரவு வரும்...'' முதலாளியோ, தன்னிடம் கை நீட்டி சம்பளம் வாங்கும் யாரோ ஒருவன், தன்னிடம் வேலைக்கு இருப்பவன் சொல்வதற்காக தான் பெற்ற மகனை, அவன் முன்னே கண்டிக்க விரும்பவில்லை. தன் குஞ்சு கறுப்பென்றாலும் பொன் குஞ்சுதானே அவருக்கு. காகம் தன் குஞ்சு கறுப்பென்றாலும் பொன் குஞ்சென்று சொல்வது நியாயமானதுதான்! இது நியாயமா?

''அட... இதை போயி கேக்கிறியே... மகன் கேட்டதிலையும் என்ன பிழை இருக்கு? வேலை செய்யிற நேரம் பேபபர் பாக்கக் கூடாதுன்னுதானே சொன்னான். இது குத்தமா?''

"நீங்க அதை குத்தம் இல்லேன்னு நெனக்கலாம். ஆனா எனக்கு இதை தாங்க முடியாது. மகனை கண்டிக் கிறதுன்னா கண்டிச்சு வைங்க — இல்லேனா நான் வேலையை விட்டு வெலகிக்கிறேன்—"

முதலாளி இதை எதிர்பார்க்கவே இல்லை. அதிர்ச்சி யடைந்து போனார். என்றாலும் இந்த அதிர்ச்சியை அவர் வெளியே காட்டவில்லை. முதலாளியாயிற்றே... கௌரவத்தை விடுவாரா...மாரிமுத்து சாதாரண மனிதன். 150 ரூபா சம்பளம் வாங்கிறவன். அவன் விலகிறேன் என்று சொன்னதற்காக அதிர்ச்சியடையலாமா — என்றாலும் அவன் விலகிப் போவது அவருக்கு விருப்பமே இல்லை. புதிதாக யாரையும் சேர்த்துக் கொள்ளலாம்தான், அதற்கு ஏற்ற செல்வாக்கும் பணமும் இருக்கிறதுதான். ஆனால் வருகிறவன் எப்படி இருப்பான்? வந்தாலும் நம்பிக்கையாக நடப்பானா? ஒரு விநாடி மகனைக் கூப்பிட்டு மாரிமுத்து முன்பாகவே கண்டித்து சமாளிப்போமா என்ற நினைவு வந்து வெளியே ஓடியது. அதை ஓடவைத்தவன் முதலாளி யின் மனசின் உள்ளே இருந்தவன்—இந்த வேலைக்காரப் பயலுக்காக பெத்த மகனை அவன் முன்னுக்கு ஏசுறதா? அப்புடி இவர் என்ன பெரிய டிரைவர்... பணத்தை வீசினா ஆயிரம் பேர் வருவான்.

"இப்ப என்னதான் சொல்லற?"

"மகனை கூப்பிட்டு கண்டிங்க...இல்லேன்னா நான் விலகிக்கிறேன். இதுக்கு மேல என்னால இருக்க முடியாது. சம்பளத்துக்குத்தான் வேலை செய்யலாம், இப்புடி கண்ட வங்க ஏசுறதுக்கெல்லாம் பொறுக்க முடியாது. கணக்கு வழக்க பாருங்க."

"என்னமோ உன் இஷ்டம், விருப்பம்னா இரு...அதுக்கு மேல ஒன்னும் செய்ய முடியாது."

மாரிமுத்து கையிலிருந்த கார் சாவியைத் தூக்கி மேசையில் போட்டான். முதலாளி அந்தப் புரிந்து கொண் டார். மாரிமுத்து வேலை வேண்டாமென்று சொல்லி

விட்டான். வேலையை விட்டு வந்த மாரிமுத்து நம்பிக்கையுடன்தான் இருந்தான். வேலையும் தேடினான். வேலை கிடைக்கும் என்ற உறுதியும் அவனிடம் இருந்தது. வேலைதான் கிடைக்கவில்லை. நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. வேலை கிடைப்பதாகத் தெரியவில்லை. ஆறுமுகமும் அவனுக்காக வேலை தேடினான். ஆனால் மாரிமுத்துவின் தரித்திரம் வேலை கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான் அவன். இந்தத் துன்பத்தில் இருந்து தப்ப அவனுக்கு இரண்டு வழிதான் இருந்தது. இரண்டில் ஒன்று சரிவராது போலாகிவிட்டது. இனி அடுத்த வழி முதலாளியின் காலில் விழுந்து வேலை கேட்பதுதான்...

நினைவுகள் அறுந்து போகவும் மிதித்து நசுக்கிய பீடியைத் தூக்கி ஜன்னல் வழியாக வீசினான். அதன் பின்னர் ஏதோ நினைத்தவன் குசினிக்குப் போனான். குசினியில் மனைவி அடுப்படிக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளைச் சுற்றி அவளுடைய பிள்ளைச் செல்வங்கள் வட்டம் போட்டு உட்கார்ந்திருந்தன. அதில் ஒன்று தன் வயிற்றைத் தடவி ஊமை பாஷை பேசியது. மற்றதோ பசிக்குது பசிக்குது என்று அழுதது. இன்னும் ஒன்றோ அவள் கட்டியிருந்த சேலையைப் பிடித்து இழுத்தது. அவளால் இந்தத் தொல்லையைத் தாங்க முடியவில்லை. சேலை அவிழ்ந்து விழுந்தாலும் விழும்போல இருந்தது. கோபம் தாங்க முடியாமல் சேலையை இழுத்த பிள்ளைச் செல்வத்தின் முதுகில் நாலைந்து போட்டாள், மறுகணம் ''ஓ...'' வென்ற ஒப்பாரியும், ''அப்பா—அம்மா அடிக்கிறது'' என்ற முறைப்பாடும் அப்பாவின் கட்சியில் சேர்ந்த கட்சி மாற்றமும் நடந்தன.

''ஏன் சும்மா அடிக்கிற?'' அழுத பிள்ளையைத் தூக்கி வைத்துக்கொண்டு கேட்டான்.

''அடிக்காம என்ன செய்யிறது? இல்லாததைக் கேட்டா நான் என்ன செய்வேன்? எனக்கிட்டத்தான் ஒன்றும் இல்லியே.''

அவளுடைய இரட்டை அர்த்தப் பேச்சு அவனுக்குப் புரிந்தது, ''சரி—இப்ப என்னதான் செய்யச் சொல்ற?''

''நான் என்னா சொல்றேன் மொதலாளிகிட்ட போயி பழையபடி வேலை கேளுங்க. அவர் கட்டாயம் வேலை தருவாரு. அதிலே எனக்கு நம்பிக்கை இருக்கு. பயப்படாம போயி கேளுங்க. இன்னும் அவரு ஒரு டிரைவரும் எடுக்கலியாம்... அதுனால அந்த வேலை கெடைச்சாலும் கெடைக்கும். போயி கேளுங்க. இனி வேல இல்லேன்னா தாங்கவே முடியாது. பட்டினியால் புள்ளைக செத்துப் போகும். நீங்க ஒடனே போங்க...இப்புடி சொல்றதுனால எனக்கு ரோஷம் இல்லேனு அர்த்தமில்ல. எனக்கும் ரோஷம் இருக்கு...ஆனா பசிக்குதே...என்ன செய்யிறது? நாம பேசாம இருப்போம். புள்ளைக பசியோட இருக்குமா ...ஒடனே போங்க. இப்புடி போறதுனாலே எங்களுக்கு ரோஷம் இல்லேணு அர்த்தமில்ல. நமக்கும் ரோஷம் இருக்கு. நம்மள யாரும் ஏசினா அதுக்காக நாம கேட்க வேண்டியதில்ல. மேல இருக்கிற ஆண்டவன் அதைப் பாத்துக்குவான். நீங்க பயப்படாமப் போங்க!''

மனைவி சொன்னதின் அர்த்தங்கள் அவனுக்குப் புரிந்தன. வேலையை விட்டு வந்து இன்னும் ஒரு ஐந்து சதத்தை இந்த ரோஷம் சம்பாதித்துக் கொடுக்கவில்லை. பட்டினியாய் இருந்ததுதான் மிச்சம்...

அழுதுகொண்டிருந்த பிள்ளையை கீழே இறக்கி வைத்து விட்டு முதலாளியிடம் ஓடினான். முதலாளி வீட்டில் சோபாவில் சாய்ந்திருந்தார். தங்க பிரேம் போட்ட கண்ணாடி கழட்டப்பட்டே இருந்தது.

''யாரு மாரிமுத்தா—வாப்பா—இப்பவாவது வாசற் படி தெரிஞ்சிச்சே...''

மாரிமுத்து சிரிப்பையே பதிலாக்கினான்...அதன் பின்னர் பேசினான் ''இன்னும் வேலை கெடைக்கலீங்க. அதுனால ஒங்களுகிட்ட...'' அதற்குமேல் பேசவில்லை.

அவை முதலாளிக்குப் புரிந்துவிட்டது—"அட! இதை முதல்லயே சொல்லக் கூடாதா? காலையிலதானே டிரைவர் வேலைக்கு ஒருத்தன் வந்து பாத்துட்டு போயிருக்கிறான். நீ இப்ப வாறியே—"

"மொதலாளி அப்படி சொல்லாதீங்க...புள்ளகுட்டி காரங்க - ஏதோ பாத்து."

"அப்படியா—எதுக்கும் காலையில வாவேன்"

முதலாளி பெரிய டூப் அடித்தார். இந்த டிரைவர் வேலைக்கு இன்னும் யாருமே அவரிடம் வரவில்லை. இருந்தாலும் அதை மாரிமுத்துவிடம் சொல்லலாமா—என்ன இருந்தாலும் கை நீட்டி சம்பளம் வாங்கியவன்தானே! அவன் வந்ததும் கேட்டதும் வேலை கொடுக்கக்கூடாது—கௌரவம் கெட்டுப்போகுமாம். அதற்காக ஒரு நாடகம்-இழுத்தடிப்பு, இப்படிச் செய்தால்தானே காலையில் அவன் வந்ததும் அவனிடம் ஒனக்காக அவனை வேணாம்னு சொல்லிட்டேன் என்று சொல்லி பெரிய மனிதனாகலாம்?

மறுநாள் காலையில் முதலாளி சொன்னதுபோல் அவரிடம் போய் நின்றான். அவனைக் கண்டதும் சிரித்துவிட்டு முதலாளி பேசினார்..."வாப்பா மாரிமுத்து, இப்பதான் அவன் வந்தான். ஒனக்காக வேணாம்னு சொல்லிட்டேன்; சரி—நீயே வேலையைச் செய்..."

கார்சாவியை அவனிடம் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட மாரிமுத்து கரேஜுக்குப் போய் காரை வெளியே எடுத்தான். பலநாள் கார் உள்ளேயே இருந்ததால் தூசி படிந்திருந்தது. உடனேயே மாரிமுத்து பெனல் துணியால் காரைத் துடைக்க ஆரம்பித்தான். அப்போது அவனுடைய மனம் மகிழ்ச்சியில் ஊறிக்கிடந்தது...நினைத்தது நடந்து விட்டது. முதலாளி நல்ல மனிதர். இவ்வளவு நல்ல மனிதரை விட்டு போனது முட்டாள்தனம்—

கார் கதவுகளை திறந்து வைத்துக்கொண்டு சீற்றில் இருந்தவாறு மாரிமுத்து துடைத்தான். கடைசிக் கதவைத்

துடைத்தபோது, ''சரக்...சரக்'' என்ற சத்தம் பின்னா லிருந்து வந்தது. மாரிமுத்து திரும்பிப் பார்த்தான்; முதலாளியின் மகன் அவனருகே வந்து கொண்டிருந்தான்.

''டிரைவர்—!'

மாரிமுத்து கதவைத் திறந்தவாறே சீற்றை விட்டு வெளியே வந்தான்.

''அட மறுபடியும் வேலைக்கு வந்தாச்சா...எனக்குத் தான் தெரியுமே எப்படியும் வருவீங்கன்னு. வயிறு வத்தினா குதிரை தானா புல்லு திங்குமாம். வேலையில குத்தம் சொன்னோன ரோஷம் பொத்துக்கிட்டு வருது. வேலையை விட்டு ஓடவேண்டியது, வயிறு வத்தினோன காலல விழவேண்டியது, இதுதான் ஒங்க கதை! பெரிய ரோஷமா அன்னைக்கி போனாரு...இன்னைக்கி வந்துட் டாரு...''

சொல்லிவிட்டு சிரி சிரியென்று சிரித்தான். இதையெல் லாம் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந் தார் முதலாளி. மாரிமுத்துவுக்கு ரோஷம் இருக்கிறதா வென்று 'டெஸ்ட்' பண்ணிப் பார்க்கிறாராம்...

மாரிமுத்துவுக்கு ஆத்திரம் கிளம்பி பேயாக நின்றது. டிப்டாப்பாக உடுத்தி நிற்கும் முதலாளியின் மகனை உற்றுப் பார்த்தான். ஒருகணம் அவனுடைய மகனின் உருவம் நெஞ்சில் படிந்து மறைந்தது. மறுவிநாடி அவ்வளவு தான்...சீறிவிட்டான். கையிலிருந்த பைனல் துணியை முதலாளியின் மகன் முகத்தில் வீசினான். ''டேய்! எங்கள என்னா நெனைச்சே...எங்களுக்கும் ரோஷம் இருக்குடா... ஒனக்கிட்ட பணம் இருக்குன்னு எங்கள கிண்டலா பண்ணி பார்க்கிற?''

மீண்டும் முதலாளியின் மகனை அடிக்க கையை ஓங்கினான். அதற்குள் முதலாளி ஓடிவந்துவிட்டார். முதலாளியைக் கண்டதும் அவர் காலடியில் கார் சாவியை

வீசிவிட்டுக் கத்தினான் : ''நீங்க வந்ததுனால பேசாம இருக்கிறேன்—நீங்கமட்டும் வராம இருந்திருந்தா ஒங்க மகனை கொன்னே போட்டிருப்பேன். எங்களுக்கும் ரோஷம் இருக்குது தெரியுங்களா?''

முதலாளி பதில் சொல்லவில்லை. பசிக்கும்வரைதான் மாரிமுத்துவுக்கு ரோஷம் இருக்கும் என்று அவர் ஒரு கணக்கு போட்டு வைத்திருந்தார். ஆனால் அந்தக் கணக்கு பிழையாகிவிட்டது...மாரிமுத்துவின் ரோஷத்துக்கே பசிக்க ஆரம்பித்துவிட்டதே...இப்போது!

மாரிமுத்து கம்பீரமாக நடந்துகொண்டிருந்தான். ★

**சிரித்திரன்'—மாத இதழ், யாழ்நகர் (இலங்கை) 1975 ஐப்பசி (ஆண்டுமலர்)**

# தெய்வங்கள்

'சொட்டுச் சொட்டாக' தண்ணீர் சிந்திய கோயில் பைப்பில் நின்று, பொறுமையாகக் கால்களை நனைத்த பின்னர், கோயிலின் உள்ளேபோய் மூலஸ்தானத்தில் சாமி தரிசனம் செய்து, சாமி கும்பிட்டு, விபூதி பூசி, சந்தனப் பொட்டு வைத்துக்கொண்டு கதாப்பிரசங்கம் நடக்கும் இடத்திற்கு வந்தான் கோபால். கதாப்பிரசங்கம் ஆரம்ப மாகியிருந்தது. ஆனால், கதை இன்னும் ஆரம்பமாக வில்லை. இன்னும் சில நிமிடங்களில் கதையை ஆரம்பித்து விடுவார் பிரசங்கியார். இப்போது அதற்கு முன்னோடி யாகத்தான் தேவாரம் பாடிக் கொண்டிருக்கிறார்.

கோபால் எங்கே உட்காரலாம் என்று பார்த்தான். பெண்கள் பகுதி நிறைந்து காணப்பட்டது. ஆண்கள் பகுதி யில் மட்டும் கொஞ்சம் கொஞ்சம் இடம் விடப்பட்டிருந்தது. அப்படி விடப்பட்டிருந்த இடத்தில் போய் உட்கார்ந்தான். உட்கார்ந்த பின்னர், அங்கிருந்து பிரசங்கியாரைப் பார்க்க முடிகிறதா என்று பார்த்தான். இன்று பிரசங்கியார் மட்டு மல்ல, அவருக்கு பக்கபலமாக இருக்கின்ற மிருதங்கக் காரரும், வயலின்காரரும் அவனுடைய பார்வையில் நன்றாகப் பிடிபட்டார்கள். கோபாலுக்கு மனதில் சந்தோஷம்...... நேற்று பிரசங்கியாரைப் பார்க்கவே முடிய வில்லை. இடம் கிடைக்காததால் ஒரு தூணருகே உட்கார்ந் திருந்தான். குரல் மட்டும் கேட்டது. ஆளைப் பார்க்க வேண்டுமென்றால் அங்கும் இங்கும் சாய்ந்து பார்க்க வேண்டியிருந்தது. இன்றோ நன்றாகவே பார்க்க முடி கிறதே......

பிரசங்கியார் கதையை ஆரம்பித்தார். கோபால் அவரையே உற்றுப் பார்த்தான். அப்போதெல்லாம் அவரை எங்கோ பார்த்தது போன்ற ஒரு ஞாபகம் வந்தது. அடிக்கடி கவிஞர் தாகூரையே நினைத்தான். தாகூரைப் போல்தான் இருந்தார்... தாகூரின் கவிதையை மறக்க முடியாததுபோல் நினைவிலிருக்கும் அவரின் தாடியைப் போன்ற வெண்தாடி நெஞ்சுவரை இவருக்கும் நீண்டிருந்தது. அந்தத் தாடிக்குள்ளே மின்னும் புன்னகை... முகத்தில் ஒரு வசீகரம்...கண்களில் ஒரு கவர்ச்சி... அவரைப் பார்க்கும்போதே ஒரு பயபக்தியை உண்டுபண்ணின......

அவர் நின்று கொண்டு பிரசங்கம் செய்தார். அவரின் இடது பக்கம் வயலினும், வலது பக்கம் மிருதங்கமும், இரண்டுக்கும் நடுவில் சுருதிப் பெட்டியும் இருந்தன. அவர் கையில் தாளம் இருந்தது. நெற்றியில் வெள்ளை வெளேரென்ற விபூதிப்பட்டைபோட்டிருந்தார். அந்தப் பட்டைக்கு நடுவில் சிறிய குங்குமப் பொட்டும் வைத்திருந்தார். கழுத்தில் உருத்திராட்ச மாலைகள் இருந்தன. இன்னும் கொஞ்ச நேரத்தில் அந்த உருத்திராட்ச மாலையோடு போட்டி போடுவது போல் கழுத்தில் பூமாலைகள் விழும். ஆனால் போட்டியில் தோற்ற பூமாலை கொஞ்ச நேரத்தில் கழன்று மேடைக்குப் போய்விடும்.

பிரசங்கியார், 'நமப் பார்வதி பதயே' என்று சொன்னார். எல்லோரும் பதிலுக்கு 'அரகர மகாதேவா' என்று சொன்னார்கள். அதன் பின்னர் கதையை ஆரம்பித்தார்... 'இன்று தாயே தெய்வம் என்ற கதை...கதையை ஆரம்பிக்கும் முன்னர் என் தாயை மானசீகமாக வணங்கி, அம்பாளையும் வணங்கி ஆரம்பிக்கிறேன். என்னைச் சுமந்து பெற்று, பால் ஊட்டி வளர்த்து, தந்தையைக் காட்டி, குருவைக்காட்டி, கல்வி தந்து மனிதனாக்கிய இந்தத் தெய்வம்......'

கோபாலுக்கு தன் தாயின் நினைவும், தன் தாயின் காலில் விழுந்து வணங்க வேண்டுமென்ற உணர்வும் வந்து

அவன் இதயத்தைக் குலுக்கியது. அப்போதே வணங்க வேண்டுமென்று அவன் துடித்தான். இந்த உணர்வு தோட்டத்திற்குப் போய், லயத்தில் காம்பராவில் கால் வைக்கும் வரைக்கும் இருக்கும். தாயைப் பார்த்ததும் தயக்கம்தான் வரும். சின்னப் பையனாக இருக்கும்போது, ஸ்கூல் மாஸ்டர் சொன்னதும் தயக்கமில்லாமல் இதே தாயை விழுந்து வணங்கியிருக்கிறான். இன்று ஏனோ முடிய வில்லையே...தயக்கம் வருகிறதே...! என்ன காரணம்? அவன் பெரியவனாகிவிட்டானாம்! ஓ! இந்தப் பெரிய மனிதத்தன்மைதான் அவனை அப்படிச் செய்ய விட வில்லை. என்ன பெரிய மனிதத்தன்மை? வயதானாலும் தாய் ஒரே தாய்தானே! அந்தத் தாயை வணங்கினால் என்ன...?

அவன் இதயம் கவலையில் இருக்க செவிகள் பிரசங்கி யாரின் கதைக்கு ஓடின... கதை வரவர இதயம் கவலையை லேசு லேசாக மறக்க ஆரம்பித்தது.

'எனக்கு தாய்தான் தெய்வம். இந்தத் தெய்வத்திற்குப் பின்னரீதான் மற்றத் தெய்வங்கள்... அந்தத் தெய்வத்தை வணங்கவேண்டும். அப்போதுதான் புண்ணியம் சேரும், சுகம் சேரும்.'

அவனுக்கு நெஞ்சில் ஒரு நடுக்கம் வந்தது... அவ னைப் பார்த்தே அவர் பேசுவதுபோல் இருந்தது. தன் நடுக்கத்தை அடக்கிக்கொண்டு மௌனமாக இருந்தான், ஆனால், மனதின் உள்ளே ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்தது... 'பெற்ற தாயை பசியில் வாடவிட்டு அம்பாளுக்கு பூஜை செய்வதில் புண்ணியமே இல்லை. பெற்ற தாய்க்கு ஒரு நேரச் சாப்பாடும் கொடுக்காமல் அந்தத் தெய்வங்களுக்குப் பட்டு உடுத்திப் பார்ப்பதில் நன்மையே இல்லை. அம்பாளுக்கு அது பிடிக்காது. அவளும் பெண்தானே! அந்தப் பெண்தெய்வம் ஒரு பெண் அழுதால் பொறுப்பாளா? பொறுக்க மாட்டாள். குடம் குடமாய் பால் ஊற்றினாலும் அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள்...'

கோபாலுக்குக் கதை கேட்பது போலவே இல்லை. அவனைப் பார்த்து புத்தி சொல்வதுபோலவே இருந்தது. அவன் பிரசங்கியாரைப் பார்க்காமல் மிருதங்கத்தைப் பார்த்தான். மிருதங்கத்தையும், மிருதங்கத்தின் ஒரு பக்கத்தையும் குறிப்பாகப் பார்க்கும்போது அவனுக்கு வேறு ஞாபகம்தான் நெஞ்சில் கிளம்பி நின்றது...அம்மாதான் நினைவில் வந்தாள். 'லயத்தில் குசினியில் அம்மா தனியாக குப்பிலாம்பு வெளிச்சத்தில் இருமிக்கொண்டு, மூச்சை இழுத்துக்கொண்டு ரொட்டி சுட்டுக்கொண்டிருக்கிறாள். உதவிக்கு, ஒத்தாசைக்கு, பேச்சுத் துணைக்கு யாருமே இல்லை. எட்டுப் பிள்ளைகள் இருந்தும் ஒன்றுகூட உதவிக்கு இல்லை. அதில் அவனும் ஒருத்தன்தான். ஆனால், அவனாவது அவ்வப்போது வேலை செய்வான்...'

இன்று கூட கோயிலுக்கு வரும்போது அம்மா மூச் செடுக்க முடியாமல் இருமிக்கொண்டு தேங்காய் திருவுவதைப் பார்த்துவிட்டு அவனாக தேங்காய் திருவிக்கொடுத்தான். அம்மாவுக்கு அப்போது நிம்மதியாக இருந்தது. ஆனால் அந்த நிம்மதி நீடிக்கவில்லையே! தேங்காய் திருவிக் கொடுத்ததும் அவன் கோயிலுக்கு வந்து விட்டான். அதன் பின்னரும் வேலை இருந்ததே. எட்டுப் பேருக்கும் ரொட்டி சுட்டுத்தள்ள வேண்டும்... அது லேசான வேலையா? பகலில்தான் மலையில் 'கூலிக்கு மாரடிச்சது போதா தென்று' இங்கே இருட்டில், குப்பிலாம்பு வெளிச்சத்தில் அடுப்பருகே ரொட்டி சுட வேண்டும். ஒரு பிள்ளை உதவிக் கில்லை... சாப்பிடத்தான் இருக்கிறது...

''முருகப் பெருமான் தாயை வணங்கி வீரவேல் பெற்று சூரனைக் கொன்றார். சிறிய தாய் மீது பாசம் இருந்ததால் தான் அவள் சொல்லைத் தட்டாது காட்டுக்குப் போய் இராவணனைக் கொன்று சத்தியத்தை நிலை நாட்டினான் ராமன். தாய்தான் தெய்வம். தாய்தான் நமக்கு பாதுகாப்பு. இதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்... ஒரு வீட்டில் மகனின் உயிரை எடுக்க எமன் புறப்பட்டான்.

மகன் அப்போது தன் தாய்க்கு உதவி செய்து கொண்டிருந்தான். தாய்க்கு கசாயம் சுடவைத்துக் கொடுத்தான். பத்தியச் சாப்பாடு சமைத்தான். அவளுக்குத் தேவையானதெல்லாம் செய்தான். அவளுக்கு கண், கை, காலே அவன் தான். ஆமாம் .. அம்மாவுக்கு கண்பார்வை தெரியாதே... கண் தெரியாவிட்டால் கை, கால் இருந்து பிரயோசனம் இல்லையே! அவன் உயிரை எப்படி எடுப்பது? மகனின் உயிரை எடுத்தால் குருட்டுத்தாய் தவிப்பாளே... வேறு யாருமே அவளுக்கு இல்லையே...இதையெல்லாம் நினைத்த எமன் மகனின் உயிரை எடுக்காமல் சித்ரபுத்திர நாயனாரிடம் போகிறான். நடந்ததைச் சொன்னான். அவர் அவனை ஏசினார். உயிரை எடுத்து வரச் சொன்னால் எடுத்து வர வேண்டியதுதானே? பாசத்தை நெஞ்சில் வளர்த்தால் இந்தத் தொழில் செய்ய முடியுமா? ஒவ்வொரு வீட்டிலும் அழுது விட்டு வரவேண்டியதுதான்...ம்... போ! போய் மகனின் உயிரைக் கொண்டு வா...

''எமன் முடியாது என்று சொல்லிவிட்டான். அதன் பின்னர் ஒரு யோசனை சொன்னார் சித்ரபுத்திர நாயனார். அதன்படி அவன் செய்தான். மறுபடியும் அந்த வீட்டுக்குப்போன யமன் இம்முறை அம்மாவின் உயிரை எடுத்தான். மகன் அழுதான். கதறினான்... துடித்தான். கடைசியில் தூக்குப்போட்டு செத்தான். மகன் செத்ததும் அம்மாவின் உயிரைத் திரும்பவிட்டான் யமன். தாயோ மகன் செத்ததைக் கேட்டு தவித்தாள். அவளுக்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் உதவிக்கு வந்தார்கள்.''

கோபால் மனசில் ஒரு நினைவு, அவன் மனசின் உள்ளே யாரோ பேசுவதுபோல் இருந்தது. நினைவுதான் இருந்தாலும் அதைக் கேட்கத்தானே வேண்டும்... 'எமனை விட கொடியவன் இவன் அம்மா கஷ்டப்படும்போது உதவி செய்யாமல் கதை கேட்கிறானே! அம்மாவின் கதை சோகமாக போய்க்கொண்டிருக்கும்போது இவன் சுகமாக கதை கேட்கிறானே! என்ன மனிதன் இவன்?'

நினைவுகளில் இருந்து விடுபட்டுக் கதைக்கு வருகிறான் கோபால்... ''நாரதர் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து ஒரு பந்தயம் வைக்கிறார். அதில் வென்றவர்களுக்குத்தான் மாம்பழம் என்று சொல்லுகிறார்கள். பந்தயம் உலகத்தை முதலில் சுற்றி வரவேண்டுமாம். முருகன் உடனே மயில் மீது ஏறி உலகத்தைச் சுற்றி வரப் புறப்பட்டான். விநாயகர் தாய் தந்தையரே உலகம் என்று நம்பி சிவனையும் உமா தேவியையும் சுற்றி மாம்பழத்தை வாங்கினார். இதிலிருந்து தெரிவது என்ன? தாய் தகப்பன்தான் உலகம். தாய் தகப்பனைவிட்டு இந்த உலகத்தை காரிலோ விமானத்திலோ கப்பலிலோ சுற்றி வந்தாலும் புண்ணியம் கிடைக்காது. அவர்கள் நரகத்திற்குத்தான் போவார்கள்...''

கோபாலுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பிரசங்கியார் சொன்னது அவனுக்காகச் சொன்னதுபோல் இருந்தது. நடுங்கினான் அவன்... ''ஒவ்வொருவரும் தன் தாயை தகப்பனைக் கவனிக்க வேண்டும். பசி பட்டினி இல்லாமல் பார்க்க வேண்டும்... அதைச் செய்யாமல் அம்மாளுக்கு பூஜை செய்து அன்னதானம் போட்டாலும் புண்ணியம் வராது. இந்தத் தெய்வங்களைப் பார்த்தால்தான் அந்தத் தெய்வங்கள் பார்க்கும்; உதவி செய்யும்...''

சுமார் இரண்டு மணித்தியாலம் பிரசங்கம் செய்துவிட்டு, பிரசங்கத்தை முடித்தார். முடிக்கும்போது அவர், தன் வெண்தாடியை தடவிக் கொண்டார். அதைப் பார்த்த கோபாலுக்கு அவர் முன்னர் சொன்னதை நினைவு படுத்தியது போல் ஒரு எண்ணம் ஓடியது... அவன் கண்களில் அம்மா இருமிக் கொண்டு அடுப்படியில் ரொட்டி சுட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. காதுகளில் அம்மாவின் நெஞ்சுவிடும் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. கால்கள் தான் லயத்திற்குப் போகத் துடித்தன. மனம் பூசை பார்க்க அவனை நிறுத்தியது.

வசந்த மண்டபத்தில் திரை விலக நாதஸ்வர மேள தாளங்கள் முழங்கின. கோயில் குருக்கள் பஞ்சலாத்தி

காட்டிக்கொண்டிருந்தார். அவரோடு இன்னும் நாலுபேர் பஞ்சலாத்தி காட்டினார்கள். ஐந்து மூர்த்திகளுக்கு ஐந்து குருக்கள். ஐந்து பஞ்சலாத்திகள். அம்பாளுக்கு நல்ல சாத்துப்படி செய்திருந்தார். லைட் வெளிச்சத்தில் சரிகை இழைத்தவை மின்னின... நகைகள் டாலடித்தன... பார்க்க பரவசமாக இருந்தது. நல்ல ஜோடனை...

கோபால் இரு கையைத் தூக்கிக் கும்பிட்டான். அப்போதும் கம்பளிப்பூச்சியாய் ஒரு எண்ணம் நெஞ்சில்... 'இரண்டே இரண்டு சேலையை வைத்துக்கொண்டு அம்மா படும்பாடு...அப்பப்பா சொல்ல முடியாது...ஒன்றை மாற்றி ஒன்றைக் கட்டிக் கொண்டே காலத்தை ஓட்டுகிறாள். ஒன்று இடுப்பில் இருந்தால் மற்றது கொடிக் கயிற்றில் இருக்கும். இரண்டுக்கும் தனித்தனிக் காவியம் உண்டு. ஒன்று கிழிந்து கொண்டே இருக்கிறது. மற்றது நிறம் மாறிக்கொண்டே இருக்கிறது.'

அவனுக்கு இந்த நேரத்தில் பிரசங்கியார் சொன்னதும் நினைவுக்கு வருகிறது... ''சொந்தத் தாயைக் கவனிக்காமல் அவள் ஒழுங்காக உடுத்துவதைக் கண்டு மகிழாமல் அம்பாளின் அலங்காரத்தைக்கண்டு புகழ்வது பெரும் பாவம் ... சொந்த வீட்டில் கூரையே இல்லாதபோது அவன் மனம் தடுமாறியது. கூட்டத்தைப் பார்த்தான். பெரும் கூட்டம் ... ஆண்களும், பெண்களும் அதில் எத்தனை எத்தனை விதங்கள்? இளசு பழசான பருவங்கள்... பலவிதமான உடைகள்... பவவிதமான நிறங்கள்... அவர்கள் எல்லோரும் ஒவ்வொரு அலங்காரம் தேவைப்படுவதுபோல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அலங்காரத்தில் வந்திருந்தார்கள்...

பூஜை முடிந்ததும் சாமி தூக்க முயற்சி செய்தார்கள். கோபால் மௌனமாக நின்று கொண்டிருந்தான். அவன் பேசாமல் நிற்பதைப் பார்த்து கோயில் குருக்கள் அவனையும் கூப்பிட்டார். அவன் மறுக்காமல் சாமி தூக்கப் போனான்.

சாமி உள்வீதி சுற்றி வெளிவீதியில் வந்தது. கோபாலின் மனதில் ஒரு படம். அதில் ஒரு வசனம்... அம்மாவை ஒரு நாளும் இந்த கோயிலுக்குக்கூட கூட்டி வரவில்லை. எத்தனையோ நாள் ஆசையில் போக வேண்டு மென்று சொல்லியிருக்கிறார். 'ம்... கோயிலுக்கு போக லாம்னு ஆசையா இருக்கு...போக முடியல்ல...அதுக்கு தான் நமக்கு நேரமில்லியே! தூங்கி முழிச்சி எழும்புனதில இருந்து ஒரே வேல...அப்புறம் எங்க கோயிலுக்கு போறது?' அம்மாவின் குரல் அவன் மனசை 'அறு' 'அறு' என்று அறுத் தது. அவள் அந்தக் காம்பராவை விட்டுப் பக்கத்தில் உள்ள டவுனைக் கூடச் சுற்றிப் பார்த்ததில்லை. கண்டியிலிருந்து கொண்டு தலதா மாளிகை பார்க்காததுபோல்தான்... கோபால் கவலையுடன் சாமி தூக்கினான்.

சாமி வசந்த மண்டபத்திற்கு வந்தது. கோபால்எல்லோ ரோடும் சேர்ந்து சாமியை இறக்கிவிட்டு மனச்சுமையை இறக்க முடியாமல் நின்று கொண்டிருந்தான். பிரசாதம் வைத்து பஞ்சலாத்தி காட்டினார்கள். எல்லோருக்கும் விபூதி, சந்தனம், குங்குமம், பூ கொடுத்தார்கள். கடைசி யாக பிரசாதம் கொடுத்தார்கள்.

திடீரென்று ஒரு குரல் அவன் நெஞ்சில்...'உன்னுடைய அம்மா ஒழுங்காகச் சாப்பிட வழிசெய்தாயா? நீயும் மனி தனா?' தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அவனு டைய தலை சுற்றியது. விபூதியை ஒரு சிறு பேப்பர் துண்டில் சுற்றி எடுத்துக்கொண்டு 'விறு' 'விறு' வென்று லயத்தை நோக்கி நடந்தான் இருட்டில்...

விடிந்ததும் மறுநாள் பீலியடிக்கு குளிக்கப் போனான் கோபால். அந்த நேரத்தில் மூன்று பேர் குளிக்க வந்திருந் தார்கள். அதில் ஒருத்தன் பீலியில் தலையைப் பிடித்து கொண்டிருந்தான், மற்றவன் ஊத்தை தேய்த்தான். இன் னும் ஒருத்தன் சேலை துவைத்தான். இவனுக்கு ஆச்சரியம் அது யாருடைய சேலையாக இருக்கும்?

சேலை துவைத்தவன் குளித்து முடித்துவிட்டுப் போனான். அவன் போனதும் அவனைப்பற்றி பேச்சு வந்தது. கோபால் அதை உற்றுக் கேட்டான். 'இப்ப சேல தோச்சானே...அவன்யாரு தெரியுமா? நம்ம சிவசாமிதான். டவுன்ல கடையில வேல செய்யிரான். தெனம் குளிக்க வரு வான். வந்த நேரம் அம்மாட சேலசட்டைதோச்சி குடுப் பான், சோறாக்குவான், நல்லவன்...'

கோபாலுக்கு என்னவோபோல் இருந்தது. சேலை துவைத்துக்கொடுப்பவனோடு தன்னை எந்த வகையிலும் சேர்க்க முடியாது என்று நினைத்தான். அவன் உயர்ந்து விட்டான்! அவனுக்கு புண்ணியம் கிடைக்கும். இந்தத் தெய் வத்தைத்தானே பூஜை செய்கிறான்! ஆனால் இவனோ...

கோபால் அவசர அவசரமாக குளித்து விட்டு லயத் திற்கு வந்தான். லயத்தில் கொடிக்கயிற்றில் அம்மாவின் சேலையை—அழுக்கானதை—சுருட்டிக்கொண்டு மறுபடியும் பீலியடிக்கு ஓடினான். பீலியடியில் முன்னர் இருந்தவனே இன்னும் இருந்தான்.

'இப்பதானே குளிச்ச? மறுபடியும் ஏன் வந்த?...'

'குளிச்சிட்டேன்...இப்ப அம்மாவோட சேலைய தொவைக்க வந்தேன்.'

அவன் சிரித்தான்...''எல்லாரும் உடுப்பு தோச்சிட்டு தான் குளிப்பாங்க...நீ என்னடான்னா குளிச்சிட்டு தோய்க்கிற...சரி...சரி...இன்னிக்கி கோயிலுக்கு போறியா? ...போனா என்னய கூப்புடு...''

''நா இன்னைக்கி கோயிலுக்கு போகல்ல...வீட்டுல வேல இருக்கு. அம்மாவுக்கு வேல செஞ்சு குடுக்கனும், அவங்களுக்கு சொகமில்ல...'' கோபால் சொன்னான்.

அவனால் நம்ப முடியவில்லை. கோயிலில் எப்போது 'மணி'யடிக்கும் என்று இருப்பவன் இன்று போகவில்லை

என்கிறானே? அதுவும் கோயிலில் கொடியேறி திருவிழா நடக்கும் நேரத்தில்.

கோபால் துவைத்த சேலையை பீலியடியில் பிடித்துக் கழுவி அலசினான். சோப்பும் அழுக்கும் 'ஓடு ஓடென்று' ஓடியது. ஓ...அது மட்டுமா? இன்னும் என்ன என்னவோ அவன் உள்ளத்திலிருந்து ஓடியது. ★

**வீரகேசரி—வார வெளியீடு**
*31—1—1977*

# உயிருள்ள பிணங்கள்

தேய்ந்து, அறுந்து கயிற்றால் பிணைக்கப்பட்ட ரப்பர் செருப்பின் உள்ளே கால்களை நுழைத்தவாறு சந்திக் கடைக்கு ஒரு எட்டு நடந்து விட்டு வரலாமென்று நினைத் தான் ராசு. சந்திக் கடைக்குப் போனால் பேப்பர் பார்க் கலாம்...பேப்பர் பார்த்த பின்னர் அன்றையச் செய்திகளை வைத்து, அரசியலை ஒரு அலசு அலசலாம்...அவன் வாய் திறக்காவிட்டாலும் சந்திக்கடை முதலாளியின் வாய் திறக்க வைத்துவிடும். திறந்த வாய்க்கு பதில் சொல்ல வாய் திறக் கத்தானே வேண்டும்...

காம்பராவை விட்டு வெளியே வந்தான் ராசு... வாசலில் படுத்துக் கிடந்த டைகர் நாய், தன் உடம்பை ஒரு தடவை குலுக்கிக்கொண்டு அவனோடு புறப்படத் தயாராகிவிட்டது. டைகருக்கு எப்படி தெரியும் அவன் போவது? ஓ...அவன் செருப்பு சொல்கிறதே; செருப்பு அவன் காலில் ஏறினால் எங்கோ போகிறான் என்றுதானே அர்த்தம்!

'நீயும் வர்ரியா...' ராசு கேட்டான். அது வாலை ஆட்டியது. அதுவும் வருகிறதாம்! 'வேணாம்! நீ இங்கேயே இரு...நான் சந்திக்கடைக்குப் போறேன்... வர்ர நேரம் பிஸ்கட் கொண்டாரேன்...'

அப்போதும் டைகர் வாலை ஆட்டியது. அது அவனை விடாது போலிருந்தது. அதற்கு வாய் இல்லையென்றாலும் வாயால் பேசுவதை வாலால் காட்டிவிடுகிறதே! ராசு அதட்டினான்...'ஏய்! டைகர் உள்ளே போ!...'

டைகர் தன் வாலை ஆட்டாமல் மெதுவாக காம்பரா வின் உள்ளே போனது. ராசு நடக்க ஆரம்பித்தான்...அப் போது ஒரு குரல் அவனை 'கொக்கி' போட்டு இழுப்பது போல் ஒலித்தது.

'ஒங்களத்தான் பார்க்க வந்தேன்...' அந்தக் குரல் காதில் விழுந்தபோதே குரலை வைத்தே 'இன்னார்' தான் என்று அடையாளம் கண்டுகொண்டே அவன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய அடையாளம் நூற்றுக்கு நூறு சரி. தப்படிக்கும் சுப்பன்தான் நின்று கொண்டிருந்தான்.

'நம்ம சாமிக் கெழவன் செத்துட்டாங்க...அதான்...' அவன் வார்த்தைகளை ரப்பர் பாலாய் இழு இழுவென்று இழுத்தான்.

'சாமிக் கிழவனா? ஏன் என்னா வருத்தம்...?'

'ரெண்டு நாளா காச்சல்ல வாய் புணத்திக்கிட்டு கெடந்தான் கெழவன். நான்தான் கை மருந்து நாட்டு மருந்து கசாயம் எல்லாம் செஞ்சு குடுத்தேன். கடையில டெபுலட்சும் வாங்கிக் கொடுத்தேன், சரிபோகல்ல... கொஞ்ச நேரத்துக்கு முந்தி உசிர் போயிருச்சி...'

அவனால் நம்ப முடியவில்லை. ஆனால் நம்பித்தானே ஆகவேண்டும். ஒரு கிழமைக்கு முன்னர்தான் சாமிக் கிழவ னோடு அவன் பேசினான்...

மெல்ல மெல்ல அவன் நினைவுகள் அந்த நாளை எட்டி ஓடின.

ஃ ஃ ஃ

அன்று வெள்ளிக் கிழமை...தோட்டத்து மாரியம்மன் கோயிலில் பக்கத்து காம்பரா பரமசிவம் தன் மனைவிக்கு சுக பிரசவம் ஆகவேண்டுமென்று வேண்டிக் கொண்டது பலித்ததால் நன்றிக் கடனாக அம்மனுக்கு பொங்கல் வைத்தான். அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று

அவனையும் அழைத்தான். அன்று அவன் வேலை முடிந்து வந்து அவசர அவசரமாக பீலியடியில் தலையைப் பிடித்து விட்டு, சூடாக டீயை உறிஞ்சி, துவைத்த வேட்டியும் சட்டையும் மாட்டிக்கொண்டு கோயிலுக்கு வந்தான். கோயிலில் சாமிக்கிழவன் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந் தான். பண்டாரம் பொங்கல் அடுப்பை எரியவிட்டுக் கொண்டிருந்தான். வெள்ளிக் கிழமையானால் சாமிக் கிழவனை கோயிலில்தான் பார்க்கலாம். அங்கே அவன் கூட்டிப் பெருக்குவான். விளக்குப் போடுவான். இன்னும் என்னென்ன வேலைகள் இருக்கிறதோ அதற்கெல்லாம் கை கொடுப்பான். இதற்கெல்லாம் சம்பளம் இல்லை. தொண்டுக்கு யார் சம்பளம் கொடுப்பார்கள்? அவனாகத் தான் செய்கிறான். பென்ஷனானதிலிருந்து அவனுக்கு கோயிலோடுதான் தொடர்பு அதிகமாகிவிட்டது. அனா தைக்கு ஏதாவது ஒரு தொடர்போ, ஏதாவது ஒரு பற்று தலோ இருக்க வேண்டுமாம். இந்தக் கிழவனுக்கு அந்தக் கோயிலில்தான் எல்லாம்...கோயிலில் பூசையோ, பொங்கலோ இருந்தால் முதலில் இந்தக் கிழவனிடம் சொல்வார்கள்...அப்புறம்தான் மற்றவர்களுக்கு...

வருடா வருடம் அந்தக் கோயில் திருவிழா வரும் போதெல்லாம் இந்தக் கிழவன்தான் ஹீரோ...திருவிழா வுக்கு முதல் நாளிலிருந்து கோயிலில்தான் கிடப்பான் அவன். இரவெல்லாம் மாவிலை தோரணம் பின்னுவான். பின்னியதை ஆங்காங்கே அழகாக தொங்க விடுவான். காவடி செய்வான். செய்த காவடிக்கு அழகூட்டுவான். அன்னதான சமையல் வேலையிலும் தன் கைவரிசையைக் காட்டுவான். திருவிழாவன்று வேல் குத்துபவர்களுக்கு இவன்தான் சதையை இழுத்துப் பிடித்து வேல் குத்துவான்.

ஒரு காலத்தில் அவனே வேல் குத்திக்கொண்டு காவடி எடுத்தவன் தான்...அப்போதெல்லாம் கன்னத்தின் இரு பக்கமும் வேலைக்குத்தி, உள் நாக்கிலிருந்து ஒரு பாம்பு உருவம் கொண்ட வெள்ளீத் தகட்டை வெளியே நீட்டி,

திறந்த மார்பில் சதைப் பிடிப்பான இடத்தில் சின்னஞ் சிறிய வேல்களை மாட்டி காவடி ஆடுவான். சில நேரத்தில் பறவைக் காவடி எடுப்பான். அவனுடைய ஆட்டபாட்ட மெல்லாம் மாத்தளைத் தேரின்போது அதிகம்தான். அம்மன் தேரின் முன்னே காவடி ஆடிக்கொண்டு முள் மிதி யடியில் நடந்து, நாக்கை ஒரு முழத்துக்கு வெளியே நீட்டி அதில் சூடத்தைக் கொளுத்தி...அதெல்லாம் ஒரு காலம்...

இப்போதோ சில வருடங்களாகத்தான் காவடி ஆடுவ தில்லை அவன். ஆனால், காவடி செய்து கொடுப்பான். வேல் பூட்டிவிடுவான். மற்றவர்களை கோயிலில் பூஜை, பொங்கல் செய்யச் சொல்லித் தூண்டுவான். சொல்லப் போனால் இவனுடைய தூண்டுதலினால்தான் வருடா வருடம் கோயிலில் திருவிழா நடக்கிறது. கிழவன் இல்லா விட்டால் திருவிழாவை எப்போதோ நிறுத்தியிருப்பார் கள்...எதையும் நிறுத்தி வைக்கத்தான் நம்மில் எத்த னையோ போராட்ட வீரர்கள் உண்டே! விடுவார்களா? ஆனால், இங்கே அந்தக் கிழவன் அவர்களுக்கு ஒரு நந்தி··· அந்தக் கிழவன் கோயிலில் மட்டுமல்ல தோட்டத்திலுள்ள செத்த வீடு, கல்யாண வீடு, சடங்கு வீடு, இன்னும் எந்த வீடோ எல்லாவற்றிலும் முன்னணி மனிதன். செத்த வீட்டில் அவன் ஒப்பாரி இல்லாமல் பிணம் வெளியே போகாது. கல்யாண வீட்டில் அவன் கைபடாத காய்கறிகள் இலையில் விழாது. இந்தத் தள்ளாத வயதிலும் எந்த வீட் டிலும் வேலை செய்வான். கிடைத்ததை சாப்பிடுவான். எந்த விசேஷத்திற்கும் அவனுக்குத் தனியாக அழைப்புத் தேவையில்லை. அவன் காதில் ஒரு சொல் போட்டு வைத் தால் போதும்...அவன் வந்து விடுவான்...

சாமிக்கிழவனுக்கு உற்றார் உறவினர்கள் யாருமே இல்லை. ஒருகாலத்தில் இருந்தார்கள். பின்னர் இறந்து விட்டார்கள். அவன் தனிமரமானான். ஆனால் தொழி லாளர்கள் தோப்பில் சேர்ந்து வாழத் தொடங்கினான். இன்று அவர்கள்தான் அவனுக்கு சொந்தக்காரர்கள்,

அதற்கு அடையாளமாகத்தான் அவர்களின் பிள்ளைகள் எல்லாம் இருட்டியதும், அவனைத் தேடிக் கூட்டமாக கதை கேட்க வந்துவிடுவார்கள். அவனும் அவர்களுக்காக கதை சொல்லிக்கொண்டே வந்தான். தினமும் ஒரு கதை... ராமாயணம்...மகாபாரதம்...வேதாளம் சொன்ன கதை... இப்படி பல கதைகளைத் தொடர்ந்து சொன்னான். இதனால் இருட்டியதும் கிழவனின் கதை கேட்க வாண்டு கள் எல்லாம் போய்விடுவதால் காம்பராக்களில் இருக்கும் பெரியவர்களுக்கு தொந்தரவு குறைந்தது. அந்தக் கொஞ்ச நேரமாவது நிம்மதியாக இருந்தார்கள் அவர்கள்...

இப்படியே கிழவனின் கதை ஓடியது...

சொந்தம் பந்தம் இல்லாத அனாதையாக இருந்த கிழவன் நாலு பேரைத் தேடி வைத்ததால்தான் கடைசிக் காலத்தில் நல்லதாகப் போய்விட்டது. பென்ஷனானபோது அவன் எப்போது பென்ஷனாவான் அவனுடைய காம்ப ராவை அபகரிக்கலாம் என்று பார்த்திருந்த துரை, அவனைக் காம்பராவை விட்டுப் போகச் சொன்னபோது முழுத் தோட்டமே அதற்கு எதிர்ப்பு கொடுத்து காம்பரா வில் தங்க முடிவு எடுத்துக் கொடுத்தது. காம்பரா கிடைத் தது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட் டால் டவுண் வீதிகளில் திரிந்து பிச்சையெடுத்து சாப்பிட்டு, அனாதையாகச் சாக வேண்டியதுதான்...

அது இருப்பதால்தான் பசியிலும் நிம்மதியாகப் படுத்துத் தூங்க முடிகிறது! இன்று அந்தக் காம்பராவில் தான் மீளாத் தூக்கத்தில் விழுந்து விட்டான் கிழவன்...

சொந்தமே இல்லாத ஆனால், எல்லோருக்கும் சொந்த மாகிப்போன அந்த சாமிக் கிழவனா செத்துப் போய்விட் டான்? நம்பவே முடியவில்லை...

மெல்ல மெல்ல அவன் அந்த நினைவுகளை கலைத்து விட்டு நனவுலகத்தில் நின்றான். அப்போதுதான் அவனால் சாமிக்கிழவனுக்கு பெட்டியெடுத்து புதைக்க வேண்டிய

பொறுப்பு தனக்கு இருப்பதையும் அதனால்தான் தப்படிக்கும் சுப்பன் வந்து சொல்கிறான் என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது...

'ஆமா......யார்......யாரு சாமிக்கெழவன் காம்பராவில இருக்கா?' அவன்தான் கேட்டான்.

'அங்க நம்ம சொக்கன், முத்து, ஆறுமுகம், ராமன் எல்லாரும் இருக்காங்க...'

அவன் அந்த உருவங்களை நெஞ்சில் நிறுத்தி பார்த்தான்......அவர்களில் ராமன் பார்பர். சொக்கன் டோபி, முத்து தப்படிப்பவனில் இன்னொருத்தன். ஆறுமுகம்தான் 'சும்மா' ஆள்...

'சரி...நீ போயி இரு... நான் சந்திக்கடைக்கு போயிட்டு வாறேன்...' என்று சொல்லிவிட்டு நடந்தான். அந்த நேரத்தில் சுப்பனின் கேள்வி இன்னொரு 'கொக்கி'யாக வந்து இழுத்தது...

'கோடி வேட்டி வேணுமுங்க! பொட்டியும் வேணுமுங்க!'

சாமிக்கிழவனை அனாதையென்று ரத்தபாசச் சடங்குகளைத் தவிர்த்தாலும் கோடி வேட்டி போடுவதையும் பெட்டியில் வைத்து புதைப்பதையும் தவிர்க்க முடியுமா? முடியாது...ஒரு பெட்டியும் வேட்டியும் தேவை...அதை அவனிடம் சொன்னால் கிடைக்குமா? கிடைக்கும்...எப்படி? இது போன்ற அனாதைப் பிணங்களை கோடித் துணியுடன் பெட்டியுடன் புதைக்க ஓடித்திரிபவன் அவன்தான்...

'அதெல்லாம் காலையில வாங்கிக்கலாம்...அதை பத்தி பேசத்தான் சந்திக்கடைக்கு போறேன்...'

ஃ ஃ ஃ

சாமிக்கிழவனின் பிணத்தை காம்பராவின் உள்ளே பிணத்திற்குரிய மரியாதையுடன் சாக்குக் கட்டிலில் வைத்

திருந்தார்கள். பிணத்தின் தலை பக்கம் விளக்கு எரிகிறது. ஆனால், அதன் பக்கத்தில் அழுது வடிக்க பெண்களோ பிள்ளைகளோ இல்லை. ஒரு அமைதியுடன் ஆனால், ஆளைக் கொல்லும் பயங்கர அமைதியுடன் பிணம் கிடக் கிறது...

வெளியே சீட்டுக்கச்சேரி சூடுபிடித்துவிட்டது. ராசுவும் சந்திக்கடை சின்னத் தம்பியும் ஒரு பக்கத்திலும் வேறு இரண்டுபேர் இன்னுமொரு பக்கத்திலும் இருந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்... இது வராந்தாவின் உள்ளே... அதற்கு வெளியே லயத்து வாசலில் இன்னும் ஒரு கோஷ்டி சீட்டு விளையாடிக் கொண்டிருந்தது. அவர்களுக்கு அப்பால் சற்று தூரத்தில் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் தப்படி சுப்பன் சூடுகாட்டிக்கொண்டே, அவ்வப்போது தப்படிக்கிறான். அந்த அவ்வப்போது யாராவது சாமிக் கிழவனை அதாவது பிணத்தைப் பார்க்க வந்தால்தான்... விடியும் நேரத்தில் வெளுத்து வாங்குவார்கள். இன்னும் சூடு ஏறவில்லை. அதாவது ஏதாவது உள்ளே போகவில்லை ...உள்ளே போனதும் அவன்—அவன் மட்டுமா? — அவனோடு சேர்ந்தவனும் அடிக்கிற அடியில் தப்பு கிழிந்தாலும் கிழிந்துவிடும்...

சீட்டுக்கச்சேரியில் மும்முரமாக நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தார்கள்... செத்த வீட்டில் சீட்டு விளையாடக் கூடாது என்பார்கள். ஆனால், சீட்டு இல்லையென்றால் இரவில் யார்தான் வரப்போகிறார்கள்? சீட்டு விளையாட்டு இருப்பதால்தான் பலரும் வருகிறார்கள்...

இரவெல்லாம் அந்தச் சீட்டுக் கச்சேரியும் தப்புச்சத்தமுமாக சாமிக் கிழவனின் கடைசி இரவு நீண்டு நீண்டு ஓடி ஓடி மறைந்தது...

காலையில் ராசுவும் சந்திக்கடை சின்னத்தம்பியும் பிணத்தைப் புதைப்பதற்கு தேவையான காரியத்தை செயலாற்றுவதில் இறங்கினார்கள். லயம் லயமாக வசூலில்

இறங்கினார்கள். எல்லா லயத்தையும் ஆங்காங்கே உள்ள வீடுகளையும் சுற்றிவிட்டு வந்தபோது பத்து மணிக்கு மேலாகி விட்டது, கிடைத்த சில்லறைகளையும் நோட்டுகளையும் எண்ணிப் பார்த்தார்கள்...எழுபதுக்கும் மேலே இருந்தது.

ராசு சொன்னான்... 'இது போதாது. இன்னும் நாப் பாது அம்பது ரூபாவேணும். என்ன செய்யலாம்?'

'ஏன் டவுனுக்கு போனா கொஞ்சம் சேர்க்கலாமே...' இது ஒருத்தரின் யோசனை...அதை சந்திக்கடை சின்னத் தம்பி நிராகரித்தான்... 'டவுன்ல மொதலாளிமாரு கிட்டயா வேணாம்! வேணாம்! இதுக்குள்ள மறந்து போச்சா! நம்ம தோட்டத்து கோயிலுக்கு வசூல் வாங்கப் பட்ட பாடு தெரியும்தானே...?'

சின்னத்தம்பியின் கேள்வியில் கிளம்பிய நினைவுகள் அவர்கள் நெஞ்சில் நிழல்களாய் நீண்டு விழுந்தன... சில மாதங்களுக்கு முன்னர் தோட்டத்து மாரியம்மன் கோயி லில் ஒரு மண்டபம் கட்ட டவுனில் நிதி வசூலிக்க முடிவு செய்து அதன்படி டவுனிலுள்ள ஒவ்வொரு கடைக்கும் ஏறி இறங்கினார்கள். சில கடைகளில் கையை விரித்தார் கள். சிலர் ஐந்தோ பத்தோ கொடுத்தார்கள். டவுனில் உள்ள முக்கிய புள்ளியான கே. எம். ஆரிடம் போனார்கள். கே. எம். ஆர். என்றால் யாருக்கும் தெரியும்...ஒரு கைக்குத் தெரியாமல் மறு கையால் உதவி செய்வாராம்...! ஆனால் இது பலரும் சொல்லக் கேள்வி...

கே. எம். ஆரின் கடைக்குப் போனார்கள். அவர்கள் அதிர்ஷ்டம் அவர் கடையில் இருந்தார். இவர்களை கையெடுத்துக் கும்பிட்டு வரவேற்றார். அதைக் கண்டு இவர்கள் கூனிக்குறுகிப் போனார்கள். என்னே அவரின் அன்பு! இவர்கள் தயங்கித் தயங்கி தாங்கள் வந்த காரணத் தைச் சொன்னார்கள். அவர் இதுக்குத்தானா? என்று சொல்லிவிட்டு புன்னகை புரிந்தார்... 'சரி...நம்ம கணக்கில் முந்நூறு' ஓ தாறேன்... கூரைக்கு போட...'

'சரிங்க...' ஏக குரலில் சொன்னார்கள் அவர்கள்...

'கோயில் மண்டப வேலையத் தொடங்கினோன்ன முந் நூறு ஓட்டையும் வாங்கிக்கிங்க...'

அவர்கள் தோட்டத்திற்கு வெற்றியுடன் திரும்பினார் கள்.

கோயில் மண்டப வேலை 'விறு...விறு' வென்று நடந் தது. மண்டபக் கூரைதான் போடவேண்டும்-ஓடு வாங்க, கே. எம். ஆரைத் தேடி வந்தார்கள். அவர் கடையில் இல்லை. பல தடவை அலைந்து ஒரு நாள் அவரைக் கண் டார்கள். அவர்களிடம் கே. எம். ஆர். ஒரு தேதியைக் கொடுத்து தான் ஓடுகளுடன் வருவதாகவும் அன்று பூஜை யொன்றை செய்ய வேண்டும் என்றும் சொன்னார். அன் றைய நாளும் வந்தது. கே எம். ஆர். வேனில் ஒரு கோஷ்டி யோடு வந்தார். கொண்டு வந்திருந்த ஓடுகளைக் கொடுத் தார். அதை அவரோடு வந்திருந்த காமெரா மேன் படம் எடுத்தார்.

பூஜை நடந்த பின்னர் சின்னக் கூட்டம். அதில் அவ ரோடு வந்திருந்த ஒருவர் 'கலியுகப்பாரி' என்று புகழ்ந் தார். மாலை விழுந்தது. அடுத்த நாளுச்கு அடுத்த நாள் பேப்பரில் 'கே.எம். ஆர். தோட்ட ஆலயத்திற்கு நிதி உதவி' என்று கொட்டைப்பாக்கு சைஸ் எழுத்தில் நியூஸ் வந்தது. அதன் பின்னர் டவுண் எங்கும் வதந்தி பரவியது. கே. எம். ஆர். தான் கோயிலையே கட்டிக் கொடுத்தார் என்று. அந்த வதந்தி ராசுவின் காதிலும் விழுந்தது. அவனுக்கு கோபம் வந்தது. முந்நூறு ஓடு கொடுக்க கே. எம். ஆர். ஆடிய நாடகம் இதற்காகத்தான் என்பது புரிந்தது...

கே. எம். ஆர். லேசுபட்ட மனிதரில்லை. ஊரில் உள்ள எல்லா மன்றங்களிலும் சபைகளிலும் தன் தலையே உயர்ந்து இருக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை. தனக்கு மாறாக எந்த சபையாவது இருந்தால் ஆள் திரட்டி சபையையே கைப்பற்றுவார். இதற்கெல்லாம் ஒரு

பட்டாளம் அவர் கையில் இருக்கிறது. அவர்கள் மத்தியில் அவர்தான் தலைவர். அவர் பேச்சுதான் பொன்மொழி...

ராசு சத்தம் போட்டு சொன்னான். '...கோயிலுக்கு ஓடு வாங்கினதை மறந்திராத...பணம் கட்ட குறைச்சலா இருந்தாலும் பரவாயில்லை...மீதிய நம்மலே போட்டு செய் வோம்...'

'ஆமாமா...எனக்கிட்டகூட முந்தி குடுத்து வைச்ச பணம் இருக்கு. கட்ட மொய் வேற கெடைக்கும்...போட்டு செய்வோம்...' சந்திக்கடை சின்னதம்பி சொன்னான். 'அப்பரெண்டு பேரை பெட்டியெடுக்கவும் கோடி வேட்டி வாங்கவும் அனுப்புவோம். சுந்தரம், கணேசு நீங்க ரெண்டு பேரும் போங்க...போயிட்டு வெரசா வந்திரனும்...சரியா' ...'ராசு அப்போதே இரண்டு பேரையும் டவுனுக்கு அனுப்பி வைத்தான்.

அவர்கள் இரண்டு பேரும் கணேசும் சுந்தரமும்தான் டவுனுக்குப் புறப்பட்டார்கள். பிரதான வீதிக்கு வந்ததும் பஸ் கிடைத்தது. ஆலமரத்துச் சந்தியில் இறங்கினார்கள். வழியில் உள்ள ஒரு ஜவுளிக் கடையில் கோடி வேட்டி வாங்கிக் கொண்டார்கள். பிறகு பிணப்பெட்டி வாங்க நடந்தார்கள். வழியில் கே. எம். ஆரின் வீடு...வீட்டு வாச லில் சிறு கூட்டம்...கூட்டத்தின் நடுவில் தொந்திக்கு மேலே தங்கச் சங்கிலி புரள நின்று கொண்டிருந்தார். இவர்கள் இருவரும் வீதியில் போவதைக்கண்டு கைகாட்டி கூப்பிட் டார். இருவரையும் எப்போதோ பார்த்தது, ஞாபகம் வைத்திருக்கிறார்.

'எங்க வந்தீங்க...'

கணேஷ் விஷயத்தைச் சொன்னான்.

'பெட்டி வாங்கவா? ஆஸ்பத்திரிக்கு பக்கத்திலுள்ள கடையில வாங்குங்க...கொறைஞ்ச விலைக்கு தருவாரு... நான் இப்பவே அந்தக்கடைக்கு டெலிபோன் பண்ணி சொல்

ரேன்...' என்ற கே. எம். ஆர்., 'பெட்டி கொண்டு போவ ணும் இல்ல... அப்ப நம்ம கார் தோட்டத்திற்கு வருது... அந்தக் கார்ல பெட்டிய கொண்டு போவோம்...இருங்க... நானே பெட்டியும் வாங்கி தர்றேன்...' என்று திடீரென்று புதுத்திட்டத்தை வைத்தார். அவர்கள் இருவருக்கும் சந்தோஷம்...வந்த வேலை சுளுவாக முடிந்து விட்டதே... பெட்டி கொண்டுபோக காரும் பிடிக்க வேண்டியதில்லை...

அந்தக்காரின் மேலே பிணப்பெட்டி இருந்தது...காரின் முன் பக்கம் கே. எம். ஆர். வெள்ளையும், சுள்ளையுமாக இருந்தார் பின் பக்கம் சுந்தரமும் கணேசும்...கார் டவுனில் முக்கிய வீதிகளில் பல இடங்களில் நின்று நின்று ஓடியது.

காரின் முன் பக்கம் கம்பீரமாக அவர் உட்கார்ந்திருந் தார். அவர் நெஞ்சில் ஒரு சுழற்சி...'நாளை இந்த ஊரே அந்தச் சாமிக் கிழவன் செத்துப் போனதற்குப் பெட்டி எடுத்துக் கொடுத்தது அவர்தான் என்று சொல்லப் போகி றது...அவர் அதைச் சொல்லாவிட்டாலும் அவரின் காரின் மேலே இருக்கும் பெட்டி சொல்லுமே! எத்தனையோ கண்கள் தான் பெட்டியைப் பார்த்து விட்டனவே! அவருக்கு செலவு கொஞ்சம் பெட்ரோல்... ஆனால் கிடைக்கப் போகிற புகழ்...'

அந்தக் கார் தோட்டத்தை நோக்கி மெதுவாக ஓடியது...

ராசுவும் சந்திக்கடை சின்னத்தம்பியும் எஸ்டேட் கேட் டருகே வந்து கொண்டிருந்தார்கள். அப்போது கேட்டை நோக்கி அந்தக் கார் வந்து கொண்டிருந்தது. பிணப்பெட்டி அந்தக் காரில் இருப்பதைப் பார்த்து ராசு அந்தக் காரை நிறுத்தினான். நின்ற காரில் கே. எம். ஆர். இருப்பதைப் பார்த்துவிட்டுப் பதறினான் அவன்.

'காரை விட்டுஇறங்குங்க...' ராசு சத்தம் போட்டான். கணேசும் சுந்தரமும் இறங்கினார்கள்.

'பெட்டியை கீழே இறங்கி வைங்க...'

கே. எம். ஆர். 'ஏன்' என்று கேட்டார்...

'அதைச் சொல்லணுமா? சொல்றேன்... பொணப் பெட்டியை எங்கப் பணத்தில வாங்கி அதைக் கார்ல கொண்டு வந்து குடுத்திட்டு நான்தான் பெட்டி வாங்கி னேன்னு ஊரெல்லாம் தம்பட்டம் அடிக்கவா? முந்தி அப்படித்தான் நம்ம தோட்டத்தில உள்ள ஒருத்தன் நல்லா பாடுறான்னு அவனுக்குப் பித்தளையில் தங்க முலாம் பூசித் தங்கப் பதக்கம்னு குடுத்து ஏமாத்தினீங்க! இப்ப என்னடான்னா பெட்டியை கார்ல கொண்டு வந் திருக்கீங்க...ஒங்க டிரிக்ஸ் எங்களுக்கு தெரியாதா? பெட்டியை கார்ல வைச்சு கொணடாந்ததும் எல்லோரும் நீங்கதான் பெட்டி வாங்கி குடுத்ததா நெனைப்பாங்க... அதுக்குத்தான் இந்த வேலை...ஒங்களுக்குச் செலவு கொஞ்சம் பெட்றோல்...ஆனா பேரும் புகழும் எக்கச் சக்கம்...போதும் ஒங்க சேவை...ஒங்க டிரிக்ஸ் வேலையெல் லாம் டவுண்ல வைச்சிக்கிங்க...எங்களுக்கிட்ட காட்டா தீங்க...நம்மாளுகளை எத்தனையோ வழியில சுரண்டுறது போதாதுன்னு இப்படியும் ஒரு சுரண்டலா?'

கே. எம். ஆர். வாயே திறக்கவில்லை...அந்தக்கார் பின்னோக்கி ஓடி மறைந்தது. சுந்தரம் நடந்ததை சொன் னான். ராசு அதைக் கேட்டுவிட்டு சொன்னான்: 'நான் நெனைச்சது சரிதான். பெட்டியைத் தான் வாங்கி குடுத்த மாதிரி பேர் போடத்தான் பெட்டியைக் கார்ல வைச்சி கிட்டு வந்திருக்கானுக! இதுக்கு முந்தி ஒரு தோட்டத்தில கெழவி செத்த நேரம் இந்த மாதிரித்தான் தோட்டத்து ஆளுக பணத்தில பெட்டியை வாங்கி தன் கார்ல வைச்சி கிட்டு கார் பெட்றோலுக்குக் காசும் வாங்கிட்டு வந்துட்டு தான் பெட்டி வாங்கி கொடுத்த மாதிரி ஒரு நாடகம் நடிச் சானுக. இவனுகள்ளாம் பேர் எடுக்க பேயா அலையிறா னுக! எங்கடா பொணம் விழும்...எப்படி அங்க பேர் போட லாம்னு துடிக்கிறானுக! இவனுகளாம் மனுசன்களா? உசு

ருள்ள பொணங்க...மனுசன்களா இருந்தா இப்படியா நடப்பானுக? இவனுகளை...'

பிணப்பெட்டி மேலே போனது. அதன் ஒரு பக்கத்தை ராசுவும் சந்திக்கடை சின்னத்தம்பியும் மறுபக்கத்தை கணேசும் சுந்தரமும் பிடித்துக் கொண்டு நடந்தார்கள்.

சுந்தரமும் கணேசும் வாய் திறக்கவே இல்லை! அவர்கள் மனசு மட்டும் பேசிக் கொண்டது...

'பிணப்பெட்டி வாங்க காரில் போகும் போது கே. எம். ஆர். சுந்தரத்திடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு நான் அடித்துப் பேசி குறைந்த விலைக்குப் பெட்டி வாங்கி தாறேன் என்று சொன்னதும் — பெட்டிக் கடைக்காரர் கே. எம். ஆரிடம் வாங்க...முதலாளி! பெட்டியா? தாறேன். ஒங்களுக்கும் மாசா மாசம் பெட்டி வாங்க வேண்டி வந்திருது...என்று சொன்னதும் எந்த அர்த்தங்களில்...இதை ராசுவிடம் சொன்னால்?' அங்கே அடுத்த பிணம் விழும்!

# தகப்பன் சாமிகள்

கயிற்றில் தொங்கிய காற்சட்டை உலர்ந்து விட்டதா என்று தொட்டுப் பார்த்தான் முத்து. அது உலர்ந் திருந்தது ஆச்சரியம்தான். நேற்று இரவுதான் காம்பராவின் பின் பக்கம் இருக்கும் ''பெரல்'' தண்ணீரில் அந்தக் காற் சட்டையை நனைத்து துவைத்துக் கழுவி, அடுப்பிற்கு மேலே ஒரு கயிறு கட்டி அதில் போட்டு வைத்தான். நெருப்புத் துண்டுகளையும் கிளறி விட்டான். அடுப்பு உஷ்ணத்தில் காற்சட்டை காய்ந்து விட்டது. இனி ஸ்கூலுக்கு போக வேண்டியதுதான்.

காற்சட்டையை கையிலெடுத்த முத்து, அதைதிருப்பித் திருப்பிப் பார்த்தான். அப்போதுதான் காற்சட்டையின் பின் பக்கத்தில் ஐந்து அங்குல நீளத்தில் வாய் திறந்து இருப்பதுபோல் கிழிந்திருப்பதைக் கண்டான். நேற்று இரவு கல்லில் அடித்த அடியின் பிரதிபலிப்புத்தான் அது. இனி எப்படி காற்சட்டையைப் போடுவது? இருப்பதே இது ஒன்றுதான். அதுவும் பல்லிளிக்கிறதே!

முத்துவின் கண்கள் கலங்கின. மறுகணம் நெஞ்சில் ஒரு நினைவு மெல்ல மெல்ல மிதந்து வந்தது. 'இதே தோட்டத் தில் இதே லயத்தில் அவனோடு படித்து வருகிற குமார் எவ்வளவு அழகாக உடுத்தி வருகிறான்.'

அவனுடைய அப்பாவும் இவனுடைய அப்பாவைப் போல ரப்பர் மரங்களை நம்பி வாழ்கிறவர்தான். அவனுடைய அப்பனுக்கு அடிக்கிற வெய்யில்தான் இவனுடைய அப்பனுக்கும். அங்கே கொட்டுகிற மழை தான் இங்கேயும்.

வெய்யில் அடித்தால்தான் ரப்பர் மரம் பாலைப் பொழியும். வேலையும் இருக்கும். மழை பெய்தால் ரப்பர் மரங்கள் அழுதுகொண்டே இருக்கும். அதனோடு சேர்ந்து அவர்களும் அழவேண்டியதுதான். வேலை இருக்காது.

இப்போதெல்லாம் வெய்யில் காலம், வேலை இருக் கிறது. இருந்தும் என்ன பயன்? முத்துவின் அப்பாவிற்குத் தான் வேறு வேலை இருக்கிறதே! அப்புறம் குடும்பத்தைப் பார்க்க அவரால் எப்படி முடியும்?

குமார் அவன் கண்களுக்குள் வளைய வந்தான். குமாரிடம் மூன்று ஜோடி உடுப்புக்கள் இருக்கின்றன. அவன் இரண்டு நாளைக்கு ஒன்றாக உடுத்தி வருகிறான். தன்னிலையை எண்ணிப் பார்க்கிறான்.

''பாட்டீ! ஆயா...நான் ஸ்கூலுக்கு போயிட்டு வாறேன்!'' பக்கத்து காம்பரா ராசு காம்பராவில் உள்ள வர்களிடம் விடை பெறும் சத்தம் அவனுக்கு கேட்டது. ஓ! ஸ்கூலுக்கு நேரமாகி விட்டது! என்ன செய்வது? திடீரென்று ஒரு யோசனை எழுந்தது. உடனே அவன் சோற்றுப் பானையைத் திறந்து சோற்றுப் பருக்கைகளை எடுத்துக்கொண்டு நடுக் காம்பராவிற்கு வந்தான்.

பழைய கத்தரிகோலை தேடியெடுத்து, ஒரு பேப்பர் துண்டை வெட்டி, அதில் சோற்றுப் பருக்கைகளை நசுக்கி, பசையாக்கிக் காற்சட்டையின் உள் பக்கம் கிழிசலை இணைத்து ஒட்டினான். கிழிசல் தெரியவேயில்லை.

காற்சட்டையை அணிந்து கொண்டான். புத்தகங் களையும் கொப்பிகளையும் எடுத்துக் கொண்டு ''யம்மா...! நா ஸ்கூலுக்கு போயிட்டு வாறேன்...'' என்று குரல் கொடுத்துவிட்டு சிட்டாகப் பறந்தான்.

படுக்கையிற் கிடந்த மீனாட்சி தன் தலையைத் தூக்கிப் பார்த்தாள். முத்து அதே காற்சட்டையோடும் மேற்சட்டையோடும் போகிறான், நேற்று இரவு அவன்

துவைத்ததும் சற்று முன்னர் கிழிசலை ஒட்டியதும் அவள் ஞாபகத்தில் வந்தன.

வேறு எந்தப் பிள்ளையாக இருந்தாலும் இந்தக் கிழிசலோடு காம்பராவை விட்டு நகரவே நகராது... ஆனால், அவனோ படிக்க வேண்டும் என்ற ஆசையில் கிழிசலை இணைத்துக்கொண்டு ஓடுகிறான் என்று தனக்குள்ளே எண்ணிய அவள் நீண்ட பெருமூச்சொன்றை விட்டாள்.

மீனாட்சி படுக்கையில் ஒரு பக்கமாகப் புரண்டு கண் களை மூடிக்கொண்டாள். மூடிய கண்களுக்குள்ளே ஒரு காட்சி...''சிவந்த கண்களுடன் அவன் ஆடி ஆடி காம்பரா வில் நுழைகின்றான். அவன் வருமுன்னரே வாடையும் வந்துவிடும். நாட்டுக் கள்ளு அவனுள்ளே போய் அவனை ஆட்டிப் படைக்கும். அவன் வைத்ததுதான் சட்டம். அவன் சொன்னதுதான் பேச்சு...''

அவள் படுத்திருப்பதைப் பார்த்துக் கிண்டலாகப் பேசுவான். ''உனக்கென்னடீ கேடு? சும்மா படுத்துக் கெடக்கிற...ஏன்டீ?''

இது கற்பனையல்ல...நிசம்...இப்போது அவன் அங்கே வந்தால் இப்படிதான் நடக்கும். தினமும் கள்வெறியுடன் தான் லயத்திற்கு வருவான்—அதுவும் மூன்று ஆளாக... யாரும் எதுவும் கேட்க முடியாது. கேட்டால் அடி உதைதான் கிடைக்கும்.

ஸ்கூலுக்குப் போன முத்து உற்சாகம் இல்லாமல் இருந்தான். பாடங்கள் நடந்து முடிந்து கொண்டே இருந்தன. அவன் மனமோ பாடங்களில் ஒட்டாமல் எங்கெல்லாமோ போய்க் கொண்டிருந்தது. அவன் நினைவெல்லாம் காற்சட்டையிலேயே லயித்திருந்தது.

அடிக்கடி அவனை அறியாமலே அவன் கை காற்சட்டை யின் பின்பக்கம் போய்க்கொண்டே இருந்தது. இடை

வேளை வந்தது. அவன் எழுந்து வெளியே போகும்போது சாற்சட்டையின் கிழிசல் பிரிந்துவிடுமோவென்ற பயத்தில் மெது மெதுவாக நடந்து போனான். அவனைத் தேடிவந்த ராமன் அவன் சோர்வுடன் இருப்பதைப் பார்த்துவிட்டு ''ஏன் ஒரு மாதிரியா இருக்கிற முத்து?'' என்று கேட்டான்.

முத்து சமாளித்தான்...''ஒன்னுமில்ல...'' அப்போது ரட்ணம் வந்தான்.

முத்து மெல்ல நடந்து போனான். அதைக் கண்ட ரட்ணம், ''எங்கடா போற?'' என்று கேட்டவாறு அவன் காற்சட்டையின் ஒரு பகுதியை இழுத்தான். அவ்வளவு தான், அந்த காற்சட்டையின் பின் பக்கம் மூடிக் கிடந்த வாய் திறந்து கொண்டது. அவன் கையால் தடவித் தடவிப் பார்த்தான். கிழிந்தே விட்டது. அதற்குள் ரட்ணம் காற்சட்டை கிழிசலைப் பார்த்து சத்தம்போட்டுச் சிரித்தான்.அவனோடு மற்றவர்களும் சேர்ந்துவிட்டார்கள். வெட்கம் அவனைப் பிடிங்கித் தின்றது.

''ஒன்னே ஒன்னுதான் வைச்சிருந்தான் அதுவும் கிழிச்சி போச்சே!'' என்று சற்று சுருதி சேர்த்துப் பாடினான் ரட்ணம். மற்றவர்களைக் கிண்டல் செய்வது அவனுக்கு விருப்பமான கலை.

''வேற கால்சட்டை இல்லையா? கால்சட்டை தரவா?''

''வேற கால்சட்டை இல்லேனா கிழிஞ்ச கால் சட்டையை போட்டுக்கிறதா? வெக்கம் இல்ல...'' அவன் தொடர்ந்து சத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

இனிமேல் அவனால் அங்கே நிற்கமுடியாது. அவர்களுக்கு அவன் கேலிப் பொருளாகி விட்டான். வகுப்புக்கு ஓடியவன் புத்தகங்களைக் கையில் எடுத்துக்கொண்டு வகுப்பாசிரியரிடம் சொல்லிவிட்டு ஓடினான். அந்த ஓட்டம் லயத்தின் கடைசிக் காம்பராவில்தான் முடிந்தது.

மீனாட்சி கேட்டாள், ''ஏண்டா? நேரத்தோட வந்துட்ட...!''

அவன் அழுது கொண்டே சொன்னான்...''நா இனிமே ஸ்கூலுக்கு போகமாட்டேன்...கால்சட்டை கிழிஞ்சி போச்சி.ஸ்கூல் புள்ளைகள்ளாம் கிண்டல் செய்யிறாங்க...''

அவள் பதிலே பேசவில்லை. கிழிந்த கால் சட்டை யோடு போனால் ஸ்கூல் பிள்ளைகள் கிண்டல் செய்யா மலா விடுவார்கள்...எனத் தனக்குள்ளே எண்ணிக்கொண் டாள்.

''ஏம்மா! நீயாவது சொல்லி அப்பாகிட்ட காற்சட்டை வாங்கி தாவேன்...''

''நானா? உன் அப்பனு கிட்டயா?''

'நடக்குமா?' என்ற மீனாட்சி, ''இந்தாப் பாரு! என் சேலை லச்சணத்தை...'' என்று தன் சேலை முந்தானையை காட்டினாள். அதில் பல நட்சத்திரங்கள் மின்னிக் கொண் டிருந்தன. அத்தனை சிறிய ஓட்டைகள்! அவற்றின் வழி யாக வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

முத்து ''ஓ''வென்ற சத்தத்துடன் அழ ஆரம்பித்தான். 'இனி நா ஸ்கூலுக்கு போக மாட்டேன்!'' அவன் உறுதி யாகக் கூறினான்.

மீனாட்சி கெஞ்சினாள்... ''நீ இதுக்காக அழுதா நா எப்படி அழுவணும்? ஒன் அப்பனை கட்டினதிலயிருந்து நா என்னா சொகத்தை கண்டேன். ஒருநாள் எண்டாலும் இரண்டு பேரும் சந்தோஷமா சிரிச்சி பேசினதில்ல, ஒன்னா ஒரு இடத்துக்கு போனதில்ல. யாரோ மாதிரி இந்த லயத்துக்குள்ள இருக்கேன். நானும் எத்தனையோ தரம் சொல்லிப் பார்த்திட்டேன். ஒன் அப்பன் கேட்டாதானே! வேலை செய்ய வேண்டியது, கள்ளு சாராயம் குடிக்க வேண்டியது, ஆடி ஆடி செவந்த கண்ணோட வரவேண்டி யது! யாரு புத்தி சொல்லுவா?'' என்று கூறி நிறுத்தினாள் அவன் அன்னை.

'அப்பாவாம் அப்பா!' கசப்பேறிய நினைவுகளோடு முத்து காம்பராவைப் பார்த்தான்...உள்ளே அவனுடைய தம்பி தங்கைகள் அரைகுறை நிர்வாணமாகக் கிடந்தார்கள்.

கண்களைக் கசக்கிக்கொண்டிருந்த முத்துவின் கண்களில் அந்தப் படம் பட்டது. எப்போதோ டவுன் கடை முதலாளி ஒருத்தர் கொடுத்த காலண்டர். அந்தப் படத்தையே உற்றுப் பார்த்தான் முத்து. புகை படிந்து பழுப்பேறியிருந்தாலும் படம் இன்னமும் கவர்ச்சியாகத்தான் இருந்தது.

ஒரு பீடத்தில் சின்னஞ்சிறு முருகன் அமர்ந்திருக்கச் சிவபெருமான் கீழே இருந்து ஒரு குருவிடம் சிஷ்யன் பாடம் கேட்பது போல் செவி கொடுத்துக் கொண்டிருக்கிறார்... இதைத்தான் படம் சித்தரிக்கின்றது. அந்தப் படம் சொல்லும் கதையும் அவன் ஞாபகத்தில் மெல்ல மெல்ல வந்தது. வகுப்பில் ஆசிரியர் என்றோ ஒரு நாள் சொன்ன கதை.

தந்தைக்கு மகன் உபதேசம் செய்கிறான். சிவ பெருமான் தந்தை...மகன் முருகன். தந்தைக்கு மகன் உபதேசம் செய்கிறான். இது மேலே தேவலோகத்தில். இங்கே, இந்தப் பூலோகத்தில் அவன் வீட்டில் அப்படி நடக்குமா?

முத்து ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு யோசித்துக் கொண்டேயிருந்தான். பிறகு காம்பராவை விட்டு வெளியே இறங்கி ஆலமரத்தருகே போனான். அந்த இடம் அவன் மட்டுமல்ல, அந்த லயத்தில் உள்ள பிள்ளைகள் அனைவரும் விளையாடுவதற்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

அங்கே சென்ற அவன் கூடியிருந்தவர்களைப் பார்த்தான். சிலர் காற் சட்டை இல்லாமலே இருந்தார்கள். சிலர் அவனுடைய காற்சட்டையை விட மோசமாகக்

கிழிந்த காற்சட்டையை உடுத்தியிருந்தார்கள். இந்த இடத்தின் அவன் காற்சட்டை மேல்! ஆனாலும் மனிதனின் கிண்டல் புத்தி சும்மா விடுமா?

''என்னடா முத்து! ஒன் கால் சட்டை கிழிஞ்சிருக்கு'' ஒருத்தன் கேட்டான். தன் காற்சட்டை கிழிந்திருப்பதைப் பற்றி அவனுக்கு அக்கறை இல்லை. அடுத்தவன் காற்சட்டையைப் பற்றிக் கேட்கிறான்...கின்னஞ்சிறு உள்ளங்களுக்குள் இந்த உணர்வுகள் எப்படி நுழைந்ததோ?—

முத்து மௌனமாக இருந்தான். அதற்குள் இன்னொருத்தன் சொன்னான்... ''முத்து கிட்ட இருக்கிறது ஒரே காற்சட்டை! அது கிழியாம என்ன செய்யும்?'' சிவசாமி கதையைத் திருப்பினான். ''நேத்து நம்ம அப்பன் டவுண்லயிருந்து எனக்கு காற்சட்டை தைச்சி கொண்டாந்தாரு. அதை கொண்டாரவா, பார்க்கிறீங்களா?''

''கொண்டுவா பார்ப்போம்...'' முத்துவைத் தவிர மற்றவர்கள் யாவரும் சொன்னார்கள்.

சிவசாமி ஓட்டமும் நடையுமாக ஓடி தன் காற்சட்டையைக் கொண்டு வந்து காட்டினான். முத்துவைத் தவிர மற்றவர்கள் யாவரும் அதைக் கையால் வாங்கிப் பார்த்தார்கள். முத்து கண்களால் பார்த்தான். முத்து மெல்ல தன் காம்பராவை நோக்கி கவலையோடு நடந்தான்...

சிவசாமியின் அப்பாவும் அதே தோட்டத்தில் ரப்பர் மரத்தோடு போராடுகிற தொழிலாளிதான். ஆனால், அந்த அப்பன் தன் மகனின் கல்வியில் அக்கறை செலுத்தி வந்தான். முத்துவுக்கு திடீரென்று ஒரு யோசனை பளிச்சிட்டது. அப்பாவிடம் கேட்டால் என்ன? எப்படி கேட்பது?...

காம்பராவிற்கு வந்த முத்து புத்தகத்தை விரித்துப் படித்துக் கொண்டிருந்தான். இருட்டியதும் சிவந்த கண்களுடன் தட்டுத் தடுமாறி அவனுடைய அப்பா வந்தார்,

முத்துவைப் பார்த்த அவர், "டேய்! முத்து...வாடா இங்கே" என்றார். "நா படிக்கிறேன்" என்று அவன் சொன்னான்.

"என்னடா பெரிய படிப்பு! இவரு படிச்சி கிழிச்சி, தொர வேலைக்கா போகப் போற, போடா! போயி பீடி வாங்கிட்டு வா...!" அப்பா இரைந்தார்.

முத்து சத்தம் போட்டு படிக்க ஆரம்பித்தான். "அட நான் பீடி வாங்க சொல்றேன். இவரு படிக்கிறாரு" என்று பல்லைக் கடித்துக்கொண்டு முத்துவை அடிக்கப் போனார். தாய் தடுத்தாள்... "நீ சும்மா இருடீ..." முத்து புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நின்றான். அவனிடம் காசைக் கொடுத்தான். அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே ஓடினான்.

"படிக்கிறவன் படிப்பை கெடுத்து அவனுக்கு ஒழுங்கா உடுப்பு தைச்சி குடுக்காம ஏன் அநியாயம் பண்றே!" என்று முணுமுணுத்துக்கொண்டு இருந்தாள் முத்துவின் அம்மா.

வெளியே போன முத்து வெகுநேரமாகியும் வரவே இல்லை. அவனுடைய அப்பா உறுமிக்கொண்டு இருந்தார்.

ரொம்ப நேரம் சென்று முத்து வந்தான். வந்தவன் அப்படியே நின்றான். "ஏண்டா நட்ட மரம் மாதிரி நிக்கிற? பீடி வாங்கலியா?"

அவன் மௌனமாக நின்றான். அவன் மௌனம் அவன் அப்பாவிற்குக் கோபத்தைக் கிண்டியது.

"எங்கடா பீடி..." பல்லை நறுவிக்கொண்டு கேட்டார்.

"பீடி வாங்கப் படிக்கட்டுலே ஓடினேன். நீங்க கொடுத்த ஒரு ரூபா எங்கயோ விழுந்திருச்சி..."

முத்துவின் அப்பனுக்கு வந்ததே கோபம். எங்கிருந்தோ வந்த ஆவேசத்தில் முத்துவைக் கட்டிப் பிடித்து அவன்

முதுகில் போடப் போனபோது குறுக்கே விழுந்தாள் முத்துவின் அம்மா... ''ஒத்த ரூபாவுக்கு போயி அடிக்கிறீங்களே, விடுங்க... விடுங்க...!''

''நீ சும்மா இருடீ ..ஒனக்கென்னா தெரியும்? ஒத்த ரூபா எவன் தருவான்? ஒத்த ரூபா சம்பாதிக்க நான் படும் பாடு எனக்குத்தானே தெரியும்...'' என்று வேதம் ஓதிய முத்துவின் அப்பா முத்துவின் முதுகில் ஓங்கி அடித்தான். மறு அடி அடிக்க கை ஓங்கியபோது அவன் திமிறிக்கொண்டு போனான்.

''நா ஒரு ஒத்த ரூபாவை காணாமாக்கிட்டேன்னு சொன்னதும் ஒங்களுக்கு எம்புட்டு கோபம் வருது! ஆனா நீங்க இதுவரைக்கும் எவ்வளவு பணத்தை இஷ்டம் போல குடிச்சி நாசமாக்கியிருக்கீங்க! இதை பத்தி யாரும் கேட்டாங்களா? அம்மாவுக்கு கட்டிக்க சேலை இல்ல, எனக்கு போட்டுக்க கால் சட்டை இல்ல. இப்படி நாங்க கஷ்டப்பட நீங்க கொஞ்சம் கூட அக்கறை இல்லாம எவ்வளவு பணத்தை குடிச்சி முடிச்சீங்க.

''அதை பத்தி யாராவது கேட்டாங்களா? ஆனா ஒத்த ரூபாவ நான் காணாமாக்கிட்டேன்னதும் கோபம் வருது ஒங்களுக்கு. அப்படின்னா நீங்க குடிச்சு முடிச்சதைக் கணக்குப் பண்ணிப் பார்த்தா எங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்?'' என்று கூறிய முத்து தன் காற்சட்டை சேப்பில் இருந்த ஒரு ரூபா நாணயத்தை எடுத்து அப்பாவின் முன்னே போட்டான்.

அது அவன் காலடியில் வந்து விழுந்தது...

முத்துவின் அப்பா ஒன்றும் புரியாமல் முழித்தார். அப்போது முத்து சொன்னான்: ''நா ஒத்த ரூபாவ காணாமாக்கல்ல, அப்படி நடிச்சேன்... ஒங்களுக்கு எவ்வளவு கோபம் வந்திருச்சி. ஆனா நீங்க குடிச்சி செலவழிக்கிற எத்தனையோ ஒத்த ரூபாவ பத்தி கவலைப்படாம இருக்

கிறீங்க...ஏன்? தட்டிக் கேக்க ஆள் இல்லாதனால... அப்படித்தானே அப்பா!''

முத்துவின் அப்பா சிலையாக நின்றார். தன் காலடியில் கிடந்த ஒரு ரூபாவை உற்றுப் பார்த்தார். அங்கே ஒரு ரூபா நாணயக் குவியல் இருப்பதாக அவர் கண்களில் தோன்றியது.

''ஆம் அவர் குடியில் கொட்டிய ரூபாக்கள் அங்கே குவிந்திருப்பது போன்ற பிரமைதான் அவருக்கு தோன்றியது.

அவர் ஒரு ரூபா நாணயத்தைக் கீழே குனிந்து எடுத்தார். காம்பராவில் மேலே சுவரில் மாட்டியிருந்த சிவன்-முருகன் காலண்டர் காற்றில் லேசாக அசைந்தது... காலண்டரில் மகன் தந்தைக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் காட்சியைக்கண்டதும் அவரின் கண்கள் பனித்தன. மறுகணம் முத்துவை கட்டியணைக்க அவரின் கைகள் விரைந்தன. முத்து துள்ளிக் குதித்து ஓடினான். ★

சிந்தாமணி வார இதழ்
20-7-1980

# பகல் நேரத் தர்மங்கள்

அந்த முச்சந்தியின் நடுவில் ஒரு பெரிய குடையை விரித்து வைத்தவாறு கிளைகளை அகலப்பரப்பி நின்று கொண்டிருக்கும் ஆலமரத்தின் கீழே, அந்த விடியற் பொழு திலும் ஒரு கூட்டம் திரண்டு நின்றது.

கூட்டத்தின் நடுவில் சாமிக் கிழவன் கால்களை நீட்டித் தூங்கிக் கொண்டிருந்தான். அப்படித்தான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவன் இறந்து விட்டானாம்! இறந்து விட்டானா? இல்லை... தூங்குவது போல் அல்லவா இருக்கிறான்! ஓ......தட்டி எழுப்பிப் பாருங்கள். ம்...... அவன் எழும்ப மாட்டான்! அவன் தூங்கி விட்டான்...... ஆமாம்! சாவும் ஒரு தூக்கம்தானே......? அவன் தூங்கி விட்டான்!

கிழவனின் கண்களில் ஈக்கள் மொய்க்கத் தொடங்கின. வாய் ''ஆவ்'' வென்று திறந்து கொண்டிருந்தது. வயிறு வீங்கிக்கொண்டது. ஆனால் எல்லோரும் வேடிக்கை பார்த் துக்கொண்டு நின்றார்கள்.

செத்தவனிடம் என்ன வேடிக்கை இருக்கிறது பார்க்க? யாருமே அருகே போகவில்லை. இருக்கும்போது கட்டித் தழுவுகிற மனிதன் செத்ததும் கிட்டப் போகப் பயப்படு கிறான். ஏன்? அந்தச் சாவு தன்னையும் பிடித்து விடும் என்ற பயமா?

''எல்லோரும் என்னப்பா வேடிக்கை பார்க்கிறீங்க? யாராவது வாயைக் கண்ணை மூடி, மூஞ்ச அங்கன கெடக்

கிற வேட்டி துண்டால போர்த்திட்டு வாங்க......'' கூட்டத்தில் இருந்த ஒரு நோஞ்சான் கிழவன் சொன்னான். ஆனால் யாருமே அசையவில்லை. எல்லோரும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த நோஞ்சான் கிழவன் மறுபடியும் சொன்னான்... ''நேரம் போனா ஒன்னும் செய்ய முடியாது. எல்லாம் வெறைச்சிரும், யாராவது போங்கப்பா...

அப்போதும் அந்த கூட்டத்தில் யாருமே முன்வர வில்லை. அந்த நேரத்தில் அந்தக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே நுழைந்த அம்மன் கோயில் பண்டாரம் கண்கள் கலங்கியவாறு கிளம்பும் அழுகையை அடக்கிக் கொண்டு பிணத்தின் அருகே போய் அதன் கண்களை, வாயை அழுத்தி மூடி முகத்தைப் பக்கத்தில் கிடந்த வேட்டியால் மூடினான்.

அவனுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. செத்த கிழவன் அவனுக்கு யாரோ? அவனுக்கு இவன் உறவினன் அல்லன்! ஆனால் வேண்டியவன். வேண்டியன் என்றால் சொந்த பந்தத்தில் அல்ல—தொழில் முறையில் உதவி, ஒத்தாசை செய்வதில் வேண்டியவன்!

பிணமாகக் கிடக்கும் கிழவனைப் பார்த்ததும் அழுகையை அடக்கித் தன் கண்களை கசக்கிக் கொண்ட பண்டாரம், பிணத்தின் அருகிலிருந்த ஒரு பொட்டலத்தை எடுத்துக்கொண்டு அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே வந்தான்.

அவனோடு சிலரும் வந்தார்கள். பிறகு அவர்கள் சிறிது தூரம் சென்று தனியாகக் கூடினார்கள்.

அவர்கள் கூடியதும் பிணத்தைச் சுற்றியிருந்தவர்களில் வேறு சிலர் ஓடோடி வந்து அவர்களைச் சுற்றி கூடினார்கள். அவர்களுக்கு வேறு என்ன வேலை? எங்கேயும் நாலு பேர் கூடினால் இவர்களும் அவர்களைச் சுற்றி என்ன

பேசுகிறார்கள் என்று வேடிக்கை பார்ப்பார்கள். இப்போதும் அந்த ''வேலை''யைத்தான் செய்கிறார்கள்.

''நேத்து நல்லா இருந்த கெழவன் ராத்திரிப் படுத்து விடியிறதுக்குள்ள பொசுக்குன்னு போயிட்டான். இப்ப என்ன செய்யிறதுன்னு தெரியலியே!'' அம்மன் கோயில் பண்டாரம் காலும் ஓடாமல், கையும் ஓடாமல் அதனோடு கூடவே மனசும் ஓடாமல் தவியாய்த் தவித்தான்.

''என்னா செய்யிறதா? நல்ல கேள்விதான்... செத்த கெழவனை பொதைக்கிற வேலையப் பார்க்க வேண்டியது தான்...... நாளைக்கி வெள்ளிக்கிழம...... அடுத்த நா சனி ...... சனியும், வெள்ளியும் பொணத்த எடுக்கக்கூடாது. அதனால் இன்னைக்கே எடுத்திர வேண்டியதுதான். இன்னைக்கி வெசாளன்... எடுக்கலாம்......'' இது கோயில் காவல்காரன்.

''நெனைச்சோன்ன பொணத்தைப் பொதைக்க முடியுமா? கெழவன் திடீர்னு செத்திருக்கான். திடீர் சாவு பொலீஸ் விசாரணை, கொரனோல் விசாரணை எல்லாம் முடிஞ்சாதான் பொதைக்க முடியும்'' இது இன்னொருத்தன்.

''அப்படீன்னா இது லேசான வேல இல்ல. இதெல்லாம் நம்மளால முடியாது. நாங்க பொலீஸ் விசாரணைக்குப் போனா ஒன்னும் நடக்காது...'' என்ற பண்டாரம் ஒரு விநாடி யோசித்துவிட்டு சொன்னான்: ''இதுக்கெல்லாம் நம்ம சங்கத் தலைவர்தான் சரி...... அவரு போனா எல்லா இடத்திலயும் கேள்வி கேப்பாடு கேக்க மாட்டானுக...... அதோட அவருக்கு கெழவனையும் தெரியும். யார் யாருக்கோ ஒதவி செய்யிரவரு. கெழவனுக்கு கட்டாயம் செய்வாரு. அவரைப் பார்ப்போம்......!''

அம்மன் கோயில் பண்டாரத்தின் பிரேரணையை அந்தக் கூட்டம் ஏகமனதாக அங்கீகரித்தது. ''அப்ப இப்பவே அவரைப் பார்ப்போம்......''

பண்டாரம் அப்போதோ வாரிசற்ற கிழவனின் ஆஸ்தியான பொட்டலத்தைத் தூக்கிக்கொண்டு சங்கத் தலைவரின் பங்களாவை நோக்கி நடந்தான். அவனோடு வேறு சிலரும் நடந்தார்கள். வழி நெடுக பண்டாரம் சங்கத் தலைவரை நினைத்துப் பார்த்தான். அவர் சமூக சேவையின் முன்னின்று கொடி நாட்டுபவர். அந்த நகரத்திலேயே பெரிய புள்ளி. அவரால்தான் கிழவனை விசாரணையின்றி புதைக்க முடியும்.

அவர்கள் போனபோது சங்கத் தலைவர் குளித்துக் கொண்டிருந்தார். அவர் வரும் வரை பண்டாரமும், மற்றவர்களும் பங்களா வாசலில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

பத்து நிமிடத்தில் கழுத்தில் தங்கச் சங்கிலியும், தொந்தியும் போட்டி போட்டுக்கொண்டு ஆட, தலையை டவலால் துடைத்துக்கொண்டே பங்களா வராந்தாவிற்கு வந்தார் தலைவர்.

அவரைக் கண்டதும் பண்டாரமும், மற்றவர்களும் அடுத்தடுத்து கையாலும், வார்த்தைகளாலும் வணக்கம் தெரிவித்தார்கள். பதிலுக்கு அவரும் ''அரைகுறை'' வணக்கம் தெரிவித்து அவர்களையே பார்த்தார்.

கோயில் பண்டாரம் கலங்கிய குரலில் சொன்னான்...... ''நம்ம சாமி கெழவன் நேத்து ராத்திரி ஆலயத்தடியில படுத்த வாக்கில செத்துப் போயிட்டாங்க...... அவனைப் பொதைக்க நீங்கதான் ஒதவி செய்யனும்.........''

அவருக்கு சற்று அதிர்ச்சி...அதிர்ச்சியா? அப்படிக் காட்டிக் கொண்டார். பின்னர் அவர் கேட்டார்...... ''இப்போ என்ன செய்யணும்?''

''இன்னைக்கி பொணத்த எடுக்கப் பார்க்கணுமுங்க. நாளைக்கி வெள்ளிக் கெழம...மறு நா சனி...வெள்ளியும், சனியும் பொதைக்கக் கூடாதாம்...அதனாலே இன்னைக்கே பொதைக்க ஏற்பாடு செய்யணும்...இன்னைக்கி பொதைக்கிறதுன்னா போலீஸ் விசாரணை, மத்த விசாரணைக்கெல்லாம் நீங்கதான் ஒதவி செய்யணும்...''

''உதவி செய்யலாம்...ஆனா...'' அவர் இழுத்தார். அவர்கள் விழித்தார்கள். பிறகு அவர் சொன்னார்... ''கிழவன் திடீர்னு செத்ததுனால இன்னைக்கி பொணத்தை எடுக்க முடியாது...கொஞ்சம் சூலத்தை வீசினாதான் விஷயம் நடக்கும். சூலத்திற்கு என்ன செய் வது?'' அவர்களுக்கு 'சூலம்' என்பது அவர் பாஷையில் பணம் என்பது புரிந்தது. பணத்தை வீசினால் பிணத்தைப் புதைக்கலாமாம்! பணத்திற்கு எங்கே போவது?

அப்போதுதான் பண்டாரத்திற்கு தான் கொண்டு வந் திருந்த கிழவனின் பொட்டலம் ஞாபகத்திற்கு வந்தது. அவசர அவசரமாக அங்கேயே பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தான் அவன். அதனுள் கிழவன் சேர்த்த காசு இருந் தால்? காசு இருந்ததா பொட்டலத்தில்?

பொட்டலத்தில் பழைய வேட்டி, சட்டை, பேப்பர் துண்டுகள், கோயில் திருவிழா நோட்டீசுகள், வெற்றிலை, கொஞ்சம் சில்லறைதான் இருந்தன...அந்தச் சில்லறையை எண்ணிப் பார்த்தான்... சில்லறை நாற்பது ரூபாவுக்கு இருந்தது.

பண்டாரம் தலைவரைப பார்த்தான்...அவருக்கு அவன் பார்வையின் அர்த்தம் புரிந்தது. ''இது போதாது... எத்தனை பேருக்கு வாய்க்கரிசி போடனும், சரி...நான் அதைக் கவனிக்கிறேன்...நீங்க இந்தச் சில்லறையை சில் லறை வேலைக்கு வைச்சுக்குங்க...''

பண்டாரம் அவரை வாழ்த்தினான். ''நீங்க நல்லா இருக்கனும்...நீங்க இல்லேன்னா சாமி கெழவன் பொணத்தை அனாதைப் பொணமா கொண்டு போயிடு வாங்க...''

அவர் சொன்னார்...''நாங்க இருக்கும்போது கெழவன் பொணம் எப்படி அனாதைப் பொணமா போகும்? கெழவன் நமக்கு வேண்டியவர்...''அவர் ஒரு விநாடி அந்தக் கிழவனை நினைத்துப் பார்த்தார்...

அனாதையாக வாழ்ந்தாலும் அந்த ஊரில் செத்தவீடு, கல்யாண வீடு, கருமாதி வீடு, சடங்கு வீடு இப்படி பல வீட்டில் அவன்தான் முதல் ஆள்—சாப்பாட்டிற்கு அல்ல! கூடமாட உதவி ஒத்தாசை செய்ய, அவன் எந்த வீட்டில் இருந்தாலும் வேலைக் கஷ்டமே தெரியாது. அடிக்கடி சிரிப்பான்...

அவனை யாவருக்கும் பிடிக்கும். அவன் எப்போதும் சுத்தம். தினமும் குளிப்பான். ஒரு காலத்தில் ''கடன் கப்பி'' இல்லாமல் உழைத்து உண்டு, உடுத்தி வாழ்ந்தவன்தான். என்ன செய்வது! விதி அவனை வீதிக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டது. இன்று வீதியிலேயே அவன் விதியும் முடிந்து விட்டது...

நெஞ்சில் குவிந்த கிழவனின் நினைவுகளை கலைத்து விட்டு அவர்களைப் பார்த்தார் அவர். ''கொஞ்சம் இருங்க...காரை எடுத்து வாரேன்......'' என்றவர் உள்ளே போனார்.

பங்களாவின் பக்கத்திலேயே கார் கரேஜ் இருந்தது. பண்டாரமும், மற்றவர்களும் கரேஜின் அருகே வந்தார்கள். சில நிமிடத்தில் கரேஜின் கதவு திறந்தது. கார் வெளியே வந்தது. அதில் அவர் வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சேர்ட்டுமாக இருந்தார்.

காரை அவர்கள் அருகே நிறுத்தி பின் பக்கக் கதவைத் திறந்தார். அவர்களில் பண்டாரமும் வேறு இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள். பண்டாரம் கையிலிருந்த பொட்டலத்தை வெளியே இருந்த ஒருத்தரிடம் கொடுத்தான். அவர்கள் நடந்தார்கள், அந்தக் கார் பறந்தது.

அந்தக் கார் போலீஸ் ஸ்டேசன், மரண விசாரணை அதிகாரி அலுவலகம், அரசாங்க ஆஸ்பத்திரி என்று பல இடங்களுக்குச் சென்று திரும்பியபோது மணி பன்னிரண்டாகி விட்டது; எல்லா இடங்களிலும் பூரண வெற்றி.

கிழவனின் பிரேத ஊர்வலம் பகல் இரண்டு மணிக்குப் போல் ஆரம்பமாகியது. அவன் அனாதையென்றாலும் உறவு—சொந்தம் உள்ள ஒருத்தனைப் போன்று காரியங்கள் நிகழ்ந்தன.

அம்மன் கோயிலுக்குச் சொந்தமான மயான வண்டி வந்தது. மயான வண்டியை வெள்ளைப் பூக்களால் அலங் கரித்திருந்தார்கள், கோயில் பண்டாரம் சம்பிரதாயப்படி கோடிச்சீலை போட்டான். பிறகு ஒப்பாரியுடன் பிணத்தை வண்டியில் ஏற்றினார்கள். பிண வண்டி மெதுவாக நகர்ந் தது.

அதன் பின்னால் சிறு கூட்டமே கிழவனை வழி யனுப்பச் சென்றது. அதில் சங்கத் தலைவரும் ஒருத்தர். மயானத்தில் கடைசிவரைக்கும் இருந்த அவர் போகும் போது பண்டாரத்திடம் ஐம்பது ரூபாவை கையில் திணித்துவிட்டுப் போனார்...

பண்டாரம் மயானத்தில் சகல காரியங்களையும் முடித்துக்கொண்டு குளித்தபோது மணி நாலுக்கு மேலாகி விட்டது. அன்று முழுவதும் கிழவனையே அவன் நினைத் தான்.

அன்று இரவு படுக்கையில் தலைவரை நினைவுபடுத்தி பண்டாரம் பேசினான்... ''நம்ம ஊரிலே எத்தனையோ பணக்காரங்க இருக்காங்க. ஆனா...அவரு மாதிரி ஏழை சனங்களுக்கு ஒதவி ஒத்தாசை செய்யிறவங்க யார் இருக்கா? காலயில இருந்து கெழவனை பொதைக்க சொந்த தொழிலை போட்டுட்டு ஓடியாடி வேலை செஞ்சாரு... மயானம் வரைக்கும் வந்தாரு. நல்ல மனுசன்! அவர்மாதிரி ஊருக்கொருத்தர் இருந்தா நம்ம மாதிரி ஆளுக தைரியமா இருக்கலாம்...''

அதனை காவல்காரன் அங்கீகரித்தான்...''ஆமா நீங்க சொல்றது ஞாயம்தான்! எத்தனையோ பேர் இருக்காங்க... மத்தவங்க யாரும் வரலியே.''

சில பேருக்கிட்ட பணம் இருந்தா மனசு இருக்காது... மனசு இருந்தா பணம் இருக்காது...ரெண்டும் நம்ம தலைவருக்கிட்டதான் இருக்கு.

"இன்னைக்கி எம்புட்டு செலவு போச்சோ தெரியலியே!"

...இப்படியே அவர்கள் தலைவரை புகழ்ந்து கொண்டேயிருந்தார்கள்.

அங்கே...அந்த பெரிய பங்களாவில் அந்த அறையில் அவர் மட்டுமே இருந்தார். அந்த அறைக்கு எவரும் போக முடியாது. அவருடைய ரகசியங்கள் யாவும் அந்த அறையில் தான்...அந்த அறையை எப்போதும் பூட்டிதான்வைப்பார். இரவில்தான் இருப்பார். இரவில் அன்றைய கறுப்பு வெள்ளை கணக்குகளை அவர் பார்ப்பது வழக்கம்...

அந்த அழகான அலுமாரியைத் திறந்து உயர்வகை போத்தலை எடுத்து ஒரு கிளாஸ் ஊற்றிக் குடித்துக் கொண்டே கணக்குப் புத்தகத்தை எடுத்துக் குறிப்பாக ஒரு பக்கத்தைப் பார்த்தார்...

கிழவன் கொடுத்து வைத்த பணத்தின் கணக்கு அந்தப் பக்கத்தில் இருந்தது. நேற்றுவரை அவன் கொடுத்து வைத்த தொகை இரண்டாயிரத்து எழுநூற்றி நாற்பத்தைந்து ரூபா! ஆம், அவ்வப்போது கையில் சேரும் காசைத் தலைவரிடம் கொடுத்து வைத்திருக்கிறான் கிழவன். கிழவனுக்கு அவர்தான் "சேமிப்பு வங்கி!" இந்த விஷயம் வேறு யாருக்குமே தெரியாது!

இன்னொரு கிளாஸ் விஸ்கி உள்ளே இறங்கியது. அதன் பின்னே சுறுசுறுப்பு வந்தது போன்ற ஒரு உணர்வு அவருக்கு...கிழவனுக்கு அன்று செலவழித்ததை வரிசையாக குறித்தார். காருக்கு அடித்த பெட்ரோல், ஆங்காங்கே சந்தோஷம் கொடுத்த தொகை, மயானச் செலவு, குழி வெட்டியது, கோடி வேட்டி, பிணப்பெட்டி, இப்படி எல்லாமாக செலவு ஐநூற்றி முப்பது ரூபா. மீதி 2215 ரூபா...

புன்னகை முகத்தில் பீரிட இன்னும் ஒரு கிளாஸ் விஸ்கியை உள்ளே இறக்கிக்கொண்டு அந்தக் கிழவனின் கணக்குப் புத்தகத்தை கிழித்துப் போட்டார். கிழவனின் கதையே முடிந்து விட்டதே. கணக்குப் புத்தகம் ஏன்?

அந்தக் கணத்திலேயே அந்தக் கிழவனின் சொத்து அவருடைய சொத்தாக மாறிவிட்டது...இது இங்கே!

அங்கே அவர் அந்தக் கிழவனுக்காக செய்த அந்த பகல் நேரத் தர்மங்களையெல்லாம் கோயில் பண்டாரம் புகழ்ந்து கொண்டேயிருக்கிறான்... ★

சிந்தாமணி வார இதழ் 22-7-1984

# கழுகுகள்

ஏழாம் நம்பர் லயத்தின், நாலாவது காம்பராவிலிருந்து கிளம்புகின்ற ஒப்பாரியும், விட்டுவிட்டு அலறுகின்ற அழுகையும், அந்த லயத்தை மட்டுமல்ல அந்தப் பகுதியையே அதிரவைத்துக்கொண்டிருந்தது. காம்பராவின் வெளியே சிலர் உட்கார்ந்தவாறும், சிலர் நின்றவாறும் ஒரு பெரிய கூட்டமே கூடியிருந்தது. உட்கார்ந்திருந்தவர்கள் ஏற்கனவே ஆங்காங்கே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் முக்காலிகளில் இடம்பிடித்துக் கொண்டார்கள். நின்றவர்கள் கண்களால் இடம் தேடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உட்காருவதற்காக ஒரு இளைஞர் கோஷ்டி அக்கம் பக்கத்திலிருந்து நாற்காலிகளை, முக்காலிகளைக் கொண்டு வரப் போயிருந்தார்கள்.

காம்பராவின் உள்ளே நடு அறையில் வெறுந்தரையில் மீனாட்சி புரண்டு, புரண்டு அழுது கொண்டிருந்தாள். அவளுக்குப்பக்கத்தில் எட்டுமாத பச்சைக் குழந்தையொன்று வெறும் நிலத்தில், கை கால்களை நீட்டி மடக்கி அழுது கொண்டிருந்தது. அதுவும் அவளோடு சேர்ந்து அழுகிறதா? இந்த நேரத்தில் அப்படித்தான் எல்லோரும் நினைப்பார்கள். ஆனால் அதன் அழுகை பாலுக்காக. இந்த இருஅழுகையைப் பார்த்தவாறே, தன் கண்களை கசக்கி, கசக்கி அழுது கொண்டிருந்தான் ஒருத்தன். அவனுக்கு வயது பத்து. அவனுக்கு கொஞ்சம் விபரம் புரிந்திருக்க வேண்டும்.

வெறுந்தரையில் கிடந்து புரண்டு அழுதுகொண்டிருந்த மீனாட்சியை, ஆயம்மா கிழவி ஆறுதல் படுத்திக்கொண்டிருந்தாள் நல்லவேடிக்கை! யாவற்றையும் ஆண்டு அனுப

வித்து, முதுமையின் எல்லையில் அழைப்புக்காகக் காத்துக் கிடக்கிற கிழவி, வாழ்க்கையை இப்போதுதான் ஆரம் பித்தவளுக்கு—அந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி விழுந்து விட்டதாக அறிந்து தவிப்பவளுக்கு ஆறுதல் சொல்கிறாள். அவளின் ஆறுதல் அவளை ஆறுதல் படுத்துமா? என்ன? அவள் அழுதுகொண்டிருந்தாள். கிழவி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு நிலத்தில் கிடந்த அந்தக் குழந்தையைத் தூக்கித் தாலாட்டினாள்......

நேற்றுவரை இருந்தவன், ஏன் இன்று காலை வரை ஆஸ்பத்திரியில் கிடந்தவன் பகலைக்கு மேல் இல்லை யென்று சொன்னால், அவளால் தாங்க முடியுமா என்ன? அந்தச் செய்தியைக் கேட்டதும் அவள் பயங்கரமாய் அலறினாள்... மயங்கி விழுந்தாள். அடுத்தடுத்த காம்பரா வில் உள்ளவர்கள் அவளைப் படுக்கையில் கிடத்தி மயக்கம் தெளிய வைத்தார்கள். மயக்கம் தெளிந்தவள் மறுபடியும் அழத் தொடங்கினாள்... அவள் அப்படியே அழ மற்றவர்கள் மற்ற வேலைகளைப் பார்த்தார்கள். நேற்றுவரை அவன்-இவன், என்று பேசிய வர்கள் எல்லாம் இப்போது 'பிணம் பிணம்' என்று பேசத் தொடங்கினார்கள். ஒரு கோஷ்டி உடம்பைக் கொண்டுவர ஆஸ்பத்திரிக்கு ஓடியது. மற்றக்கோஷ்டி அந்த காம்பராவை சாவுவீடாக மாற்றிக் கொண்டிருந்தது. காம்பராவில் ஆங்காங்கே மாட்டப்பட்டிருந்த அரசியல் தலைவரின் படங் களை அந்தத் துயரத்தில் பங்குகொள்ள வேண்டாம் என்பது போல் மறுபக்கம் திருப்பி மாட்டினார்கள். வெளியே ஒரு வெள்ளைக் கொடியைக் கட்டித் தொங்க விட்டார்கள். வெள்ளைக் கொடியைச் சரணடைந்தால்தான் பறக்க விடுவார்கள். இங்கே யார் சரணடைந்தார்கள்? உடலைப் பொறுத்தவரை அவன் சரணடைந்து விட்டான். ஆனால் மனதைப் பொறுத்தவரை அவன் சரணடையவில்லை! மனம் சரணடைந்திருந்தால் உடல் சரணடைந்திருக்க வேண்டியதே இல்லை. அந்தப் பயங்கரமே நடந்திருக்காது, ஓ...அந்தப் பயங்கரம்!...அது ஒரு பெரிய கதை.

அந்தக் காம்பராவில் ஒரு பெருங் கூட்டமே கூடியிருந்தது. அவர்களுக்கிடையே நடுநாயகமாக ராமையா உட்கார்ந்திருந்தார். அவன் தலைக்குமேல் கறுப்புக் கோட்டு கங்காணி காலத்து பெட்றோல் மெக்ஸ் 'குப்' 'குப்'பென்று எரிந்து வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தின் எல்லையில் பலர் உட்கார்ந்திருந்தார்கள். சில நேரத்தில் சிலர் விடுகிற பீடிப் புகை மேலே தொங்குகிற அந்த பெட்றோல்மெக்ஸை சூழ்ந்து கொண்டது.

''யாரப்பா பீடி குடிக்கிறது? மனுசன் இங்கு இருக்க முடியல்ல—ஒரே நாத்தம்...'' யாரோ ஒருத்தன் சத்தம் போட்டான். ''தயவு செஞ்சு கூட்டம் முடியிற வரைக்கும் யாரும் பீடி குடிக்காதீங்க.'' ராமையா கேட்டான். பீடி புகைத்தவர்களில் சிலர் அவசர அவசரமாய் பீடியை அணைத்து வைத்துக்கொண்டார்கள். சிலர் அடுத்தடுத்து 'தம்' இழுத்துக்கொண்டு பீடியை வீசினார்கள்.

ராமையா, எல்லோரும் வந்து விட்டார்கள் என்பதை ஒரு தடவை கண்களால் கணக்கிட்டுவிட்டு அந்தக் கூட்டத்தைப் பார்த்துப் பேசினான். ''நேத்து ராத்திரி நடந்தது பெரிய அநியாயம். ஏற்கனவே நாம கெழமைக்கு ரெண்டு நாள் மூணுநாள் வேலசெஞ்சு வயித்த கழுவிக்கிட்டு இருக்கோம். இந்த நேரத்தில் ஒரு காம்பராவில் புகுந்து நம்ம ஆள்கள்ல ஒருத்தனை சுப்பவைசர் ஆள்வைச்சு அடிக்கத் துணிஞ்சிட்டான். இதை இப்படியே விட்டா நாளைக்கு என்ன நடக்குமோ தெரியாது. அந்த சுப்பவைசர் மோசமானவன். அவன் வம்பை இழுத்தான். தண்ணிக்குப் போன வள்ளியின் கையைப் புடிச்சு இழுத்தான். அவள் புருஷன் விடுவானா? சுப்பவைசரைப்பற்றி தொரைக் கிட்ட சொன்னான். தொரை சுப்பவைசரை கூப்பிட்டு விசாரிச்சிருப்பாரு போல... சுப்பவைசருக்கு கோவம். நேத்து ராத்திரி சுப்பவைசர் நாட்டு ஆள்களோடே வந்து என்ன பத்தி தொரைக்கிட்ட என்னடா சொன்

னேன்னு வள்ளி புருஷனை காம்பராவுல இருந்து இழுத்து அடிச்சிருக்கான். பக்கத்து காம்பரா ஆள்க அதைத் தடுக்கப் போனதுக்கு நாட்டு ஆள்க அந்த லயத்தி லுள்ள எல்லா காம்பராவுலயும் புகுந்து சமான் சட்டுமுட்டு களை அடிச்சி நொறுக்கிட்டானுக...இது பெரிய அநியாயம். இதை பார்த்திட்டு சும்மா இருக்க முடியுமா? கடேசியில இங்க யாருமே பொண்டு புள்ளைகளோடே வாழமுடியாது. இதுக்கு ஒரு முடிவு எடுக்கணும்... இதில் யாரும் கட்சி, சங்கம் பாாக்காம ஒன்று சேரணும்.''

''என்னா முடிவு?'' கூட்டத்திலிருந்து ஒரு குரல்.

''ஸ்ரைக்... சுப்பவைசர்மேலே நடவடிக்கை எடுக்கிற வரைக்கும் ஸ்ரைக்...'' ராமையா அடித்துச் சொன்னான்.

''அது சரிதான்... எப்ப இருந்து ஸ்ரைக்......''

ராமையா திகதி குறித்துச் சொன்னான். சரியாக மூன்று நாட்களுக்குப் பின்னர் ஸ்ரைக். ஸ்ரைக் தொடங்கு மன்று துரையின் பங்களாவின் முன்னால் உண்ணா விரதம் இருக்க முடிவு செய்ததோடு ராமையா தலைமை யில் அதற்கு ஒரு கோஷ்டியும் தெரிவாகியது.

குறித்த திகதியன்று எவருமே வேலைக்குப் போக வில்லை. அந்த தோட்டத்திலிருக்கும் நாலைந்து சங்கத் தைச் சேர்ந்தவர்களையும் சந்தித்துப் பேசி ஸ்ரைக் செய்ய வைத்து விட்டான் ராமையா. காலையில் எட்டு மணியைப் போல் ராமையாவின் தலைமையில் சுலோக அட்டை களுடன் ஒரு கோஷ்டி உண்ணா விரதத்தை தொடங்கியது. முதல் நாள் இரவே அந்தத் தோட்டத்தில் நாலா பக்கங்களி லும் கோயில் வாசலில் ஸ்கூலில்—பிள்ளைக் காம்பரா அருகே தண்ணீர்ப் பைப்படியில்—துரையையும் சுப்ப வைசரையும் தாக்கும் வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகள் தயாரிக்கப்பட்டு தொங்க விட்டிருந்தார்கள். ஆங்காங்கே துரையைப்போல் சுப்புவைசரைப்போல்

மனிதப் பொம்மைகள் செய்து 'தார்பூசி' தொங்கவிட்டிருந் தார்கள்.

பங்களாவிலிருந்து வெளியே வந்த துரை வாசலருகே உட்கார்ந்திருக்கிற உண்ணாவிரதக் கோஷ்டியையும் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிற கூட்டத்தையும் பார்த்ததும் மனதுக்குள் நடுக்கம் எடுக்க பின்வாங்கினார். பிறகு சில மணித்தியாலங்களின் பின்னால் சில துணை களோடு வெளியே கம்பீரமாக வந்தார். இப்போது பயப் படவில்லை. ஏன்? அவருக்குப் பக்கத்தில் துப்பாக்கிகளுடன் தோட்டத்து காவல்காரர்கள் 'உசாராக' இருக்கும்போது ஏன் பயப்படவேண்டும்? பங்களாவின் உள்ளே போன துரை ஆங்காங்கே தோட்டத்தின் எல்லைகளில் இருந்த காவல் காரர்களை ஆள்விட்டு அழைத்து பங்களாவின் முன்னால் இருக்கச் சொன்னார். இனி அவருக்குப் பயமில்லையாம். உண்ணாவிரதக்காரர்கள் துப்பாக்கிகளைப் பார்த்துப் பயப் படவில்லை. இப்போதுதான் உற்சாகமடைந்தார்கள். வேறு சிலரும் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள். துரை காவல்காரர்களை வாசலருகே இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனார். பின்னர் வெகுநேரத்திற்குப் பிறகு வெளியே வந்தார். இப்போது அவருக்கு இன்னும் ஒரு துணையும் இருந்தது. எங்கே உடம்பினுள்...... ஆம்... உள்ளே போனவர் சில கிளாஸ் 'விஸ்கி'யை விழுங்கிவிட்டு வந்திருக்கிறார்.

உண்ணாவிரதமிருக்கும் கோஷ்டியருகே வந்தார். ராமையாவை 'இந்த பயலால்தான் இங்கே எல்லாமே நடக்கிறது, இவனை...!' என்பதுபோல் பார்த்தார்.

''இப்ப நீங்க ஸ்ரைக்கை நிறுத்த போறிங்களா இல்லையா?' துரைதான் கேட்டார்.

''நியாயம் கிடைக்கிறவரைக்கும் ஸ்ரைக் நிக்காது...'' ராமையா அடித்துச் சொன்னான்.

''நிக்க வைச்சு காட்டவா?'' துரை சவால் விட்டார்,

''முடியும்னா செஞ்சு பாருங்க'' ராமையா பதில் சவால் விட்டான்.

''என்னடா சொன்னே...'' என்ற துரை ராமையாவை நெருங்கி, கையை 'ஓங்க' அந்தக் கைக்கு பதில் கையை ராமையா 'ஓங்க' அந்தக் கண்ணத்தில் காவல்காரன் ஒருத் தனின் துப்பாக்கியிலிருந்து கிளம்பின குண்டுகள். 'டுமீல்'... 'டுமீல்'...அடுத்து சில விநாடியில் ''அய்யோ அம்மா'' என்ற அலறலுடன் ராமையா அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு கீழே சாய்ந்தான். சாய்ந்தவன் உடம்பிலி நந்து ஊற்றெடுத் தாற்போல் ரத்தம் கிளம்பி அந்த தேயிலை மண்ணை நனைத்தது.

ரத்தம் சொட்டச் சொட்ட ராமையாவை ஆஸ்பத்திரி யில் சேர்த்தார்கள். ஆஸ்பத்திரியில் ஒருநாள்கூட இருக்க வில்லை. முதல் நாள் போனான், காலையில் இருந்தான், பகல் தன்னை மறந்து விட்டான்....

ராமையாவின் பிணத்தைக் கொண்டுவர இளைஞர் கோஷ்டி ஆஸ்பத்திரிக்கு ஓடியது. அவர்களோடு அந்த தோட்டத்து மெஜாரிட்டி தொழிற் சங்க பிரதிநிதியும் ஓடினார். இநப்பது அறுநூறு எழுநூறு தொழிலாளர்கள், அவர்களுக்கிடையே ஆறு ஏழு தொழிற்சங்கங்கள்... லயத்திற்கு ஒரு தொழிற்சங்கம். சில லயத்தில் இரு சங்கம். ஆயிரம் சங்கம் இருக்கட்டுமே! தொழிலாளி பிரச்சினைகள் தீர்ந்தனவா? அதுதான் இல்லை. சங்கம் பெருகப் பெருக தொழிலாளியின் பிரச்சனைகள் பெருகிக்கொண்டே வந்தன.

ஆஸ்பத்திரியில் பிணத்தை உடனே தர மறுத்தார்கள். அந்த இடத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதி தன் செல்வாக்கை காட்டினார். அவரும் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கிடைத்து விட்டது. காணவேண்டியவர் களைக் கண்டு, பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து. பேசவேண்டியவர்களைப் பேசி பிணத்தை வெளியே

கொண்டு வந்துவிட்டார். பிணம் லயத்திற்கு வந்தபோது மணி ஐந்தாகி விட்டது. பிணத்தை காரிலிருந்து லயத்திற்கு கொண்டு போவதற்குள் போதுமென்றாகிவிட்டது. ராமையாவின் மனைவி பிணத்தின்மீது விழுந்து விழுந்து அலறினாள். ராமையாவின் நெருங்கிய நண்பன் முத்து மயக்கம் போட்டு விழுந்தான்.

பிறிதொரு காம்பராவில் இளைஞர் கோஷ்டி ஒரு கூட்டத்தைக் கூட்டியது. அக் கூட்டத்திற்கு எல்லாச் சங்கப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். மெஜாரிட்டி சங்கப் பிரதிநிதி அக்கூட்டத்திற்கு தலைமை தாங்கியதைப் போல் நடந்துகொண்டார்...

''நமக்காக உயிரைத் தியாகம் செஞ்ச ராமையாவை தொழிலாளிகள் சார்பிலதான் அடக்கம் செய்யனும்'' என்று சொன்ன இளைஞன் ஒருவன் மேலே ஏதோ சொல்ல வாயெடுத்தபோது, மெஜாரிட்டி தொழிற் சங்கப் பிரதிநிதி ஆக்ரோஷமாக பேசத் தொடங்கினார்.

''ராமையா இந்தத் தோட்டத்து மக்களுக்காக உயிரைத் தியாகம் செய்யல்ல. முழு மலை நாட்டு மக்களுக்காகவும் தான் உயிரைத் தியாகம் செய்திருக்கான். அவனுடைய தியாகத்திற்கு எவரும் ஈடு கொடுக்க முடியாது. ராமையா எதையும் அவசரப்பட்டு செய்யக்கூடியவனல்ல. யோசிச்சு தான் செய்வான். அவன் அடிக்கடி நம்ம சங்கத்திற்கு வருவான். எந்த நேரமும் தொழிலாளி பிரச்சனையைப் பத்தித்தான் பேசுவான். எப்ப பார்த்தாலும் ஆள் எதிலேயும் சுறுசுறுப்புதான். அதையெல்லாம் பார்த்த நாங்க இந்த வருஷம் நம்ம சங்க மாவட்டத் தலைவராக்க தீர்மானிச்சோம். அதுக்குள்ள...'' தன் பேச்சை நிறுத்திய பிரதிநிதி சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு மறுபடியும் பேசினார்...''சம்பவம் நடந்தோன்ன நான் நம்ம தலைவருக்கு டெலிபோன் செஞ்சேன். அவர் கோபமா இருந்தாரு. இந்த வருஷத்தில் இது மூணாவது சாவு...இப்படியே விட்டா நம்ம ஆளுகல இவனாக சுட்டே

தள்ளிடுவானுக போலயிருக்கு. ராமையாவுட்டு மரணச் சடங்கை நம்ம சங்கக் கணக்கில செய்யச் சொன்னாரு. ராமையாவுட்டு சம்சாரத்துக்கு சங்க சார்பில் ஏதாவது கொடுக்கவும் ஏற்பாடு செய்யிரேன்னாரு.''

இளைஞர் கோஷ்டியுடன் மற்ற சங்க பிரதிநிதியும் மெஜாரிட்டி சங்க பிரதிநிதியின் பேச்சிற்கு தலையாட்டிக் கொண்டிருந்தார்கள். ''எங்க சங்க சார்பில் ராமையா மரணச்சடங்கை செய்யிறோம்'' என்று சொல்ல மற்ற சங்க பிரதிநிதிக்கும் சத்தி வரவில்லை. பொருளாதாரத்தில் பின் தங்கிய சங்கங்கள்...மெஜாரிட்டி சங்க பிரதிநிதியின் சங்கமோ இருக்கும் சங்கத்திலேயே பணக்கார சங்கம்... ராமையா செத்த செய்தி கேட்டதுமே பிரதிநிதி மேலிடத்திற்கு டெலிபோன் செய்து பேசினார்.

''யாரு! ஹெட் ஆபீசர்... இங்க நான் பிரதிநிதி பேசுரேன். மட்டவத்தை தோட்டத்தில் சூடுபட்டு ராமையாங்கிற தொழிலாளி செத்துப்போயிட்டான். நான்தான் பொணத்தை ஆஸ்பத்திரியிலயிருந்து எடுக்க ஒதவி செஞ்சேன். ராமையாவுட்டு மரணச் சடங்கை நம்ம சங்க கணக்கில செஞ்சா நல்லது. இந்த மாவட்டத்தில் நம்ம சங்க மெம்பரும் இப்ப கொறைவு. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினா மெம்பர் நெறைய சேரலாம். சாவுக்கு ஒ-எஸ்ஸாவது தலைவராவது வரணும்...''

தனது திட்டத்தை பிரதிநிதி மேலிடத்திற்கு கம்பிமூலம் அனுப்ப கம்பி மூலமோ சம்மதம் கிடைத்துவிட்டது. சம்மதம் கிடைத்ததில் தைரியமாகப் பேசினார் பிரதிநிதி...

''நாளைக்கு பேப்பர்லே முன் பக்கத்தில் துப்பாக்கி சூட்டைக் கண்டிச்சி தலைவர்விட்ட அறிக்கை வருதாம். சிலோன் பூராவுள்ள நம்ம சங்க ஆபிஸை நாளைக்கு மூடச் சொல்லியிருக்காரு. ராமையாவுட்டு படத்தைப் போட்டு நோட்டீசும் அடிக்க சொல்லியிருக்காரு'' இப்படியே அடுக்திக் கொண்டுபோன பிரதிநிதி கடைசியாக இளைஞர்

கோஷ்டியிடம் ஒரு உதவிகேட்டார். ''எல்லாம் சரிதான், ஆனா நீங்க ஒன்னு செய்யனும். ராமையாவுட்டு சொந்தக் காரங்களுக்கிட்ட இந்த விஷயத்தைச் சொல்லி மரணச்சடங்கை சங்கம் செய்யப்போவதாகச் சம்மதம் வாங்கணும். அவங்க செய்யவேண்டியதை யெல்லாம் காம்பராவிலேயே வைச்சுக்க வேண்டியது. காம்பராவிலயிருந்து மயானம் வரைக்கும் நம்ம சங்கமே பொறுப்பு...''

இளைஞர் கோஷ்டி அதற்கு தலையாட்டியது. பிரதிநிதி தனது திட்டம் வெற்றியடைந்த சந்தோஷத்தில் மேலிடத்திற்கு டெலிபோன் செய்ய டவுனுக்குப் போனார்.

அப்போதுதான் வவுனியாவிலிருந்து தந்தி கிடைத்து பதறித் துடித்துக்கொண்டு வந்த சின்னையாவின் காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அலறினாள் வள்ளி. அவரும் பதிலுக்கு ஒப்பாரி வைத்தார்.

''நான் அப்பவே சொன்னேன் இந்த ஊர் வம்பு வேணாம்னு கேட்டானா? இப்ப பார்த்தியா?''

தன் மருமகன் சங்க காரியத்தில் ஈடுபட்டதை விரும்பவில்லை. அவர் பலமுறை கண்டித்தார். ஒருநாள் அது சம்பந்தமாக இருவருக்கும் இடையே பெரும் தகராறே வந்தது.

அன்று சங்க விஷயமாக டவுணுக்குப்போய் நேரம் சென்று லயத்திற்கு வந்தான். அவன் வரும்வரை அவரும் சாப்பிடவில்லை. அவளும் சாப்பிடவில்லை.

''எங்க போயிட்டு வாற?'' அவர்தான் கேட்டார்.
''டவுணுக்கு போயிட்டு வாறேன்.''

'டவுண்' என்றதுமே சங்கத்திற்குத்தான் போய் வந்திருக்கிறான் என்று அவளுக்குத் தெரிந்தது.

''சங்கம் சங்கம்னா இப்படி ராவு பகலா அலைஞ்சா யாரு குடும்பத்த கவுனிக்கிறது? நமக்கெதுக்கு ஊர்வம்பு...''

அவனுக்கு கோபம் வந்துவிட்டது. ''இந்தா பாருங்கோ! சங்க விஷயத்துக்காக போறதும் வர்றதும் என் விஷயம். அதில தலையிட உங்களுக்கு உரிமையில்லை. நீங்க ஒங்க வேலயப் பாருங்க.'' 'ஓகோ அப்படியா?' அவருக்கு ரோஷம் வந்துவிட்டது.

அப்போதே எங்கோ கிளம்பிப் போய்விட்டார். அவன் தடுக்கவில்லை. தடுக்கப்போன வள்ளியையும் ஒருமுறை முறைத்தான். அவள் அப்படியே அடங்கியே போனாள். அவனை மீறிப் போனால் அப்பாவோடு அவளும் போக வேண்டியதுதான். அதுதான் அவனுடைய சட்டம்.

வெளியே போனவர் எங்கே போனார் என்று தெரிய வில்லை. பின்னால் வவுனியாவில் இருக்கிறார் என்று செய்தி வந்தது.

மகளின் கண்ணீர்த் துளிகள் நெருப்புத் துளிகளாக அவரின் கால்களை நனைத்துச் சுட்டன. தன்னை மறந்து அவர் அழுதார். பிறகு பித்து பிடித்தவர் போல் பிணத்தின் அருகேயே கல்தூணாக நின்று கொண்டிருந்தார்...யார் யாரோ வந்தார்கள். மலர் வளையம் வைத்தார்கள். சிலர் கத்தினார்கள். ஒப்பாரி வைத்தார்கள். கோயில் பண்டாரம் தேவாரம் பாடிக்கொண்டிருந்தான். அவர் அப்படியே நின்றார்.

இரண்டு மணிக்கு பிணத்தை எடுப்பதாக ஏற்பாடு. அந்தக் காம்பராவிலிருந்து மயானம் வரைக்கும் போகிற பாதை நெடுக தென்னோலைக் குருத்துகளை கயிறு கட்டி இரு பக்கமும் தொங்க விட்டிருந்தார்கள். குருத்தோலை காணாத இடையே ராமையாவின் படமும் அச்சிட்ட நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது. அந்த நோட்டீசில் அவனுடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையும் அவனுடைய தியாகத்திற்கு புகழ் அஞ்சலியும் மெஜாரிட்டி சங்கம் செய்திருந்தது. தாள லயத்தோடு தப்பும் சங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன.

நேரம் போக போக அந்த இடத்தில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. அதுவரை அந்தத் தோட்டத்தில் யாருடைய சாவிற்கும் அப்படி ஒரு கூட்டம் கூடியதில்லையாம். அப்படித்தான் அந்தக் கூட்டத்தினர் பேசிக் கொண்டார்கள். எக்கச்சக்கமான கூட்டம். காம்பராவுக்குப் போய் அஞ்சலி செய்ய வேண்டியவர்கள் கூட்டத்தை பிளந்து கொண்டு போக வேண்டியதாயிற்று...

வெளியே வெய்யில் நெருப்பாக கொளுத்தியது. ராமையா செத்ததில் கதிரவன் கோபமாக இருந்தான். தேயிலைச் செடிகளின் இதழ்கள்கூட ராமையா போனதில் வாடிப் போயிருந்தன.

சரியாக ஒன்றரை மணி. ஒரு பெரிய கார் வந்தது. காரிலிருந்து முதலில் இறங்கிய பிரதிநிதி காரின் பின் கதவை அவசர அவசரமாக திறந்தார். திறந்த கதவு வழியாக வெள்ளை வெளேரென்ற உடையில் சங்கத்தின் செயலாளர் இறங்கினார். கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார்.

அவருக்குப் பின்னால் சங்கத்தின் பலவர்ண கொடியும் தேயிலைக் கொழுந்துகளால் கட்டப்பட்ட ஒரு பெரிய மலர் வளையமும் வந்தன. அதற்குப் பின்னால் பெருங்கூட்டமே நகர்ந்தது.

அந்தக் காம்பராவின் உள்ளே நுழைந்தார் அவர். அவரோடு ஒரு கூட்டமே உள்ளே நுழைந்தது. பிணத்தின் அருகே கல்தூணாக நின்று கொண்டிருந்த சின்னையாவின் மீது சிலர் மோத அவர் சுயநினைவுக்கு வந்தார்.

பிணத்தின் அருகே நின்று அஞ்சலி செய்த செயலாளர் கொழுந்து மலர் வளையத்தை வைத்துவிட்டு கண்களை கசக்கியவாறு பலவர்ணக் கொடியை விரித்தார்...விரித்து பிணத்தின் மீது போர்த்தப் போனார்...அந்த சமயம் சின்னையா பேசினார். ''கோவிச்சுக்காதீங்க தயவு செஞ்சு கொடியேதும் போர்த்தாதீங்க. என் மருமகன் உடம்பில்

எந்த சங்கக் கொடியும் விழக்கூடாது. அவன் தொழிலாளிக் காக செத்தான். பரவாயில்லை. ஆனா அவனை வைச்சி எந்த சங்கமும் பப்ளிசிடி தேட விடமாட்டேன்.''

சங்கச் செயலாளர் திகைத்துப் போனார். பிறகு மௌனமாக ஆனால் உள் மனதில் கோபம் 'கொப்'பளிக்க வெளியேறினார். அப்போது அங்கிருந்த பிரதிநிதி சின்னை யாவின் அருகில் போய் ''என்னங்க இப்படி பண்ணீட்டீங்க! அவர் யார் தெரியுமா? நம்ம சங்க பெரிய செயலாளர்! ராமையா நம்ம சங்க மெம்பர். அவனுக்காக கொழும்பில யிருந்து வந்திருக்கார். இப்படி பண்ணீட்டீங்களே'' என்றார்...

அவர் சத்தம் போட்டு பேசினார்...''கோவிச்சுக்கா தீங்க...இது நம்ம வீட்டு விவகாரம். இதில நீங்க தலையிடா தீங்க...உங்க சங்கத்தை பத்தி எனக்கு தெரியும். இப்ப சங்கம் இங்க வந்திருக்கு. ஏன்? பப்ளிசிடி தேட...செத்த வனை பத்தி மயானத்தில் புகழ்வீங்க, இதுமாதிரி அநியா யத்தை இனி நடக்கவுடாதீங்க. ஒப்பாரி வைப்பீங்க... இப்படித்தான் பத்து வருஷத்துக்கு முந்தி சங்குவத்தை தோட்டத்தில முனியாண்டி சூடுபட்டு செத்தான். அவனும் சங்கத்துக்காகத்தான் செத்தான். சங்கம்தான் அவனை புதைச்சிச்சி...அப்பறம் மறந்திருச்சி. இப்ப முனியாண்டி சம்சாரமும் புள்ளைகளும் டவுண்ல பிச்சை எடுக்கிறாங்க. மொதல்ல போயி அதைக் கவனிங்க...எங்களுக்குத் தெரி யும்...எப்படி பொணத்தை பொதைக்கிரதுன்னு.''

பிரதிநிதி தலையை தொங்க போட்டார். மௌனமாக வெளியேறினார். தான் எப்படி ஹெட் ஆபீசில் விழிப்பது என்று தெரியாமல் தவித்தார்.

அந்த நேரத்தில் அந்தக் காம்பராவின் பீலித் தகரத்தில் ஒட்டப்பட்டிருந்த ராமையாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யும் நோட்டீஸ் மெல்ல கழன்று நழுவி பறக்கத் தொடங்கியது. ★

# போஸ்டர்கள்

உதிர்த்துக் கொட்டிக்கொண்டிருந்த பழைய கோரைப் பாயில் கால்களை நீட்டாமல் மடக்கி, சுருட்டிப்படுத்திருந்த முத்துவைப் பிடித்து, உலுக்கிக் குலுக்கி, ஆட்டி அசைத்து, எழுப்பி உட்கார வைத்தான் முனியாண்டி. முத்துவுக்கு ஒன்றுமே தெரியவில்லை. திருதிருவென்று முழித்தான். தூக்கம் மறுபடியும் கண்ணைமூட வைத்தது. அப்படியே விட்டால் தூங்கினாலும் தூங்குவான். தூக்கம் அப்படிப் பட்டது. அவன் என்ன செய்வான்? ஆனால் முனியாண்டி விடவில்லை. மீண்டும் மீண்டும் அவனைக் குலுக்கி அசைத்து அவனுடைய செவிகள் கிழிய சத்தம்போட்டான்.

''என்னடா...குடிகாரன் மாதிரி குந்தியிருக்க? பொழுது விடிஞ்சிபோச்சி.... எழும்பு... கொஞ்சமாவது ஒனக்கு பொழைக்கனும்னு ரோசனை இருந்தா இப்படி படுப்பியா? ஊர்ல உள்ள வாண்டெல்லாம் எப்படா விடியும்னு பாத்து கிட்டு இருக்கிற நேரம் நீ என்னடான்னா இன்னும் தூங்கிறியே!''

கண்களை கசக்கி கசக்கி முனியாண்டியைப் பார்த்த முத்து திரும்பவும் படுக்கையில் சாய்ந்தான். இனி அவன் எழும்பமாட்டான். இன்னும் சில நிமிடம் தூங்க வேண்டும் என்ற ஒரு வெறி அவனிடம் இருந்தது. அது முனியாண்டி யைக் கண்டதும் கூடிவிட்டது. வேறு எவரும் அவனை எழுப்பியிருந்தால் அவன் எழும்பியிருப்பான். ஆனால் இப்போது அவனை எழுப்புவது முனியாண்டி அல்லவா? எழும்புவானா! வேண்டுமென்றே படுத்திருந்தான். ஆனால் முனியாண்டி விடவில்லை. மீண்டும் முத்துவை எழுப்பி

னான்...'ம்...முகத்தை கழுவு முத்து. நேரமாச்சி, கட்டாயம் நீ இன்னைக்கி போவணும். போனாதான் ஏதாவது கெடைக்கும். இல்லே...இன்னிக்கி பொழப்பே போச்சி...ம் ...போ முத்து சொன்னா கேளு...'

முத்து பதிலே பேசவில்லை. முனியாண்டிக்கு கோபம் தான் வந்தது. கொள்ளிக்கட்டை நெருப்புபோல் கண்கள் சிவக்க, அவனை அடிக்கக் கை ஓங்கியவன், திடீரென்று ஓர் நினைவு நெஞ்சில் மின்னல்போட தன்னை மாற்றிக் கொண்டு, 'என்ன...முத்து? இந்த நேரம் பார்த்து இப்படி பண்ணுறே...நாலு பணம் தேடுற நேரம்... மறந்திராத... நேரமாச்சி... போது...முத்து' என்று கெஞ்சினான். எப்படியாவது அவனை கையில் சாக்கோடு தெருத் தெருவா கத் துரத்தினால்தான், அந்த சாக்கு நிறைய பழைய பேப்பர் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டுவருவான். அதை நிறுத்துப்பார்த்தால் எப்படியாவது இரண்டு மூன்று ரூபா சேரும்...முனியாண்டியின் சில்லறைச் செலவுக்கு அது போதும். ஆனால் முத்து போகமாட்டேன் என்கிறானே!

'முத்து! உள்ளதைச் சொல்லு...வாங்கித்தாறேன்... என்னதான் வேணும்?' முத்துவின் முதுகைத் தடவித் தடவி கெஞ்சினான் முனியாண்டி. எப்படியாவது காரியம் ஆக வேண்டும். காரியம் ஆக சிலர் காலையும் பிடிப் பார்கள். முனியாண்டி அவனுடைய அப்பன் என்றாலும் காலைப் பிடிக்கவில்லை. முதுகைத்தானே தடவுகிறான்...

முத்து படுத்துக்கொண்டே சொன்னான்... 'நீங்க எந்தநாளும் இப்படிதான் சொல்றீங்க...நான் கேட்டதை வாங்கிதரல்ல...வேற சட்டையும் இல்ல! ஒரே சட்டையை போட்டு போட்டு அது கிழிஞ்சி போச்சி! இனி அதை போடவே முடியாது...இன்னைக்கி புதுசா சட்டை வாங்கி தந்தாதான் போவேன். போன கெழமை மாதிரி ஏமாத் தினா போகவே மாட்டேன்!'

ஒவ்வொரு நாளும் அவன்தான் துண்டுக் கடுதாசி களைப் பொறுக்கிக்கொண்டு வருவான். போகும் போது

வெறும் சாக்கும், வெறும் வயிறும்தான் அவனிடம் இருக்கும். வரும் போதோ சாக்கு கர்ப்பிணியாகிவிடும். வயிறு எம்டிதான். சாக்கிலோ நிறைய துண்டுக் கடுதாசிகள்...அப்படி கொண்டு வந்தால்தான் சாப்பாடு கிடைக்கும். இல்லாவிட்டால் அடி உதைதான். முத்து முனியாண்டியின் மகன்தான். ஆனால் அவன் போடும் சோற்றுக்கு மகனில்லையே.

'அட...இதுக்குத்தானோ? இன்னிக்கி கட்டாயம் வாங்கித்தாறேன். மொதல்ல நீ சாக்க எடுத்துகிட்டு போ...'

இப்படித்தான் பல வாரமாக சொல்லிக்கொண்டு வருகின்றான். இன்னும் வாங்கிக் கொடுக்கவில்லை. முத்துவும் விடவில்லை. ஒரே ஒரு சட்டைதான் அவனிடம் இருக்கிறது. அதுவும் கிழடாகிவிட்டது. கழுத்திலும், கைகளிலும், தோளிலும், முதுகிலும் அங்காங்கே வெடித்து வாயைப் பிளந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எப்படி தைத்தும் வாயை மூடமுடியவில்லை. சட்டை ரொம்பவும் பழசாகி விட்டது. அதனால்தான் அவன் அதை உடம்பில் போடுவதே இல்லை. வெளியே எங்காவது கடைக்குப் போனால்தான் மாட்டிக் கொள்வான். வியர்வைக்கும் வெய்யிலுக்கும் அவன் சட்டைப்போடுவதே இல்லை. துவைக்கும் போதுகூட கவனமாகத்தான் துவைப்பான். கல்லில் போட்டு தப்பவோ அடிக்கவோ நினைக்கவும் மாட்டான். கொஞ்சம் அழுத்தித் துவைத்தால் போதுமே ...சட்டை பல்லை இளித்துக்கொண்டு பார்க்குமே!

'சரி...சரி...இன்னைக்கி சட்டை எப்படியாவதுவாங்கித் தாறேன். அழுகாதே! சல்லி இருந்தா நீ கேக்குமுந்தியே வாங்கி தருவேன்தானே... சல்லி இல்லாதனாலதான் வாங்க முடியல்ல. எடுக்கிர சம்பளமும் பத்தாது. சம்பளம் பத்தாததனாலதான் ஒன்னை றோட்றோட்டா அனுப்புறேன்...போ...முத்து...இன்னைக்கி எப்படியாவது வாங்கித்தாறேன். சத்தியமா வாங்கி தர்றேன்...''

முத்துவுக்கு நம்பிக்கை பிறந்தது...'நல்ல சட்டையா வாங்கிதரனும். மஞ்சகலர்தான் நல்லா இருக்கும். எல்லாரும் அதைத்தான் இப்போ போடுறாங்க!'

முனியாண்டி தலையாட்டினான்...'நீ சொன்ன மாதிரியே மஞ்ச கலர்ல சட்டை வாங்கி தர்றேன்... ...மொதல்ல சாக்க எடுத்துகிட்டு போ...சரியா?'

முத்து படுக்கையை விட்டு எழும்பி, முகம் கழுவ, குசினிப் பக்கம் ஓடினான். முனியாண்டியும் அவன் பின்னாலேயே போனான். குசினியில் இருந்த முனியாண்டி யின் மனைவிக்கு சற்று முன்னர் நடந்த நாடகத்தின் அர்த் தம் புரிந்துவிட்டது. அவள் வாய் சும்மா இருக்குமா...? 'இன்னைக்கும் பழைய கதையை ஆரம்பிச்சாச்சா? பாவம்... சின்னப் பயல்...அவனைப்போய் அனுப்புறியே! அப்புடி அனுப்பினாலும் பரவாயில்ல, அவனால கெடைக்கிறதுல அவனுக்கே சட்டைவாங்கி கொடுத்தா என்னா? பாவம்... எத்தனை நாளா கேக்கிறான்! தெனம் அவன் கொண்டு வாரதுல விக்கிறதுனால வர்ரதை ரெண்டு மூணு நாளைக்கி செலவழிக்காம வைச்சிருந்தா வாங்கலாம்தானே. நீதான் வித்தோன்ன அதை முழுசா முழுங்கிறியே...அப்புறம் எப்படி வாங்கிறது?'

முனியாண்டியால் மனைவியின் வார்த்தைகளைத் தாங்கமுடியவில்லை. சத்தம்போட்டு அவளை அடக்கினான் ...'காலையில ஒரு பக்கம் விடிய முந்தி ஒன் பழைய ரெக்கார்டை போடாதே. அவனுக்கு சட்டை வாங்கிக் கொடுக்க எனக்குத் தெரியும். நீ பேசாம இரு...இப்ப நெனைச்சோன்ன சட்டை வாங்க முடியுமா? சல்லி இங்க கொட்டியா கெடக்கு...கொஞ்சம் கொஞ்சமா சேத்துத்தான் வாங்கணும்?'

முனியாண்டியின் மனைவி பதிலே பேசவில்லை. அடுப்போடு போராடத் தொடங்கினாள். முனியாண்டி குசினியை விட்டு வெளியே போய், பின் பக்கம் எட்டிப் பார்த்தான்...முத்து முகத்தை கிழிந்த பழைய வேட்டித் துண்டால்—அதுதான் அவனுக்கு ரூல்டவல்—துடைத்துக் கொண்டிருந்தான். முனியாண்டியின் மனதில் சந்தோஷம் மிதந்தது. அதை தன் முகத்தில் தேக்கிக்கொண்டே முத்துவிடம் போனான்...! 'வீட்டில் சவுக்காரத்துக்கு பஞ்சமா? மொகத்தை நல்லா கழுவ வேண்டியதுதானே. அதைக் கூடவா ஒருத்தன் எந்த நேரமும் சொல்லுவான்? சரி... சரி...மொகத்தை கழுவிட்டு தேத்தண்ணியை குடிச்சிட்டு ஓடு. நேரமாச்சி!'

முத்துவை நன்றாக காக்கா பிடித்தான் முனியாண்டி. பிழைக்கத் தெரிந்தவன் அவன். மகனாக இருந்தாலும் மனைவியாக இருந்தாலும் காக்கா பிடித்தால்தானே காரியம் நடக்கும் என்பது அவனுக்குத் தெரிந்த உண்மை. பெரிய பெரிய புள்ளிகள் எல்லாம் நாலு வார்த்தைக்கு நழுவி விழத்தானே செய்கிறது!

முத்து வெறும் சாக்கைத் தேடியெடுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினான். குதிரைக் கால்கள் அவனுக்கு... ரேஸ் குதிரையைப்போல் ஓட்டமாக ஓடினான். அப்படியே ஓடி ஓடி ஒரு வீட்டின் சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரின் அருகே நின்றான். வெளிச்சம் இன்னும் வெளியே வரவில்லை. அடிவானத்தில் அது எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

முத்து போஸ்டரையே ஏறிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தான். முனிசிப்பல் லைட் வெளிச்சத்தில் அது அழகாகத் தான் இருந்தது. அந்த போஸ்டர் உள்ளூர் தியேட்டரில் ஓடும் படத்துக்காக ஒட்டப்பட்டதாகும்.

விதவிதமான கலரில் அது ஜொலித்தது. அவனுடைய அபிமான நடிகர் வாத்தியார் எம். ஜி. ஆர். அதில் நம்பியாருக்கு ‘கும் கும்’ கொடுப்பது போலவும், மஞ்சுளாவை கட்டித்தழுவி அவளின் முகத்தோடு முகத்தை உரசி ‘கிசு... கிசு’க்க முயல்வதுபோலவும் இரண்டு விதமாக அந்தப் போஸ்டரில் இருந்தார். முத்து துள்ளித்துள்ளிக் குதித்தான்... ‘போஸ்டரே இவ்வளவு அழகாக இருக்கிறதே! படம் எவ்வளவு அழகாக இருக்கும்!...’

அந்தப் படத்தை எப்படியாவது பார்க்க வேண்டுமென்று முத்து நினைத்தான். இதுவரைக்கும் வாத்தியாரின் ஒருபடத்தையும் அவன் விடவே இல்லை. இதை விடுவானா...? அப்பாவிடம் சொல்லி எப்படியாவது படத்தைப் பார்க்க வேண்டுமென்று முடிவு கட்டி விட்டு ஓட்டம் பிடித்தான்... நேரமாகி விட்டதாம்... துண்டுக் கடுதாசிகள் பொறுக்க வேண்டுமே!

ரேஸ் குதிரையைப்போல் ஓடி வந்த முத்து ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்துதான் நின்றான். மூச்சு புஸ்... புஸ்ஸென்று சத்தம் போட்டு இளைத்தது. ஓரிரு நிமிடங்கள் ஓய்வெடுத்த பின், துண்டுக் கடுதாசிகளைப் பொறுக்குவதற்காக ரயில்வே ஸ்டேஷனை ஒரு அலசு அலசி விட்டு, பிரதான வீதிக்கு வந்து ஆங்காங்கே கிடைத்ததைப் பொறுக்கிச் சாக்கில் திணித்து விட்டு மூன்று தியேட்டர்களையும் ஒரு சுற்று சுற்றி விட்டு அப்படியே பஸ் ஸ்டாண்டுக்கு வந்தான். பஸ் ஸ்டாண்டில் பஸ் டிக்கெட்டுகள் மாத்திரம் அல்ல; பழைய பேப்பர் துண்டுகள், நனைந்துபோன கடுதாசிகள், இன்னும் வெறுமையான சோற்றுப் பார்சல்கள் எல்லாவற்றையும் சாக்கில் அமுக்கினான். அவனுக்கு என்ன...எந்த பேப்பர் துண்டுகளாக இருந்தாலும் கவலையில்லை, அவனுக்குத் தேவையானது துண்டுக் கடுதாசிகள் தான்...

சாக்கு நிரம்பி விட்டது. நிறைமாதக் கர்ப்பிணியாகி விட்டது. இனி ஒரு துண்டுக் கடுதாசியும் அதில் திணிக்க முடியாது. அப்படி நிரம்பி விட்டது...முத்து சாக்கைத் தூக்க முடியாமல் தூக்கினான். தன் முழு சக்தியையும் வரவழைத்துக்கொண்டு கர்ப்பிணிச் சாக்குடன் நடக்க ஆரம்பித்தான். அவன் ஒரு நாளும் இப்படி பாரத்தைத் தூக்கியதே இல்லை. ஆனால் மனதில் இருந்த சட்டை கிடைக்குமென்ற நம்பிக்கை அந்தப் பாரத்தைத் தூக்க வைத்து விட்டது. தூக்கிக்கொண்டு நடந்தான்...

வீட்டுக்கு வந்ததும் முனியாண்டிதான் முத்துவின் தோளிலிருந்த மூட்டையைக் கீழே இறக்கி வைத்தான். முத்து பெருமூச்சு விட்டுக்கொண்டே கீழே உட்கார்ந்தான். முனியாண்டிக்கு மூட்டையைப் பார்த்தபோது வியப்பாக இருந்தது... 'அட... இன்னைக்கி இம்புட்டு பேப்பர் துண்டு கடுதாசி சேர்த்திருக்கிறானே...' கெட்டிக்காரன்தான். இருந்தாலும் இன்று மற்ற நாளைவிட நிறைய சேர்த்திருக்கிறானே! ஏன்?

முனியாண்டியின் நெஞ்சிலிருந்து அப்போது எட்டிப் பார்த்த பதில் கசப்பாக இருந்தது. கீழே உட்கார்ந்திருந்த முத்துவை எழுப்பி முனியாண்டி குசினிக்குச் சாப்பிட அனுப்பினான். குசினிக்குப்போன முத்து துண்டுக் கடுதாசியைச் சாக்கில் திணிப்பது போல் 'கையகல' ஒரே ஒரு ரொட்டியைத் துண்டு துண்டாகப் பிய்த்து தன் வயிற்றில் திணித்துவிட்டு வந்தான். அதன்பின் முனியாண்டி அவன் தலையில் மூட்டையைத் தூக்கி வைத்தான். இருவரும் பழைய பேப்பர் வாங்கும் கடைக்குப் போனார்கள். கடைக்கு வந்ததும் முனியாண்டி முத்துவின் தலையிலிருந்த மூட்டையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு முத்துவை வீட்டுக்கு அனுப்பினான்.

முத்து வீட்டுக்குப் போகும் முன்னர் முனியாண்டியை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுப் போனான்...அதன் அர்த்தம் முனியாண்டிக்குப் புரிந்தது. சட்டை வாங்கி வரச் சொல்லி சொல்லாமல் சொல்கிறான்...

வீட்டுக்கு வந்த முத்து அடிக்கடி வாசலுக்குப் போய் எட்டிப்பார்த்துக் கொண்டே இருந்தான்...அப்பா வருகிறாரா என்று பார்க்க அவனுக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது. இதைப் பார்த்த முத்துவின் அம்மா உள்ளூர நடுங்கிக் கொண்டிருந்தாள்...ஓ! எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறான்! அப்பா சட்டை வாங்கி வருவாராம்! என்ன உறுதி! என்ன நம்பிக்கை!

முத்து இன்னும் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனுடைய மனம் எங்கெங்கோ ஓடியது. எங்கே ஓடப்போகிறது? கந்தையாவின் மகன் ராமநாதனிடம் ஓடியது... சட்டை கிடைத்ததும் அதை உடனே போட்டுக் கொண்டு அந்த ராசுவிடம் போய் 'ஏய்...ராசு! பாத்தியா? சொன்னமாதிரியே சட்டை போட்டிருக்கிறேன். நீ ஏதோ சொன்னியே...என்னால முடியாதுன்னு... பாத்தியா புது சட்டையை!' என்று சொல்ல வேண்டும் போல் ஒரு எண்ணம் ஓடியது அவனுக்கு. இரண்டு நாட்களுக்கு முன் கிழிந்த சட்டை போட்டிருந்தபோது அந்த ராசு என்னமாய் கிண்டல் பண்ணினான். அதற்கு இன்று பதிலடி கொடுக்கத்தானே வேண்டும்! ஆமாம், கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் அதற்கு சட்டை வேண்டுமே! சட்டையா? சட்டைதான் அப்பா வாங்கி வருகிறேன் என்று சொல்லி விட்டாரே! முத்து வெளியே எட்டிப்பார்த்தான். அப்பா ஆடி ஆடி அசைந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவனுடைய கால்கள் குதித்து ஓடின. கையில் ஒன்றும் இல்லையே!

'அப்பா, சட்டை வாங்கிட்டு வந்தியா?'

'சட்டையா? யாருக்கு? இருக்கிரதை போடக் கூடாதா!'

முத்துவுக்கு உயிரே மேலே போய் வந்ததுபோல் இருந்தது... 'என்னப்பா...நீங்கதானே வாங்கி தாறேனு சொன்னீங்க...இப்ப இல்லேங்கிறீங்க!'

'வாங்கிதாறேனு சொன்னேன்தான். இப்ப கையில காசில்ல. இனி அடுத்த கெழமை பார்ப்போம்...'

'காசில்லையா? காலையிலதானே ஒரு மூட்டை பொறுக்கிட்டு வந்தேன்; அதை வித்தீங்கதானே? அதுல சட்டை வாங்கலாம்தானே! அதை என்னா செஞ்சீங்க?'

'அட... யாரு நீ... அதைக் கேக்க... ஏதோ துண்டு கடுதாசியை பொறுக்கிட்டு வந்திட்டு கேக்கிறியே! ஊரெல் லாம் பொறுக்கிட்டு வந்ததில என்னா ஆயிரம் ரூபாவா கெடைச்சிச்சி. மூணே முணு ரூபாதான் கெடைச்சிச்சி! அதுல எப்படி வாங்கிரது? பெரிய கேள்வி கேக்க வந்துட் டாரு...போடா...போ?' என்று கத்தியபின் முத்துவின் முதுகில் நாலைந்து போட்டான். கிடைத்த சில்லறைக்கு இன்று நன்றாகப் போட்டிருந்தான். துண்டுக் கடுதாசி இன்று உள்ளே தண்ணியாகப் போய்விட்டது.

அடி வாங்கிய முத்து ஒரே ஓட்டமாக வெளியே ஓடி னான். கொஞ்ச தூரம் அவனைத் துரத்திய முனியாண்டி திரும்பி வீட்டுக்கு வந்தான். முத்து போஸ்டர்கள் ஒட்டப் பட்டிருந்த இடத்தில் போய் நின்றான்.

முன்பு காலையில் அவன் பார்த்த ஒட்டப்பட்டிருந்த போஸ்டர் கிழித்தெறியப் பட்டிருந்தது. படம் முடிந்து விட்டதாம். இனி அது தேவையில்லைதானே. படம் ஓடும் போதுதான் போஸ்டர் ஒட்டப்பட்டிருக்கும். போஸ்டரின் கதையே அதுதானே!

அந்தச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர் தாறுமாறாக கிழிக்கப்பட்டிருந்தது. வாத்தியாரின் உடலில் பாதிப் பகுதியைக் காணவில்லை. மஞ்சுளா முழுசாகவே போஸ்டரிலில்லை. புதுப்போஸ்டர் ஒட்டியவன் அதை கிழித்துப் போட்டிருக்கிறான். புதுப் போஸ்டர் வேறு இடத்தில் இப்போது ஒட்டப்பட்டிருக்கிறது.

கீழே குனிந்து துண்டுக் கடுதாசிகளை துண்டுகளாக கிழிக்கப்பட்ட போஸ்டரைத்தான் - பொறுக்கிக் கொண்ட முத்து நிமிர்ந்து புதிய போஸ்டரைப் பார்த்தான். புதிய போஸ்டர் இன்று அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் படம் ஓடி முடிந்ததும் அதைக் கிழித்து விடுவார்களே! போஸ்டர்களின் கதையே இதுதானோ? படம் ஓடும்வரை தான் போஸ்டரா!

கையிலிருந்த துண்டுக் கடுதாசிகளை வீசிவிட்டு வெறும் கையை வீசிகொண்டு வீட்டை நோக்கி நடந்தான் முத்து.

—வீரகேசரி வார வெளியீடு 9-2-1975

MK Color Process, Madras-14
Phone : 848311
Design by P. N. Anandan